# பெரியார் பல்கலைக்கழகம்

NAAC 'A++' Grade with CGPA 3.61 (Cycle - 3)
State University - NIRF Rank 56 - State Public University Rank 25
Salem - 636011, Tamilnadu, India.

## தொலைநிலை மற்றும் இணையவழி கல்வி மையம்

## (CDOE)

### இளங்கலை இரண்டாமாண்டு

### நான்காம் பருவம்

# முதன்மைத்தாள் 8

# நன்னூல் - சொல்லதிகாரம்

# 24DUTA17

### 2024 ஆம் கல்வியாண்டுமுதல் பயிலும் மாணவர்களுக்குரிய பாடநூல்

**Prepared By:**

**Centre for Distance and Online Education (CDOE)**
**Periyar University, Salem – 11.**

# பாடத்திட்டம்

## முதன்மைத்தாள் - 8

## இலக்கணம் -2 நன்னூல் சொல்லதிகாரம் - 24DUTA17


| அலகு | பாடத்திட்டம் விளக்கம் | பக்கம் |
|---|---|---|
| அலகு – 1 | பெயரியல் | 5-43 |
| அலகு – 2 | வினையியல் | 44-59 |
| அலகு – 3 | பொதுவியல் | 60-85 |
| அலகு – 4 | இடையியல் | 86-93 |
| அலகு – 5 | உரியியல் | 94-99 |
| | முடிவுரை | 100 |
| | பார்வை நூல்கள் | 101 |

# பொருளடக்கம்

**அலகு - 1**

பெயரியல் - பெயர்ச் சொல்லின் இலக்கணத்தை உணர்த்தும் இயல் - கடவுள் வணக்கமும் - அதிகாரமும் - சொல்லின் பொது இலக்கணம் - மூவகை மொழிகள் - இருதிணை - ஐம்பால் - அ∴றிணைப் பால்கள் இரண்டு - திணை பால்களுக்குப் புறனடை - மூன்றிடத்தும் சொல் தன்னையும், பொருளையும் உணர்த்துதல் - தன்மை, முன்னிலைகள் இருதிணைக்கும் பொது - மூவிடங்கள் - இயல்பு வழக்கு - தகுதி வழக்கு - குறிப்பும், வெளிப்படையும் - சொல்லின் பாகுபாடு - சொல்லின் வகைகள் - இயற்சொல் - திரிசொல் - திசைச்சொல் - வடசொல் - பெயர்ச்சொல் - பெயரின் பொது இலக்கணம் - உயர்திணை ஆண்பால் பெயர் - உயர்திணை பெண்பாற் பெயர் - உயர்திணைப் பலர்பாற் பெயர் - அ∴றிணை ஒன்றன்பாற் பெயர் - அ∴றிணைப் பலவின்பாற் பெயர் - இருதிணைப் பொதுப்பெயர் - திணைப் பொதுப்பெயர், பால் பொதுவாதல் - தன்மை, முன்னிலைப் படர்க்கைப் பெயர்கள் - பன்னிரண்டு பொதுப் பெயர்கள் - எண்ணால் வரும் உயர்திணைப் பெயருக்குப் புறனடை - ஆகுபெயர்

**அலகு – 2**

வினையியல் - வினைச் சொல் - வினைச் சொற்களின் பகுப்பு - வினைமுற்று - இருதிணைப் பொதுவினை
வியங்கோள் வினைமுற்று - வினையெச்சம் - வினையெச்சத்தின் இலக்கணம்,
வினையெச்ச வாய்பாடுகள் - வினையெச்சங்களுக்கு முடிபு வேறுபாடு - ஒழிபு

**அலகு - 3**

பொதுவியல் - இயல் வைப்பு முறை - உயர்திணை - அ∴றிணை - எச்சங்களின் முடிபு - தொகைநிலைத் தொடர் மொழி - தொகை நிலைத் தொடர்கள் - தொகநிலைத் தொடர்மொழி - வழாநிலை வழுவமைதி - பொருள்கோள்

**அலகு – 4**

இடையியல் - இடைச்சொல்லின் பொதுவிலக்கணம் - ஏகார இடைச்சொல் - ஓகார இடைச்சொல் - என, என்று என்னும் இடைச்சொற்கள் - உம்மை இடைச்சொல் - எண்ணிடைச் சொற்களுக்குரிய இலக்கணம் - எல்லா இடத்தும் வரும் அசைச் சொல்

**அலகு – 5**

உரியியல் - உரிச்சொல்லின் பொது இலக்கணம் - உயிர்ப்பொருள் - ஓரறிவுயிர் - ஈரறிவுயிர் - மூவுறிவுயிர் - நாலறிவுயிர் - ஐயறிவுயிர் - உயிரல்லாத பொருள் - உயிர்ப்பொருள்களின் குணப்பண்பு - உயிரல் பொருள்களின் குணப்பண்பு - இருபொருள்களுக்கும் பொதுவான தொழிற்பண்பு ஒரு குணம் தழுவிய உரிச்சொல் - பல குணம் தழுவிய உரிச்சொல் - ஒரு குணம் தழுவிய உரிச்சொல்

# அலகு -1

# பெயரியல்

## பாட நோக்கம்

இலக்கண மரபுகளை அறிவித்தல். சொற்களை அதனதன் பொருளுக்கு ஏற்ப பெயர், வினை, இடை, உரியெனப் பிரிக்கக் கற்பித்தல். அவற்றில் பெயர்ச் சொல்லை விளக்குதல்.

## பெயர்ச் சொல்லின் இலக்கணத்தை உணர்த்தும் இயல்

## கடவுள் வணக்கமும் அதிகாரமும்

மூன்று உலகத்திற்கும் நிழலைச் செய்யும் நிறைமதி போன்ற மூன்று குடைகளை உடைய அழியாத அருகக்கடவுளின் அடிகளை வணங்கி எழுத்தினால் ஆகிய சொல்லின் இலக்கணத்தை உரைக்கிறார் பவணந்தி முனிவர்

**முச்சகம் நிழற்றும் முழுமதி முக்குடை**
**அச்சுதன் அடிதொழுது அறைகுவன் சொல்லேஜநூற்பா – 258]**

எனவரும் நூற்பா இதை உணர்த்துகிறது.

## சொல்லின் பொது இலக்கணம்

- சொல் ஒரு மொழி, தொடர்மொழி, பொதுமொழி என மூவகைப்படும்.
- உயர்திணை, அஃறிணை என்னும் இரு திணைகளையும், அவற்றுள் அடங்கிய ஆண்பால், பெண்பால், பலர்பால், ஒன்றன்பால், பலவின்பால் என்னும் ஐந்து பால்களையும் உணர்த்தும்.
- அவ் ஐம்பாற் பொருளையும், தன்னையும் உணர்த்தும்.
- மூவகை இடங்களிலும் வரும்.
- வழக்கிலும், செய்யுளிலும் வெளிப்படையாகவும், குறிப்பாகவும் பொருளை விளக்கும்.

**ஒருமொழி தொடர்மொழி பொதுமொழி என்றா**
**இருதிணை ஐம்பால் பொருளையும் தன்னையும்**
**மூவகை இடத்தும் வழக்கொடு செய்யுளின்**
**வெளிப்படை குறிப்பின் விரிப்பது சொல்லே. ஜநூற்பா – 259ஸ**

## மூவகை மொழிகள்

- ❖ மொழியானது ஒருமொழி, தொடர்மொழி, பொதுமொழி என்று மூன்று வகைப்படும்.
- ❖ ஒரு மொழிகள் என்பன பகாப்பதமோ, பகுபதமோ ஒன்று நின்று தம்பொருளை உணர்த்துவனவாகும்.
- ❖ பகுபதமோ, பகாப்பதமோ, தம்முள் தொடர்ந்து நின்று இரண்டு முதலிய பல பொருள்களை உணர்த்தினால் அவை தொடர்மொழிகள் எனப்படும்.
- ❖ ஒரு மொழியாக நின்று ஒரு பொருளைத் தந்தும், தொடர் மொழியாக நின்று பல பொருள்களைத் தந்தும். ஒரு மொழிக்கும், தொடர்மொழிக்கும் பொதுவாய் நிற்பவை பொதுமொழிகள் எனப்படும்.

**ஒருமொழி ஒருபொரு எனவாம் :தொடர்மொழி**

**பலபொரு என: பொது இருமையும் ஏற்பன. (நூற்பா -260)**

**(எ.கா)**

நிலம், நட - ஒரு மொழிகள்

நிலத்தைக்கடந்தான் - தொடர்மொழிகள்

எட்டு, தாமரை - பொதுமொழிகள்

(எட்டு–ஒருமொழி) (எள்து – தொடர்மொழி)

(எள்ளை உண்)

## இருதிணை

மக்களும் தேவரும், நரகரும் உயர்திணை.

- ❖ இவர்களை ஒழிந்த விலங்கு, பறவை முதலிய உயிர் உள்ளனவும் நிலம், நீர் முதலிய உயிர் இல்லாதனவும் அஃறிணையாகும்.
- ❖ இம் மூவகையோருடைய உடலையும், உயிரையும் வேறாகக் குறிக்கும் போது, அவையும் அஃறிணையாகும்.

**மக்கள் தேவர் நரகர் உயர்திணை,**

**மற்றுஉயிர் உள்ளவும் இல்லவும் அஃறிணை. ஐநூற்பா – 261ஸ**

**(எ.கா)** உடல் எரிந்தது உயிர் போனது (அ.்.றிணை)

திணை - சாதி என்று பொருள்படும்

உயர்திணை - உயர்வாகிய சாதி

அ.்.றிணை - உயர்சாதி அல்லாத சாதி

அல் + திணை - அ.்.றிணை

## ஐம்பால்

### உயர்திணைப் பால்கள் மூன்று

**ஆண் பெண் பலர்என முப்பாற்று உயர்திணை. ஐநூற்பா – 262ஸ**

- ❖ ஆண்பால், பெண்பால், பலர்பால் என்னும் மூன்று பால்களை உடையது உயர்திணை. ஆடவர், காளையர் - ஆண் பன்மை

பெண்டிர், மங்கையர் - பெண் பன்மை

அவர் முதலிய அவ்விருவர் பன்மையையும் அடக்குதல் - } பலர்பால்

## அ.்.றிணைப் பால்கள் இரண்டு

**ஒன்றே பலஎன்று இருபாற்று அ.்.றிணை. [நூற்பா – 263]**

ஒன்றன்பாலும், பலவின்பாலும் என இருபால்களை உடையது அ.்.றிணை.

அ.்.றிணையில் சேவல், களிறு, கடுவன் முதலிய ஆண்பாலும் பெடை, பிடி, மந்தி முதலிய பெண்பாலும் இருந்தாலும் உயிருள்ளவற்றில் புழு முதலிய சிலவற்றுக்கும், கல் முதலிய உயிரில்லாதவற்றுக்கும் இல்லாமையால் அப்பகுப்பை ஒழித்து எல்லாவற்றுக்கும் பொருந்த ‘ஒன்றன்பால்’ என்றார்.

### திணை பால்களுக்குப் புறனடை

பெண் தன்மை குறைந்து. ஆண்தன்மை மிகுந்திருப்பனவாகிய பேடுகள் உயர்திணை ஆண்பாலாகும்.

- ❖ ஆண்தன்மை குறைந்து பெண்தன்மை மிகுந்திருப்பனவாகிய பேடுகள் உயர்திணைப் பெண்பாலாகும்.
- ❖ இவ்விருவகைப் பேடுகளும் உயர்திணை ஆவதன்றி அ.்.றிணையை ஒத்தும் நடக்கும்.

பெண் தன்மை குறைந்து ஆண்தன்மை மிகுந்தால் அப்பிறவியை அலி என்பர். ஆண் தன்மை குறைந்து பெண் தன்மை மிகும் பிறவியைப் பேடி என்பர்.

ஆண்தன்மை மிகுந்திருந்தால் ஆண்பாலாகவும், பெண்தன்மை மிகுந்திருந்தால் பெண்பாலாகவும் வழங்க வேண்டும். பொதுவாகக் கூறவேண்டுமாயின் அஃறிணை போல் வினைமுடிவு கொடுக்க வேண்டும்.

**(எ.கா)** அலி வந்தான் - ஆண்பால்

பேடி அணியாளோ? - பெண்பால்

அலிவந்தது, பேடிவந்தது – அஃறிணை முடிவு. **ஜநூற்பா – 264ஸ**

**மூன்றிடத்தும் சொல் தன்னையும் பொருளையும் உணர்த்துதல்**

- படர்க்கையிடத்து வினைமுற்றுச் சொல்லையும், படர்க்கையிடத்துப் பெயர்ச் சொல்லையும் சொன்னால் இருதிணையும், ஐம்பாலும் பெறப்படும்.
- தன்மை, முன்னிலை ஆகிய இடங்களில் வைத்து வினைமுற்றுச் சொல்லையும், பெயர்ச்சொல்லையும் சொன்னால் இருதிணை ஐம்பால்களுள் ஒருமைப்பாலும், பன்மைப்பாலும் பெறப்படும்.

மூவிடங்களுள் படர்க்கை இடத்திற்கு மட்டுமே இருதிணை ஐம்பால் என்ற பிரிவு உண்டு. தன்மை , முன்னிலை இடங்களில் ஒருமை, பன்மை என்ற பிரிவுகள் உண்டே தவிர இருதிணை ஐம்பால் என்ற பிரிவு இல்லை.

## தன்மை முன்னிலைகள் இருதிணைக்கும் பொது

**(எ.கா)**

| **உயர்திணை** | **ஆண்பால்** | **பெண்பால்** | **பலர்பால்** |
|---|---|---|---|
| படர்க்கை வினைமுற்று | நடந்தான் | நடந்தாள் | நடந்தார் |
| படர்க்கைப் பெயர் | அவன் | அவள் | அவர் |

| **அஃறிணை** | **ஒன்றன்பால்** | **பலவின்பால்** |
|---|---|---|
| படர்க்கை வினைமுற்று | நடந்தது | நடந்தன |
| படர்க்கைப் பெயர் | அது | அவை |

**இவைகள் படர்க்கைச் சொற்கள், திணை, பால்களை உணர்த்தின.**

| இருதிணைப்பொது | ஒருமை | பன்மை |
|---|---|---|
| தன்மை வினைமுற்று | நடந்தேன் | நடந்தோம் |

| | | |
|---|---|---|
| தன்மைப் பெயர் | யான் | யாம் |
| முன்னிலை வினைமுற்று | நடந்தாய் | நடந்தீர் |
| முன்னிலைப் பெயர் | நீ | நீர் **ஐநூற்பா – 265ஸ** |

### மூவிடங்கள்

**தன்மை முன்னிலை படர்க்கைமூ விடனே. ஐநூற்பா – 266ஸ**

- தன்மை, முன்னிலை, படர்க்கை என்பன மூவிடங்கள் ஆகும்.

தன்மை - தன்னைக் குறிப்பது.

முன்னிலை - எதிரில் நிற்கும் பொருளைக் குறிப்பது.

படர்க்கை - இவ்விரண்டும் அல்லாமல் அயற் பொருளைக் குறிப்பது

**(எ.கா)** யான் - தன்மை

நீ - முன்னிலை

அவன்- படர்க்கை

### வழக்கு

**இலக்கணம் உடையது,இலக்கணப்போலி,**
**மரூஉஎன்று ஆகும் மூவகை இயல்பும்**
**இடக்கர் அடக்கல்,மங்கலம்,குழூஉக்குறி**
**எனும்முத் தகுதியோடு ஆறாம் வழக்கியல். ஐநூற்பா – 267ஸ**

இலக்கணமுடையது, இலக்கணப் போலி, மரூஉ என்று வழங்கும் மூவகை இயல்பு வழக்கும், இடக்கரடக்கல், மங்கலம், குழூஉக்குறி என்னும் மூவகைத் தகுதி வழக்கும் கூட வழக்கிலக்கணம் ஆறு வகைப்படும்.

### இயல்பு வழக்கு

1. இலக்கண முடையது - இலக்கண நெறியால் வருவது.
   (எ.கா) நிலம். நீர், தீ. காற்று, வானம்.

2. இலக்கணப் போலி - இலக்கணம் இல்லையாயினும் இலக்கணம் உடையது போலச் சான்றோரால் தொன்று தொட்டு வழங்கப்பட்டு வருவது.

**(எ.கா)**

இல்முன் - முன்றில்

நகர்ப்புறம் - புறநகர்

புறஉலா - உலாப்புறம்

கோவில் - கோயில்

என்றும் வழங்கும் இவை முதலியன இலக்கணப் போலி.

3. மரூஉ - தொன்று தொட்டு வருதலன்றி இடையில் சில எழுத்துக்கள் கெட்டும். சில எழுத்துக்கள் தோன்றியும், சில எழுத்துக்கள் திரிந்தும் இலக்கணத்தில் சிதைந்து தானே மருவி வழங்குவது.

| (எ.கா) | உரியது | மரூஉ |
|---|---|---|
| | சோழனாடு | - சோணாடு |
| | யாவர் | - ஆர் |
| | மரவடி | - மராடி |
| | அருமருந்தன்ன பிள்ளை | - அருமந்த பிள்ளை (சில எழுத்து எழுத்துக்கள் கெடுதல்) |
| | எவன் | - என் |
| | தஞ்சாவூர் | - தஞ்சை |

**தகுதி வழக்கு**

1. **இடக்கரடக்கல்**

நன்மக்களிடத்தில் சொல்லத்தகாத இடக்கான சொல்லை மறைத்துப் பிறவாற்றாற் சொல்லுதல்.

**(எ.கா)** மலங்கழுவி வந்தான் - கால்கழுவி வந்தான்.

2. **மங்கலம்**

மங்கலமல்லாத சொல்லை ஒழித்து மங்கலமான சொல்லால் கூறுவது.

**(எ.கா)** செத்தான் - துஞ்சினான்

சுடுகாடு - நன்காடு

3. **குழூஉக்குறி**

ஒரு கூட்டத்தார் ஏதாவது ஒரு காரணத்தால் ஒரு பொருளின் சொற்குறியை ஒழித்து வேறொரு சொல்லால் அப்பொருளைக் கூறுவது.

**(எ.கா)** பொன் - பறி - பொற்கொல்லர் சொல்லுவது.

கள் - சொல்விளம்பி - வேடர் சொல்லுவது.

**குறிப்பு:**

**இயல்பு வழக்கு**

எப்பொருட்கு எச்சொல் இயல்பில் அமைந்ததோ அச்சொல்லாலேயே அப்பொருளைக் கூறுதல் இயல்பு வழக்கு.

**தகுதி வழக்கு**

பொருள்குளுக்கு இயல்பாய் ஏற்பட்ட சொற்களை ஒழித்துத் தகுதியான வேறுசொற்களால் அப்பொருளைக் கூறுதல் தகுதி வழக்கு எனப்படும்.

**செய்யுள்**

**பல்வகைத் தாதுவின் உயிர்க்குஉடல் போல்பல**
**சொல்லால் பொருட்குஇடன் ஆக உணர்வினில்**
**வல்லோர் அணிபெறச் செய்வன செய்யுள். ஜநூற்பா – 268ஸ**

- ❖ தோல், இரத்தம், இறைச்சி, நிணம், எலும்பு, மச்சை, வெண்ணீர் என்னும் எழுவகைத் தாதுக்களினால் உயிர்க்கு இடமாக இயற்றப்பட்ட உடம்பு போல, இயற்சொல், திரிசொல், திசைச்சொல், வடசொல் என்னும் நால்வகைச் சொற்களாற் பொருளுக்கு இடமாகக் கல்வியறிவினால் செய்யுள் செய்ய வல்லவர் அலங்காரம் பெறச் செய்வன செய்யுள் ஆகும்
- ❖ எழுத்து, சொல், பொருள். அணி என்னும் நான்கினாலும் அமைவது செய்யுள்.

**(எ.கா)**

“ அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு ”

இக்குறள் வெண்பா கடவுள் வாழ்த்து என்னும் பொருளுக்கு இடமாகி எடுத்துக்காட்டு உவமையணியும் பிறவும் (நயமும்) உடையதாயிருக்கிறது.

**குறிப்பும் வெளிப்படையும்**

1. இருதிணை ஆண் பெண்ணுள் ஒன்றனை ஒழிக்கும் பொதுச் சொல்லும் 2. வலித்தல், மெலித்தல் முதலாகிய ஒன்பது வகை விகாரச் சொல்லும் 3. மூவகைத் தகுதி வழக்குச் சொல்லும் 4. ஆகுபெயர்ச்சொல்லும் 5. அன்மொழித் தொகைச் சொல்லும் 6. வினைக்குறிப்புச் சொல்லும் 7. முதற்குறிப்புச் சொல்லும் 8. தொகைக் குறிப்புச் சொல்லும் 9. இம்முதற்குறிப்பும், தொகைக் குறிப்பும் அல்லாது பலவழியாலும் வரும்

குறிப்புச் சொல்லும், இவை போல்வன பிறவும் குறிப்பினால் இருதிணை, ஐம்பாற் பொருள்களைத் தருஞ்சொற்கள் ஆகும். இவை அல்லாதனவெல்லாம் வெளிப்படையால் அப்பொருள்களைத் தருஞ் சொற்களாகும்.

1. **ஒன்றொழி பொதுச்சொல்**

**(எ.கா)** ஆயிர மக்கள் பொருதார் - இங்கே மக்கள் என்னும் பொதுப்பெயரும், பொருதார் என்னும் பொது வினையும், உயர்திணைப் பெண்பால் ஒழித்து ஆண்பாலைக் குறிப்பால் உணர்த்தின.

2. **விகாரம்**

**(எ.கா)** குநுற்தாட் பூதம், மரை மலர் - இவ்விகாரச் சொற்கள், குறுந்தாள், தாமரை என்பனவற்றைக் குறிப்பால் உணர்த்தின.

3. **தகுதி**

**(எ.கா)** கால்கழீஇ வருதும், திருமுகம் - இங்கே இத்தகுதி வழக்குச் சொற்கள் மலங்கழுவி வருதும், ஓலை என்பனவற்றைக் குறிப்பால் உணர்த்தின.

4. **ஆகுபெயர்**

**(எ.கா)** புளிதின்றான், கடுத்தின்றான் - இங்கே புளி, கடு என்னும் ஆகுபெயர்கள் அவற்றின் பழத்தை குறிப்பால் உணர்த்தின.

5. **அன்மொழித்தொகை**

**(எ.கா)** பொற்றொடி தந்த புனைமடல்
தேன்மொழி வந்தாள் } இங்கே பொற்றொடி, தேன்மொழி என்னும் அன்மொழி தொகைகள் அவற்றையுடைய மகளிரைக் குறிப்பால் உணர்த்தின.

6. **வினைக்குறிப்பு**

**(எ.கா)** இவன் இப்போது பொன்னன் - இங்கே பொன்னன் என்பது பெயர்ப்பொருளையொழித்து வினைக் குறிப்புப் பொருளை குறிப்பால் உணர்த்திற்று.

7. **முதற்குறிப்பு**

**(எ.கா)** "அறத்தா றிதுவென வெள்ளை கிழிபு" – அறத்தாறு இதுவென எனும் இம் முதற்குறிப்புச் சொற்கள் அறத்தாறிதுவென வேண்டா சிவிகை- பொறுத்தானோ டூர்ந்தானிடை " என்னும் பாட்டைக் குறிப்பால் உணர்த்தின.

**8. தொகைக்குறிப்பு**

**(எ.கா)** அலங்குளைப் புரவி ஐவரொடு சினைஇ - ஐவா் என்னும் தொகைக் குறிப்புச்சொல் பண்டவரைக் குறிப்பால் உணா்த்திற்று.

**9. பிற குறிப்பு**

**(எ.கா)** நன்கட்டாய், பாயாவேங்கை, உவா்கடலன்னச் செல்வா் — இவை முறையே நன்கு சமைக்கவில்லை வேங்கைமரம், ஈயாச் செல்வம் என்னும் பொருள்களைக் குறிப்பால் காட்டின.

1.இன்ன பிறவும் என்பதனால் தெரிநிலைவினை, குறிப்பு வினையாலணையும் பெயா்களும் 2. தெரிநிலை வினைமுற்றாலும், குறிப்பு வினைமுற்றாலும் வரும் எச்சங்களும் 3. செய்யும் என்னும் முற்றும் 4. கேட்குந போல முதலியவாக அ∴றிணை இடத்துச் சொல்லப்படுவனவும் ஆகிய இவை முதலானவை குறிப்பால் பொருளுணா்த்தும் சொற்கள் இவ்வாறு இல்லாமல் நிலம். நீா், தீ, காற்று, வானம் என வருவன வெளிப்படையால் பொருளுணா்த்தும் சொற்கள். **ஐநூற்பா – 269ஸ**

**சொல்லின் பாகுபாடு**

**சொல்லின் வகைகள்**

**அதுவே,**
**இயற்சொல்,திரிசொல்,இயற்பிற் பெயா்வினை**
**எனஇரண்டு ஆகும்,இடைஉரி அடுத்து**
**நான்கும் ஆம்,திசைவட சொல்அணு காவழி. ஐநூற்பா – 270ஸ**

- ❖ மேற்காட்டிய சொல் இயற்சொல்லும், திரிசொல்லும் என்னும் தன்மையையுடைய பெயா்ச்சொல்லும்,
- ❖ வினைச்சொல்லும் என்று இரண்டு வகைப்படும்.இவற்றுள் திசைச் சொல்லும், வடசொல்லும் சேராதவிடத்து இடைச்சொல்லும், உரிச்சொல்லும் சோ்ந்து நான்கு வகைப்படும்.
- ❖ இதனால் பெயா் இயற்சொல், பெயா்த்திரிசொல், இடைத்திரிச்சொல், உரியியற்சொல், உரித்திரிசொல் எனச் எட்டு வகைப்படும்.
- ❖ இவற்றுடன் திசைச்சொல், வடசொல் என்பனவற்றைச் கூட்டச் சொல் பத்துவகைப்படும்.

**இயற்சொல்**

**செந்தமி ழாகித் திரியாது யார்க்கும்**
**தம்பொருள் விளக்கும் தன்மைய இயற்சொல். ஐநூற்பா – 271ஸ**

❖ செந்தமிழ் நாட்டில் வழங்குஞ் சொல்லாகி, திரிசொல் போலாகாமல் படித்தவர்க்கு மாத்திரமேயன்றி, படிக்காதவர்க்கும் தமது பொருளைத் தெரிவிக்கின்ற தன்மையை உடைய உலக வழக்கச் சொற்களே இயற்சொற்களாகும்.

இயற்சொல் - இயல்பால் யாவருக்கும் பொருள் விளங்கும் சொல்,

**(எ.கா)** மண், பொன் - பெயரியற்சொல்

நடந்தான், வந்தான் - வினையியற்சொல்

அவனை, அவனால் - இடையியற்சொல்

அழகு, அன்பு - உரியியற்சொல்

**திரிசொல்**

❖ ஒரு பொருளைத் தெரிவிக்கின்ற பல சொற்களாகியும், பல பொருள்களைத் தெரிவிக்கின்ற ஒரே சொல்லாகியும் அருமையாகக் கற்றவர்களால் மாத்திரமே அறியப்படுகின்ற பொருளையுடையவை திரி சொற்களாகும்.

❖ திரிசொல் - இயற்சொல்லிலிருந்து திரிந்து வேறுபட்ட சொல்.

திரிதல் - வேறுபடுதல், வேறுபடுதல் என்பது இயற்சொல் போல இயல்பாக எளிதில் பொருள் உணரப்படாமல் அரிதில் பொருள் அறியப்படுதல்.

**(எ.கா)** கிள்ளை, தத்தை, சுகம் - இவை கிளி என்னும் ஒரு பொருள் குறித்த பல பெயர்த் திரிசொல்.

வாரணம் - இது யானையும், கோழியும், சங்கும் முதலாகிய பல பொருள் குறித்த ஒரு பெயர்த் திரி சொல்.

படர்ந்தான், சென்றான் - இவை போயினான் என்னும் ஒரு பொருள் குறித்த பல வினைத் திரிசொல்.

சேறும், வருதும் - இவற்றுள், றும், தும் என்னும் விகுதிகள், தன்மைப் பன்மை எதிர்காலம் என்னும் ஒரு பொருள் குறித்த பல இடைத் திரிசொல்.

கொல் - இது ஐயமும் அசை நிலையுமாகிய பல பொருள் குறித்த ஓரிடைத் திரிசொல்.

சால, உறு, தவ, நனி, கூர், கழி - இவை மிகுதி என்னும் ஒரு பொருள் குறித்த பல உரித் திரிசொல்.

கடி - இது காப்பு, கூர்மை, அச்சம், கரிப்பு, விளக்கம், சிறப்பு. மணம் முதலிய பல பொருள் குறித்த ஓர் உரித்திரிசொல். **ஐநூற்பா – 272ஸ**

**திசைச்சொல்**

- செந்தமிழ் நாட்டைச் சேர்ந்த பன்னிரண்டு நிலங்களிலும், பதினெட்டு மொழிகளுள் தமிழ் நிலம் ஒழிந்த பதினேழு நிலங்களிலும் உள்ளோர், தம் மொழிகளிலுள்ள பதங்கள் அப்பொருளோடு செந்தமிழில் வந்து வழங்குவன திசைச் சொற்களாம் என்று சொல்லுவர் புலவர்.
- திசைச்சொல் - திசை நாடுகளிலிருந்து செந்தமிழில் வந்து வழங்கும் சொற்கள்.
- கொடுந்தமிழ் நாடு பன்னிரண்டாவன
    - தென்பாண்டி நாடு, குட்டநாடு, குடநாடு, கற்காநாடு, வேணாடு, பூழிநாடு, பன்றிநாடு, அருவாநாடு, அருவாவடதலை நாடு, சீதநாடு, மலையமானாடு, சோழனாடு என்பன.
- தென்பாண்டி நாடு - செந்தமிழ்ப் பாண்டி நாட்டுக்குத் தென்திசையில் உள்ளது,

**(எ.கா)** 1. பசுவைப் பெற்றம் என்பதும், சோற்றைச் சொன்றி என்பதும் -தென்பாண்டி நாஉடுச்சொல்.
2. தாயைத் தள்ளை என்பது - குட்ட நாடுச் சொல்
3. தந்தையை அச்சன் என்பது - குடநாட்டார் சொல்
4. வஞ்சகரைக் கையர் என்பது - கற்கா நாட்டார் சொல்
5. தோட்டத்தைக் கிழார் என்ப - வேணாட்டுச் சொல்
6. சிறு குளத்தைக் பாழிஎன்பது - பூழி நாட்டுச் சொல்
7. வயலைச் செய்என்பதும்
சிறு குளத்தைக் கேணி என்பதும் } - அருவா நாட்டார் சொல்
8. புளியை எகின் என்பது - அருவாவட தலையார் சொல்
9. தோழனை எலுவன் என்பதும்,
தோழியை இருளை என்பதும் } - சீத நாட்டுச் சொல்
10. அந்தோ - சிங்களச் சொல்
11. மாமரத்தைக் கொக்கு என்பது - துளுவ நாட்டுச் சொல்
12. அகப்படுதலைச் சிக்குதல் என்பது - கன்னட நாட்டுச் சொல்
13. எருத்தைப் பாண்டில் என்பது - தெலுங்குச் சொல். **ஐநூற்பா – 273]**

**வடசொல்**

ஆரியத்திற்கும், தமிழிற்கும் பொதுவான எழுத்தாலும், ஆரியத்திற்கே உரியதான சிறப்பு எழுத்துத் திரிந்த எழுத்தாலும் இவ்விரண்டு எழுத்தாலும் செந்தமிழ்ச்சொல் போன்றனவாகி வடதிசையிலிருந்து செந்தமிழ் நிலத்தில் வந்து வழங்கும் சொல் வடசொல் ஆகும்.

**(எ.கா)** 1. அமலம், கமலம் - பொது எழுத்தால் வந்தன
2. சுகி, போகி, சுத்தி - ஆரியத்திற்குரிய சிறப்பு எழுத்தால் வந்தன.
3. அரண், அரி, சலம் - பொது எழுத்தாலும், சிறப்பு எழுத்தாலும் வந்தன. **ஐநூற்பா – 274]**

**பெயர்ச்சொல்**

**பெயரின் பொது இலக்கணம்**

- ❖ இடுகுறியும், காரணக்குறியும், மரபினையும், ஆக்கப்பாட்டினையும் தொடர்ந்து வினையாலணையும் பெயர் ஒன்று மட்டும் காலங்காட்டும் .
- ❖ அல்லாதன காலத்தைக் காட்டாதவையாய் எட்டு வேற்றுமைகளும் சார்வதற்கு இடமாகி இரு திணையிலும், ஐம்பாலிலும், மூவிடத்திலும் ஒன்றனை ஏற்பனவும், பலவற்றினை ஏற்பனவும் ஆகி வருவன பெயர்கள் ஆகும்.

**(எ.கா)** 1. மரம், விள, பனை - இடுகுறி மரபு.

2. அவன், அவள், விலங்கு, பறவை – காரணக்குறி மரபு.

3. “கானவேன்முட்டைக்கும் காடு – எனவரும் பொய்யாமொழிப் புலவரின் பாட்டில் முருகக் கடவுள் தன் பெயர் முட்டை என்றது இடுகுறி ஆக்கம்.

4. பொன்னன், பூணன் - காரணக்குறியாக்கம்

- ❖ நடந்தவனை, நடந்தானை - வினையாலணையும் காரணப் பெயர்கள் காலங் காட்டின.

- ❖ மரம், பனை முதலாகிய இடுகுறிப் பெயர்களும், அவன், அவள் முதலாகிய காரணப் பெயரும், தொன்றுதொட்டு மரபு பற்றி வருவன.

- ❖ முட்டை முதலாகிய இடுகுறிப் பெயரும், பொன்னன் முதலாகிய காரணப் பெயரும், மரபு போலத் தொன்று தொட்டு வருதலின்றி நடுவிலே ஒருவரால் ஆக்கப்பட்டு வருவன. **நூற்பா – 27**

**உயர்திணை ஆண்பால் பெயர்**

- ❖ முன் சூத்திரத்தில் பெயர் என்றவற்றுள் சுற்றம், எண், கூட்டம் முதலியனவாகிய பல பொருள்களையும்,
- ❖ ஐந்திணை, தேயம், ஊர், வான், அகம், புறம் முதலிய இடங்களையும்,
- ❖ ஆண்டு, பருவம், மாதம், நாள்மீன் என்ற காலப் பெயர்களையும்,
- ❖ தோள், மயிர், மார்பு, கண், காது முதலிய உறுப்புக்களையும்,
- ❖ அளவு, அறிவு, ஒப்பு, வடிவு, நிறம், நாற்கதி. சாதி, குடி. சிறப்பு முதலிய பெயர்களையும்,
- ❖ ஓதுதல், கொடுத்தல் முதலிய பல தொழில்களையும், இவற்றை அடைந்த சுட்டு, வினா, பிற, மற்று ஆகிய நான்கையும் பொருந்திய ‘ன்’ என்ற ஈற்றை உடைய பெயர்களும்,

❖ நம்பி, ஆடூஉ, விடலை, கோ, வேள், குரிசில், தோன்றல் என்ற பெயர்களும் இவை போன்ற பிறவும் உயர்திணை ஆண்பால் பெயர்கள் ஆகும் என்று சொல்லுவர்.

**1. பொருளாள் வரும் பெயர்கள்**

**(எ.கா)**

தமன், நமன், நுமன், எமன் - கிளையால் வரு பெயர்

ஒருவன் - எண்ணால் வரு பெயர்

அவையத்தான், அத்திகோசத்தான் - குழுவால் வரு பெயர்

பொருளன், பொன்னன், முடியன் - முதல் என்றதனால் வரு பெயர்.

**2. இடத்தால் வரும் பெயர்கள்**

**(எ.கா)** வெற்பன், பொருப்பன் - குறிஞ்சி நிலத்தால் வரு பெயர்

மறவன், எயினன் - பாலை நிலத்தால் வரு பெயர்

இடையன், ஆயன் - முல்லைத் திணையால் வரு பெயர்

ஊரன், மகிழ்நன் - மருத நிலத்தால் வரு பெயர்

சேர்ப்பன், துறைவன் - நெய்தல் நிலத்தால் வரு பெயர்

சோழியன், கொங்கன் - தேயத்தால் வரு பெயர்

கருவூரான், மதுரையான் - ஊரான் வரு பெயர்

வானத்தான், அகத்தான், புறத்தான் - வான் முதலிய மூன்றாலும் வரு பெயர்

மண்ணகத்தான், பாதலத்தான் - முதல் என்றதனால் வரு பெயர்

3. **காலத்தால் வரும் பெயர்கள்**

**(எ.கா)** மூவாட்டையான், பிரபவன் - ஆண்டால் வரும் பெயர்

வேனிலான், காரான் - பருவத்தால் வரு பெயர்

தையான், மாசியான் - மாதத்தால் வரும் பெயர்

ஆதிரையான், ஓணத்தான் - நாண் மீனால் வரும் பெயர்

நெருநலான், காலையான்- ‘ஆதி’ யென்றதனால் வரு பெயர்

**4. சினையால் வரும் பெயர்கள**

**(எ.கா)** திணிதோளன், செங்குஞ்சியன், வரைமார்பன்
செங்கண்ணன், குழைக்காதன் } தோள் முதலிய ஐந்துறுப்பாலும் வரும் பெயர்

குறுந்தாளன், நெடுங்கையன் - முதல் என்றதனால் வரும் பெயர்

5. **குணத்தால் வரும் பெயர்கள்**

**(எ.கா)** பெரியன், சிறியன் - அளவால் வரும் பெயர்
அறிஞன், புலவன் - அறிவால் வரும் பெயர்
பொன்னொப்பான்,மணியனையான் - ஒப்பால் வரும் பெயர்
கூனன், குறளன் - வடிவால் வரும் பெயர்
கரியன், செய்யன் - நிறத்தால் வரும் பெயர்
மானுடன், தேவர் - கதியால் வரும் பெயர்
அந்தணன், வேளாளன் - சாதியால் வரும் பெயர்
சேரன்,சோழன்,பாண்டியன்- குடியால் வரும் பெயர்
ஆசிரியன், படைத்தலைவன் - சிறப்பால் வரும் பெயர்
நல்லன், தீயன் - ‘ஆதி’யென்றதனால் வரும் பெயர்

6. **தொழிலால் வரும் பெயர்கள்**

ஓதுவான், ஈவான் - ஓதல் முதலாகிய இரண்டாலும் வரும் பெயர்
கணக்கன் தச்சன் - ‘ஆதி’யென்றதனால் வரும் பெயர்

7. **இடைச்சொல்லால் வரும் பெயர்கள்**

அவன், இவன். உவன் - சுட்டிடைச் சொல்லால் வரும் பெயர்
எவன், ஏவன், யாவன் - வினா இடைச் சொல்லால் வரும் பெயர்
பிறன், மற்றையான் - பிற மற்று என்பவற்றால் வரும் பெயர்

8. **நம்பி முதலாகிய ஏழு பெயர்களும் நூற்பாவில் உள்ளன**

இன்னன என்றதனால் வில்லி, வாளி, கிள்ளி, பாரி, சென்னி, ஏந்தல், செம்மல், ஏனாதி, காவிதி, குடுமி, அண்ணல் என உயர்திணை ஆண்பாற் பொருள் குறித்து வருவன எல்லாம் கொள்ள வேண்டும்.

**உயர்திணை பெண்பாற் பெயர்**

சுற்றம் முதலாகச் சொல்லப்பட்ட அறுவகைப் பொருள்களுள்ளும், ‘ள்’ என்ற மெய்யும், ‘இ’ என்ற உயிரும் பொருந்துவதற்கு ஏற்ற அவ்விரண்டு ஈற்றுப் பெயர்களும், தோழி, செவிலி, மகடூஉ, நங்கை, தையல் என்னும் பெயர்களும், இவை போல்வன பிறவும் உயர்திணைப் பெண்பால் பெயர்கள் ஆகும்.

1. **பொருளால் வரும் பெயர்கள்**

**(எ.கா)**

நமள், தமள், நுமள், எனமள் - கிளையால் வரும் பெயர்
ஒருத்தி - எண்ணால் வரும் பெயர்

அவையத்தாள், அவையத்தி - குழூஉவால் வரும் பெயர்
பொன்னாள், பொன்னி - முதல் என்றதனால் வரும் பெயர்

**2. இடத்தால் வரும் பெயர்கள்**

**(எ.கா)** குறத்தி - குறிஞ்சி நிலத்தால் வரும் பெயர்
எயிற்றி - பாலை ”
ஆய்ச்சி - முல்லை ”
உழத்தி - மருத ”
பரத்தி - நெய்தல் ”

மலையாட்டி, சோழிச்சி - தேயத்தால் வரு பெயர்
கருவூராள், கருவூரி - ஊரால் வரு பெயர்
வானத்தாள், வானத்தி - வான் முதலிய மூன்றாலும் வரும் பெயர்
அகத்தாள், அகத்தி, புறத்தாள், புறத்தி - அகம், புறம்
மண்ணகத்தாள், மண்ணகத்தி - முதல் என்றதனால் வருபெயர்.

**3. காலத்தால் வரும் பெயர்கள்**

மூவாட்டையாள் - ஆண்டால் வரு பெயர்
வேனிலாள் - பருவத்தால் வரு பெயர்
தையாள் - விண்மீனால் வரு பெயர்
நெருநலாள் - முதல் என்றதனால் வரு பெயர்

**4. சினையால் வரும் பெயர்கள்**

திணிதோளாள் - தோள்
சுரிகுழலாள் - கூந்தல்
நெடுமார்பாள் - மார்பு
தடங்கண்ணாள் - கண்
குழைக்காதாள் - காது
மூக்கி - முதல் என்றதனால் வரு பெயர்

**5. குணத்தால் வரு பெயர்கள்**

பெரியவள் - அளவால் வரு பெயர்
புலமையள் - அறிவால் ”
பொன்னொப்பாள்- ஒப்பால் ”

கூனள், கூனி - வடிவால் ”

கரியள் - நிறத்தால் ”

மானடத்தி - கதியால் ”

பார்ப்பினி - குலத்தால் ”

மனைத்தலைவி - சிறப்பால் ”

நல்லள் - முதல் என்றதனால் வரும் பெயர்

6. **தொழிலால் வரும் பெயர்கள்**

ஒதுவாள் - ஒதுவதால் வரு பெயர்
ஈவாள் - ஈகையால் ”

7. **இடைச்சொல்லால் வரும் பெயர்கள்**

அவள், இவள், உவள் - சுட்டிடைச் சொல்லால் வரும் பெயர்கள்

எவள், ஏவள், யாவள் - வினாவிடைச் சொல்லால் வரும் பெயர்கள்

பிறன், மற்றையாள் - பிற, மற்ற என்பவற்றால் வரும் பெயர்கள்

8. தோழி முதலிய ஐந்து பெயர்களும் நூற்பாவில் உள்ளன
(தோழி, செவிலி, மகடு, நங்கை, தையல்)

❖ இன்னன என்றதனால் பேதை, பெதும்பை, இகுளை, மடந்தை, மாது. பாங்கி, பெண்டு. பெண்டாட்டி என உயர்திணைப் பெண்பால் குறித்து வருவன அனைத்தையும் கொள்ளவேண்டும் **ஜநூற்பா – 277ஸ**

**உயர்திணைப் பலர்பாற் பெயர்**

முன் சூத்திரத்தில் கிளை முதலாகக் கூறப்பட்ட அறுவகைப் பொருள்களையும்.

**‘ர்’** என்ற மெய்யீற்றுப் பெயர்களும், ‘கள்’ என்னும் விகுதியை ஈறாக உடைய பெயர்கள் பலர்பாலுக்குப் பொருந்தி வருவனவும், இவை போல்வன பிறவும் உயர்திணைப் பலர்பாற் பெயர்கள் ஆகும்.

1. **பொருளால் வரும் பெயர்கள்**

**(எ.கா)** தமர், நமர் - கிளைப்பெயர்

இருவர், மூவர் - எண்ணால் வரு பெயர்

அவையத்தார் - குழூஉப் பெயர்

முடியர், பொருளர் - முதல என்பதால் வரு பெயர்

**2. இடத்தால் வரும் பெயர்கள்**

குறவர் - குறிஞ்சி நிலத்தால் வரு பெயர்
எயினர் - பாலை ”
ஆயர் - முல்லை ”
உழவர் - மருத ”
பரதவர் - நெய்தல் ”

சோணாட்டார் - தேய்த்தால் ”
கருவூரார் - ஊரால் ”

வானத்தார், அகத்தார், புறத்தர் - வான்முதலிய மூன்றாலும் வரு பெயர்
மண்ணகத்தார் - முதல என்றதனால் வரு பெயர்

**3. காலத்தால் வரும் பெயர்கள்**

மூவாண்டினர் - ஆண்டாள் வரு பெயர்
வேனிலார் - பருவத்தால் ”
ஐப்பசியார் - மாதத்தால் ”
ஆதிரையார் - நாள் மீனங் ”
காலையார் - முதல என்றதனால் வரு பெயர்

**4. சினையால் வரும் பெயர்கள்**

திணிதோளார் - தோளால் வரு பெயர்
சுரிகுழால் - குழலால் ”
நெடுமார்பர் - மார்பால் ”
தடங்கண்ணார் - கண்ணால் ”
குழைக்காதர் - காதால் ”
நெடுங்கையார் - முதல் என்றதலை வரு பெயர்

**5. குணத்தால் வரும் பெயர்கள்**

பெரியர் - அளவால் வரு பெயர்
அறிஞர் - அறிவால் ”
பொன்னொப்பர் - ஒப்பால் ”
கூனர் - வடிவால் ”

கரியர் - நிறத்தால் ”

மானிடர், தேவர் - கதியால் ”

அந்தணர் - சாதியால் ”

பாண்டியர் - குடியால் ”

தலைவர் - சிறப்பால் ”

நல்லர் - முதல என்றதனால் வருபெயர்

**6. தொழிலால் வரும் பெயர்கள்**

ஓதுவார், ஈவார் - ஓதல் முதலிய இரண்டினாலும் வருபெயர்

கொல்லர் - முதல என்றதனால் வரு பெயர்

**7. இடைச்சொல்லால் வரும் பெயர்கள்**

அவர், இவர் - சுட்டுப்பெயர்

எவர், யாவர் - வினாப்பெயர்

பிறர், மற்றையார் - பிற. மற்று என்பவற்றால் வரும் பெயர்கள்.

- ❖ கோக்கள், மனுக்கள் என்பன போல்வன பகுதிப் பொருள் விகுதியீற்றுப் பெயர்கள்.
- ❖ தமர்கள், நமர்கள் என்பன போல்வன விகுதி மேல் விகுதியீற்றுப் பெயர்கள்.
- ❖ ‘பிற’ என்றதனால் மாந்தர், மக்கள், மகார், சிறார், வேளிர் எனப் பலர்பாலைக் குறித்து வருவன அனைத்தையும் கொள்ள வேண்டும். **ஜநூற்பா – 277ஸ**

**அஃறிணை ஒன்றன்பாற் பெயர்**

- ❖ வினாவிலும் சுட்டிலும் மறைந்து அவற்றுடனாகியும், வினாவவும் சுட்டவும் படாது வேறாகியும் வரும் பொருள் முதலிய ஆறினையும் அடியாகக் கொண்டு தோன்றும் ‘து’ ‘வ்’ விகுதியீற்றுப் பெயரும்.
- ❖ சுட்டோடு கூடிய ஆய்த எழுத்தைப் பெற்றுவரும் ‘து’ ’வ்’ விகுதியீற்றுப் பெயரும்.
- ❖ ஒன்று என்னும் எண்ணாகு பெயரும் இவை போல்வன பிறவும் அஃறிணை ஒன்றன்பாற் பெயர்களாகும்

**(எ.கா)** எது, ஏது, யாது - வினாப்பெயர்

அது. இது, உது. - சுட்டுப்பெயர்

குழையது, நிலத்தது, மூலத்தது
கோட்டது, குறியது, ஆடலது } - பொருள் முதலிய ஆறின் அடியயாக பிறந்த துவ்விகுதி யீற்றுப் பெயர்கள்

அ∴து, இ∴து, உ∴து - சுட்டோடு கூடிய ஆய்தத்தைப் பொருந்திய துவ்விகுதி யீற்றுப் பெயர்கள்
ஒன்று - எண்ணாகு பெயர்

'இன்னன' என்றதனால் பிறிது. மற்றையது என அ∴றிணை ஒன்றன்பால் குறித்து வருவனவெல்லாம் கொள்ள வேண்டும். **நூற்பா – 279**

## அ∴றிணைப் பலவின்பாற் பெயர்

- வினாச் சுட்டுடனும், அவற்றின் வேறாகியும் வரும் பொருள் முதலிய ஆறனோடும் ஏற்றபடி வரும் 'வை' விகுதியீற்றுப் பெயர்களும்.
- வகர மெய்மை ஈறாக உடைய சுட்டுப் பெயர்களும், கள் என்னும் பகுதிப் பொருள் விகுதியீற்றுப் பெயர்களும்,
- இரண்டு முதலிய எண்ணாகு பெயர்களும்,
- உள்ள, இல்ல, பல்ல, சில்ல, உள, இல, பல, சில, என்னும் எட்டுக்குறிப்பு வினையாலணையும் பெயர்களும், இவை போல்வன பிறவும் அ∴றிணைப் பலவின்பாற் சொற்களாகும்.

(எ.கா) எவை, ஏவை, யாவை - 'வை' விகுதிபெற்ற வினாப்பெயர்கள்
அவை, இவை, உவை - 'வை' விகுதிபெற்ற சுட்டுப்பெயர்கள்
நெடியவை, கரியவை - வினாச்சுட்டின் வேறாகி வரும் 'வை' யீற்றுப் பெயர்கள்

பொருள, பொருளன
அகத்த, அகத்தன
மூலத்த, மூலத்தன
கோட்ட, கோட்டன
கரிய, கரியன
ஓதுவ, ஓதுவன
} - அன் சாரியை பெற்றும் பெறாதும் வந்த அகர விகுதிப் பெயர்கள்

அவ், இவ், உவ் - வகர மெய்யீற்றுச் சுட்டுப் பெயர்கள்
யானைகள், குதிரைகள் - கள் விகுதிப் பெயர்கள்
இரண்டு. மூன்று, பத்து, நூறு – எண்ணாகு பெயர்கள்.

- உள்ள, இல்ல, பல்ல, சில்ல, உள, இல, பல, சில, முதலிய எட்டுப் பெயர்களும் நூற்பாவில் உள்ளன.
- 'இன்னவும்' என்றதனால் யா,பிற, மற்றைய என அ∴றிணைப் பலவின்பாற் பொருள் குறித்து வருவன எல்லாம் கொள்ள வேண்டும்.
- இவ்வைம்பாற் பெயர்களுள் ஆண்பாற் பெயர்க்கு 'னவ்வீறு' எனவே. ஆன், அன், மன், மான், ன் என்னும் ஐந்தும் அடங்கும்.
- பெண்பாற் பெயர்க்கு 'ளவ்வொற்று' எனவே,'அள், ஆள். ள் என்னும் மூன்றும் அடங்கும்.

❖ பலர்பாற் பெயர்க்கு 'ரவ்வீற்ற' எனவே, அர், ஆர், மார், ர் என்னும் நான்கும் அடங்கும். **நூற்பா-280**

**பால்பகா அஃறிணைப் பெயர் ( அஃறிணை இருபாற் பொதுப்பெயர்)**

- ❖ அஃறிணைப் பெயர்களுள் ஒன்றன்பால், பலவின்பால் எனப் பகுக்க முடியாத பெயர்ச் சொற்கள், அத்திணையின் இரு பால்களுக்கும் பொதுவாகிய பெயர்களாகும்.
- ❖ பால்பகா அஃறிணைப் பெயராவது, இன்னபால் எனத் தொல்லோரால் பகுத்துக் கூறப் பெறாத (ஒன்றன்பால், பலவின்பால்) பொதுவான அஃறிணைப் பெயர்களாம்.

**(எ.கா)** பறவை வந்தது. பறவை வந்தன
மரம் வளர்ந்தது, மரம் வளர்ந்தன.

(இவை, பறவை, அலரி எனப் பகுபதமும் மரம், பணை எனப் பகாப்பதமுமாக வரும்) **நூற்பா – 281**

**இருதிணைப் பொதுப்பெயர்**

- ❖ முதற்பெயர்கள் நான்கும், சினைப்பெயர்கள் நான்கும், சினைமுதற் பெயர்கள் நான்கும், முறைப் பெயர்கள் இரண்டும், தன்மைப் பெயர் நான்கும், முன்னிலைப் பெயர் ஐந்தும், எல்லாம். தாம், தான் என்பனவும் இவை போல்வன பிறவும் இருதிணைக்கும் பொதுப் பெயர்களாம்.
- ❖ முதற் பெயராவது காரணம் கருதாமல் ஒரு பொருளைப் பற்றி வரும் பெயர் சினைப் பெயராவது உறுப்பின் காரணமாக வரும் பெயர்.
- ❖ சினைமுதற் பெயராவது உறுப்பைக் காரணமாகக் கொண்டும், உறுப்பை உடைய முதற் பொருளைக் கொண்டும், வழங்கும் பெயர்.
- ❖ முறைப் பெயராவது தந்தை, தாய், என்பன போல் முறை (உறவு) பற்றி வரும் பெயர்
- ❖ 'இன்னன' என்றதனால், சூரியன் உதித்தான், சூரியன் உதித்தது என ஒரு பொருளையே உயர்திணையாகவும், அஃறிணையாகவும் கூறும் பொதுப்பெயர் முதலியனவும், ஊமை வந்தான், ஊமை வந்தாள் என உயர்திணை இரு பாலையும் உணர்த்தும் பொதுப்பெயர்களும், தன்மை முன்னிலை வினையாலணையும் பெயர்களும் பிறவும் கொள்ளப்படும். **ஐநூற்பா – 282ஸ**

**முதற்பெயர் முதலிய நான்கையும் வகுத்தல்**

- ❖ ஆண்மை, பெண்மை, ஒருமை, பன்மை என்னும் நான்கு பாலும் காரணமாக அம்முதற்பெயர், சினைப்பெயர், சினை முதற்பெயர் என்னும் மூன்றும் ஒவ்வொன்றும் நந்நான்காகும்.
- ❖ ஆண்மை, பெண்மை என்னும் இருபாலும் காரணமாக முறைப்பெயர் இரண்டாகும்.

**1. முதற்பெயர் நான்கு**

**(எ.கா)** சாத்தன் - ஆண்மை முதற் பெயர்
சாத்தி - பெண்மை முதற் பெயர்
கோதை - ஒருமை முதற்பெயர்
கோதைகள் - பன்மை முதற்பெயர்

**2. சினைப் பெயர் நான்கு**

முடவன் - ஆண்மைச் சினைப் பெயர்
முடத்தி - பெண்மைச் சினைப் பெயர்
செவியிலி - ஒருமைச் சினைப் பெயர்
செவியிலிகள் - பன்மைச் சினைப் பெயர்

**3. சினை முதற் பெயர் நான்கு**

முடக்கொற்றன் - ஆண்மைச் சினைமுதற் பெயர்
முடக்கொற்றி - பெண்மைச் சினைமுதற் பெயர்
கொடும் புற மருதி - ஒருமைச் சினைமுதற் பெயர்
கொடும் புற மருதிகள் - பன்மைச் சினைமுதற் பெயர்

**4. முறைப் பெயர் இரண்டு**

தந்தை - ஆண்மை முறைப் பெயர்
தாய் - பெண்மை முறைப் பெயர் **ஐநூற்பா – 283ல**

**திணைப் பொதுப்பெயர், பால் பொதுவாதல்**

- ❖ முதற் பெயர் முதலாகச் சொல்லப்படும் இருபத்தாறும் பிறவுமாகிய பொதுப் பெயர்களுள், ஒவ்வொன்றே இரு திணையிலும், தன் தன் பாலகளை ஏற்றுவரும்
- ❖ ஆண்மைப் பொதுப் பெயர், உயர்திணை ஆண்பாலையும், அஃறிணைப் ஆண்பாலையும் ஏற்கும்.
- ❖ பெண்மைப் பொதுப் பெயர் உயர்திணைப் பெண்பாலையும், அஃறிணைப் பெண்பாலையும் ஏற்கும்.
- ❖ ஒருமைப் பொதுப்பெயர் உயர்திணை ஆண் ஒருமையையும், பெண் ஒருமையையும், அஃறிணை ஒருமையையும் ஏற்கும்.
- ❖ பன்மைப் பொதுப் பெயர் உயர்திணைப் பன்மையையும் அஃறிணைப் பன்மையையும் ஏற்கும்.

**1. முதற்பெயர் நான்கு**

**(எ.கா)** சாத்தனிவன், சாத்தனிவ்வெருது - சாத்தன் என்னும் ஆண்மை முதற்பெயர் இரு

திணை ஆண்பாற்கும் பொதுவாயிற்று.

சாத்தியிவள், சாத்தியிப்பசு - சாத்தி என்னும் பெண்மை முதற்பெயர் இருதிணைப் இருதிணைப் பெண்பாற்கும் பொதுவாயிற்று

கோதையிவன், கோதையிவள், கோதையிது - கோதை என்னும் ஒருமை முதற்பெயர் இருதிணை பன்மைக்கும் பொதுவாயிற்று.

2. **சினைப் பெயர் நான்கு**
   **(எ.கா)**

முடவனிவன், முடவனிவ்வெருது - முடவன் என்னும் ஆண்மைச் சினைப்பெயர் இருதிணையான்பாற்கும் பொதுவாயிற்று.

முடத்தியிவள், முடத்தியிப்பசு - முடத்தி என்னும் பெண்மைச் சினைப்பெயர் இருதிணைப் பெண் பாற்கும் பொதுவாயிற்று.

செவியிலியிவன், செவியிலியிவள் செவியிலியிது - செவியிலி என்னும் ஒருமைச் சினைப் பெயர் இருதிணை யொருமை மூன்றற்கும் பொதுவாயிற்று.

செவியிலிகளிவர், செவியிலிகளிவை - செவியிலிகள் என்னும் பன்மைச் சினைப் பெயர் இருதிணைப் பன்மைக்கும் பொதுவாயிற்று.

3. **சினைமுதற் பெயர் நான்கு**

முடக்கொற்றினிவன், முடக்கொற்றனிவ்வெருது - முடக்கொற்றன் என்னும் ஆண்மைச் சினைமுதற்பெயர் இருதிணைப்பாற்கும் பொதுவாயிற்று.

முடக்கொற்றியிவள், முடக்கொற்றியிப்பசு - முடக்கொற்றி என்னும் பெண்மைச் சினைமுதற்பெயர் இருதிணைப் பெண் -பாற்கும் பொதுவாயிற்று.

கொடும்புறமருதியிவன், கொடும்புறமருதியிவள் கொடும்புறமருதியிது - கொடும்புற மருதி என்னும் ஒருமைச் சினைமுதற்பெயர் இருதிணை பொருமை மூன்றற்கும் பொதுவாயிற்று.

கொடும்புறமருதிகளிவர், கொடும்புறமருதிகிளவை - கொடும்புற மருதிகள் என்னும் பன்மைச் சினைமுதற் பெயர் இருதிணைப் பன்மைக்கும் பொதுவாயிற்று.

4. **முறைப்பெயரிரண்டு**

தந்தையிவன், தந்தையிவ்வெருது - தந்தை என்னும் ஆண்மை முறைப்பெயர் இருதிணைப் யாண்பாற்கும் பெறுவாயிற்று.

தாயிவள், தாயிப்பசு - தாய் என்னும் பெண்மை முறைப்பெயர் இருதிணைப் பெண்பாற்கும் பொதுவாயிற்று.

**5. தன்மைப் பெயர் நான்கு**

யானம்பி, யானங்கை, யான்பூதம் - ‘யான்’ என்னுந் தன்மைப் பெயர் இருதிணையொருமை மூன்றற்கும் பொதுவாயிற்று.

- நான் என்பதோடும் இவ்வாறே இணைத்துக் கொள்ளலாம்.

யாம் மக்கள், யாம்பூதங்கள் - ‘யாம்’ என்னும் தன்மைப் பெயர் இருதிணைப் பன்மைக்கும் பொதுவாயிற்று,

- நாம் என்பதோடும் இவ்வாறே இணைத்துக் கொள்ளலாம்.

**6. முன்னிலைப் பெயர் ஐந்து**

நீ நம்பி, நீ நங்கை, நீ பூதம் - நீ யென்னும் முன்னிலைப் பெயர் இருதிணையொருமை மூன்றற்கும் பொதுவாயிற்று.

நீர் மக்கள், நீர் பூதங்கள் - நீரென்னும் முன்னிலைப் பெயர் இருதிணைப் பன்மைக்கும் பொதுவாயிற்று எல்லீர், நீயிர், நீவிர் என்பவற்றோடும் இவ்வாறே இணைத்துக் கொள்ளலாம்.

**7. எல்லாம், தாம், தான்**

அவரெல்லாம், அவையெல்லாம் - எல்லா மென்பது இருதிணைப் பன்மைக்குப் பொதுவாயிற்று.

அவர்தாம், அவைதாம் - தாமென்பது இருதிணைப் பன்மைக்கும் பொதுவாயிற்று.

அவன்றான், அவள்தான், அதுதான் -தானென்பது இருதிணையொருமை மூன்றற்கும் பொதுவாயிற்று. **ஐநூற்பா – 284ஸ**

**தன்மை முன்னிலைப் படர்க்கைப் பெயர்கள்**

**தன்மை யான் நான் யாம்,முன்னிலை**
**எல்லீர் நியிர் நீவிர் நீர்நீ**
**அல்லன படாடக்கை,எல்லாம் எனல்பொது. நூற்பா – 285**

- யான், நான், யாம், நாம் என்னும் நான்கும் தன்மைப் பெயர்களாகும்
- எல்லீர், நீயிர், நீவிர், நீர், நீ என்னும் ஐந்தும் முன்னிலைப் பெயர்களாகும்.
- இவ்வொன்பதும் அல்லாத பெயர்கள் படர்க்கைக்கு உரியனவாகும்.
- அவற்றுள் ‘எல்லாம்’ என்னும் பெயர் மட்டும் மூவிடத்திற்கும், உரியதாகும்.

**(எ.கா)** யாம் எல்லாம், நீர்எல்லாம்,
அவர் எல்லாம், அவையெல்லாம் } - ‘எல்லாம்’ என்னும் பொதுப் பெயர் மூவிடத்திலும் வந்தது.

**தொழிற்பெயர்க்கும், வினையாலணையும் பெயர்க்கும் இடம் வகுத்தல்**

**வினையின் பெயரே படர்க்கை,வினையா**
**லணையும் பெயரே யாண்டும் ஆகும். நூற்பா – 286**

- தொழிற் பெயர்கள் படர்க்கை இடம் ஒன்றிற்கே உரியன.
- வினையாலணையும் பெயர்கள் தனித்தனி மூவிடத்திற்கும் உரியன.
- வினைப்பெயரெனினும், தொழிற்பெயரெனினும் ஒக்கும்.

**(எ.கா)** உணல் நன்று, தினல் நன்று, வருகை நன்று.

இவற்றுள் தொழிற் பெயர்கள் படர்க்கை இடத்திற்கே உரிமையாய் வந்தன.

உண்டேனை, உண்டாமை, உண்டாயை, வினையாலணையும் பெயர்கள் மூன்றிடத்திலும் வந்தன.

**தொழிற்பெயர்க்கும் வினையாலணையும் பெயர்க்கும் உள்ள வேற்றுமை**

**தான் யான் நான் நீ ஒருமை,பன்மைதாம்**
**யாம் நாம் எலாம்எலீர் நீயிர்நீர் நீவிர். நூற்பா – 287**

- தொழிற் பெயர் தொழிலை உணர்த்தும் படர்க்கை இடததிற்கே உரியதாய் வரும்.
- வினையாலணையும் பெயர் தன் தொழிலை உடைய பொருளை உணர்த்தும், மூவிடங்களுக்கும் உரியதாய் வரும்.

**பன்னிரண்டு பொதுப் பெயர்கள்**

- தான், யான், நான், நீ என்னும் நான்கும் இருதிணை முக்கூற்று ஒருமைப் பெயர்களாம்.
- தாம், யாம், நாம், எலாம், எலீர், நீயிர், நீர், நீவிர் என்னும் எட்டும் இருதிணை இருவினைக்கூற்றுப் பன்மைப் பெயர்களாம்.
- இருதிணை முக்கூற்று ஒருமை என்றது உயர்திணை ஆண்பால், உயர்திணைப் பெண்பால், அஃறிணை ஒன்றன் பால்களையுமாகும்.
- இருதிணை இருகூற்றுப் பன்மை என்றது உயர்திணைப் பலர்பாலையும் அஃறிணைப் பலவின் பால்களையுமாகும்.

**எண்ணால் வரும் உயர்திணைப் பெயருக்குப் புறனடை**

- ஒன்று என்னும் எண்ணை அடிப்படையாகக் கொண்டு ஒருவன், ஒருத்தி என்ற பெயர்கள் தோன்றும்.
- ஒன்றுக்கும் மேற்பட்ட இரண்டு முதலிய எண்களின் அடியாக ஆண்பாற் பெயரும், பெண்பாற் பெயரும் தோன்றாது.
- ஒருவன், ஒருத்தி என்று வருவதைப் போல இருவன், இருத்தி, மூவன், மூத்தி, என ஆண்பால், பெண்பால் பெயர்கள் வராது.

- ஆனால் இருவர், மூவர் என வரும். **ஜநூற்பா – 288ஸ**

- ஒருவர் என்னும் சொல் உயர்திணை ஆண்பால், பெண்பால், என்ற இருபாற்கும் பொதுவாய் உயர்திணைப் பன்மை வாய்ப்பாட்டைக் கொண்டு முடியும்.

**(எ.கா)** ஆடவருள் ஒருவர் அறத்தின்வழி நிற்பார்.
பேண்டிருள் ஒருவர் கொழுநன் வழி நிற்பார்.

- இங்கே, ஒருவர் நிற்பான், நிற்பாள் எனப் பகுதிக்கேற்ப ஒருமைச் சொல்லைக் கொள்ளாது, ஒருவர் நிற்பார் என விகுதிக்கேற்பப் பன்மைச் சொல்லையே கொண்டு முடிந்துள்ளது.
- ஆயினும், பன்மைவினை என்றது சொல்லளவேயன்றிப் பொருள் அளவால் ஒருமை வினையே என உணர்த்தல் வேண்டும்.
- 'உரையிற் கோடல்' என்னும் உத்தியால், உயர்வு காரணமாக 'ஆர்' என்னும் இடைச்சொல்லை ஈற்றில் பெற்றுள்ள இருதிணைப் பொதுப் பெயரும், பால்பகா அ∴றிணைப் பெயரும், சிறுபான்மை உயர்திணைப் பெயரும் பன்மைச் சொல் கொண்டு முடியும்.

**(எ.கா)** சாத்தனார் வந்தார், முடவனார் வந்தார்
முடக்கொற்றார் வந்தார், தந்தையார் வந்தார்.

- இருதிணைப் பொதுப் பெயர்கள் பன்மைச் சொல் கொண்டு முடிந்தன.

நரியார் வந்தார் - பால்பகா அ∴றிணைப் பெயர், பன்மைச்சொல் கொண்டு முடிந்தது.

நம்பியார் வந்தார், நங்கையார் வந்தார், இறையனார் வந்தார் } - உயர்திணைப் பெயர்கள் பன்மைச் சொல் கொண்டு முடிந்தன.

**நூற்பா – 289**

## ஆகுபெயர்

**பொருள் முதல் ஆறோடு அளவைசொல் தானி**
**கருவி காரியம் கருத்தன் ஆதியுள்**
**ஒன்றன் பெயரான் அதற்குஇயை பிறிதைத்**
**தொன்முறை உரைப்பன ஆகு பெயரே. ஜநூற்பா – 290ஸ**

- பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் என்னும் ஆறுடன், எண்ணல், எடுத்தல், முகத்தல், நீட்டல் என்னும் நால்வகை அளவையும், சொல்லும் தானியும், காரணமும், காரியமும், கருத்தாவும் ஆகிய இவை முதலாக வரும் பொருள்களுள், ஒரு பொருளினது இயற்பெயர் அதனோடு தொடர்புடைய பிறிதொரு பொருளுக்குத் தொன்று தொட்டு ஆகிவருவது ஆகுபெயர் எனப்படும்.
- ஆக்க ஆகும் பெயர் ஆகுபெயர் என்கிறார் மயிலைநாதர்

1. **பொருளாகு பெயர்**

எ.கா) ***'தாமரை புரையுங் காமர் சேவடி'***

தாமரை என்னும் முதற்பொருளின் பெயர் அதன் சினைப் பொருளாகிய மலருக்கு ஆகி வந்தது.

2. **இடவாகு பெயர்**

***" அகனமர்ந்து செய்யா நெரையும்"***

அகம் என்னும் உள்ளிடப் பெயர் அங்கிருக்கின்ற மனத்திற்காயிற்று.

3. **காலவாகு பெயர்**

***"காரறுத்தது"***

கார் என்னும் மழைக்காலப் பெயர் அக்காலத்து விளையும் பயிருக்கு ஆயிற்று.

4. **சினைப்பாகு பெயர்**

***'வெற்றிலை நட்டான்'***

வெற்றிலை என்னுஞ் சினைப்பெயர் அதன் முதலாகிய கொடிக்கு ஆயிற்று

5. **குணவாகுபெயர்**

**'நீலஞ் சூடினாள்'**

நீலம் என்னும் நிறக் குணப்பெயர் அதனையுடைய குவளை மலருக்கு ஆயிற்று, குணவாகு பெயரைப் பண்பாகு பெயர் எனவும் வழங்குவர்.

6. **தொழிலாகு பெயர்**

***'வற்றலோ டுண்டான்'***

வற்றலென்னும் தொழிற்பெயர் அதனைப் பொருந்திய உணவுக்கு ஆயிற்று.

7. **எண்ணலாளவை ஆகுபெயர்**

***'காலாலே நடந்தான்'***

கால் என்னும் எண்ணலளவைப் பெயர் அவ் அளவைக் கொண்ட உறுப்பிற்கு ஆயிற்று.

8. **எடுத்தல் அளவை ஆகுபெயர்**

***'இரண்டு வீசை தந்தான்'***

வீசை என்னும் எடுத்தலளவைப் பெயர் அவ் அளவைக் கொண்ட பொருளுக்கு ஆயிற்று.

**9. முகத்தலளவை ஆகுபெயா**

***'நாழி யுடைந்தது'***

நாழி யென்னும் முகத்தலளவைப் பெயர் அவ்வளவை உடைய கருவிக்கு ஆயிற்று.

**10. நீட்டலளவை ஆகுபெயர்**

***'கீழைத்தடி விளைந்தது'***

தடி என்னும் நீட்டலளவைப் பெயர் அதனால் அளக்கப்பட்ட கழனிக்கு ஆயிற்று.

**11. சொல்லாகு பெயர்**

***'இந்நூற் குரை செய்தான்'***

உரை என்னும் சொல்லின் பெயர் அதன் பொருளுக்கு ஆயிற்று.

**12. தானியாகு பெயர்**

***'விளக்கு முறிந்தது'***

விளக்கு என்னும் தானியின் பெயர், அதன் தானமாகிய தண்டிற்கு ஆயிற்று.
தானம் - இடம், தானி-இடத்திலுள்ள பொருள்.

**13. கருவியாகு பெயர்**

***'திருவாசகம் பாடினான்'***

அடையடுத்த 'வாசகம்' என்னும் முதற் கருவியின் பெயர் அதன் காரியமாகிய ஒரு நூலிற்கு ஆயிற்று.
வாசகம் - கருவி, திரு – அடைமொழி

**14. காரிய ஆகுபெயர்**

***'இந்நூல் அணி'***

அணி என்னும் காரியத்தின் பெயர் அதனை உணர்த்துதற்குக் கருவியாகிய நூலிற்கு ஆயிற்று.

**15. கருத்தா ஆகுபெயர்**

***'திருவள்ளுவரைப் படி'***

திருவள்ளுவர் என்னும் கருத்தாவின் பெயர் அவரால் செய்யப்பட்ட நூலுக்கு ஆயிற்று.
இன்னும் இவ்வாகுபெயர், விடாத ஆகுபெயர், விட்டவாகு பெயர், இருமடியாகு பெயர், மும்மடியாகு பெயர், அடையடுத்த வாகு பெயர், இருபெயரொட்டாகு பெயர் எனவும் பெயர் பெற்று வழங்கும்.

**16. விடாத ஆகுபெயர்**

***'புளி தின்றான்'***

புளி என்பது, சுவையாகிய தன் பொருளை விடாது நின்று அதனின் வேறல்லாத கனியை உணர்த்துவதால் விடாத ஆகுபெயர் எனப்பட்டது.

**17. விட்ட வாகு பெயர்**

***'அவ்வூர் வந்தது'***

ஊர் என்பது. இடமாகிய தன் பொருளை விட்டுத் தன்னிடத்திலுள்ள மக்களை உணர்த்துவதால் விட்ட ஆகுபெயராயிற்று.

**18. இருமடி யாகுபெயர்:**

***'புளி முளைத்தது'***

புளி என்னும் சுவைப்பொருள் அதனை உடைய பழத்திற்கு ஆவதால் ஆகுபெயர், அப்பழத்தின் பெயர் மரத்திற்கு ஆவதால் இருமடியாகுபெயர் எனப்பட்டது.

**19. மும்மடியாகுபெயர்**

***'கார் அறுத்தது'***

கார் என்னும் நிறப்பெயர் அதனை உடைய மேகத்திற்கு ஆவதால் ஆகுபெயர் மேகத்தின் பெயர் அது பெய்யும் பருவத்திற்கு ஆவதால் இருடியாகுபெயர். அப்பருவத்தின் பெயர் அதில் விளையும் பயிருக்கு ஆவதால் மும்மபடியாகு பெயர் எனப்பட்டது.

**20. அடையடுத்த ஆகுபெயர்**

***'வெற்றிலை தட்டான்'***

வெறுமை என்ற அடைமொழியை அடுத்து வந்த இலை என்னம் சினைப்பெயர், அதன் கொடிக்கு ஆகி வந்தமையால் அடையடுத்த ஆகுபெயர் எனப்பட்டது.

**21. இருபெயரொட்டாகு பெயர்**

**'வகரக் கிளவி'**

- இச் சொற்றொடரில் வகரம், கிளவி என்னும் இருபெயர்கள் ஒட்டி நிற்க அவற்றுள் 'கிளவி' என்னும் ஒரு பெயர் மட்டும் ஆகுபெயராக நிற்றலால், இது இரு பெயரொட்டாகு பெயர் எனப்பட்டது.
- கிளவி என்பது சொல்லை உணர்த்தும்போது இயற்பெயர், சொல்லுக்குக் கருவியாகிய எழுத்தை உணர்த்தும் போது ஆகுபெயர்

- ❖ வகரம் கிளவி என்பது வகரமாகிய எழுத்து.
- ❖ ஆகுபெயரும், அன்மொழித் தொகையும் தம் பொருளை உணர்த்தாமல் வேறு பொருளை உணர்ததுவதால் ஒப்புமை உடையவையாயினும், அவற்றிடையே பல வேற்றுமைகள் உண்டு.

| ஆகுபெயர் | அன்மொழித் தொகை |
|---|---|
| ஒரு சொல்லாய் வரும். | இரண்டு முதலிய பல சொற்களால் வரும். |
| நியதிப் பெயராய் வரும். | செய்யுள் செய்யும் புலவன் ஒருவரை வியப்பு முதலிய காரணம் பற்றித் தன் கூற்றாகவேனும், பிறர் கூற்றாகவேனும் பாடுமிடத்து அங்காங்கே வரும். |
| முதல் சினை போன்றதொடர்பு பற்றப் பிறிது பொருள் உணர்த்ததும். | அத்தொடர்பு வேணடாது வேற்றுமைத் தொகை முதலாய ஐவகைத் தொகையாற்றலால் வேறு பொருள் உணர்த்தும். |
| தொன்று தொட்டு வரும். | புலவனால் புதிது புதிதாக அவ்வப்போது படைக்கப்படும். |

- ❖ இக் காரணங்களால் ஆகு பெயரும், அன்மொழித் தொகையும் ஒப்பாகாது எனலாம்.

**வேற்றுமை**

வேற்றுமை இன்னது என்பதும், இத்துணைய என்பதும்.

- ❖ தம்மை ஏற்றுக் கொள்வதற்குரிய எவ்வகைப்பட்ட பெயர்களுக்கும் இறுதியாய், அப்பெயர்ப் பொருளை வேற்றுமைப் படுத்துவன வேற்றுமை எனப்படும் அவை எட்டு வகைப்படும்.
- ❖ வேற்றுமை செய்தல் என்பது வேறு பொருளைத் தரும்படிச் செய்தல்.
- ❖ தன்னை ஏற்றுள்ள பெயரின் பொருளை வேற்றுமை செய்யும் உருபை வேற்றுமை என்றது காரியவாகு பெயர். **நூற்பா – 291**

**வேற்றுமையின் பெயரும் முறையும்**

- ❖ எட்டு வேற்றுமைகளின் பெயரும், முறையும் பின்வருமாறு.
  பெயர், ஐ, ஆல், கு, இன், அது, கண், விளி என்பன.
- ❖ விகாரப்பாடு அற்ற பெயரே முதல் வேற்றுமை ஆதலின் பெயரே என்றார் விளித்தற் பொருளை உடையதாதலின் எட்டாம் வேற்றுமையை விளி என்றார்.
- ❖ விளி என்பது படர்க்கையோரைத் தன் முகமாகத் தானழைப்பதாகும். **ஐநூற்பா – 292ஸ**

**முதல் வேற்றுமை மற்ற உருபுகளை ஏற்றல்**

- ❖ பெயரால் நிற்கும் அவ்வெழுவாய் உருபு, ஐ முதலிய ஆறு வேற்றுமை உருபுகளையும் ஏற்கும். **ஐநூற்பா – 293]**

**ஐ முதலிய உருபு ஏலாப் பெயர்கள்**

- ❖ நீயிர், நீவிர் என்னும் முன்னிலைப் பெயர்களும், நான் என்னும் தன்மைப் பெயரும் எழுவாய் அல்லாத மற்ற வேற்றுமைகளை ஏற்காது.

- ❖ எழுவாய் அல பெறாமையாவது உருபு ஏற்காமையும், விளி ஏற்காமையும் ஆகும். **ஐநூற்பா – 294]**

**பெயர் வேற்றுமை**

எட்டு வேற்றுமைகளுள் முதல் வேற்றுமையின் உருபாவது 'ஐ' முதலிய உருபுகளை ஏற்றுத் திரிதல் இல்லாத பெயராம்.

அதன் பயினிலையாவது, வினையையும், பெயரையும், வினாவையும் கொள்ள வருதலாம்.

எழுவாய் வேற்றுமைக்கு உருபு இல்லை, வினைபெயர் வினாக்களைக் கொண்டு அவற்றின் வினைமுதலாய் நிற்பதே அதன் பொருள்.

**(எ.கா)** சாத்தன் வந்தான், அவன் பெரியவன் - வினைகொண்டு முடிந்தன.

சாத்தன் இவன், ஆஒன்று - பெயர் கொண்டு முடிந்தன.

அவன்யார், ஆயாது - வினாக் கொள நின்றன.

வினைமுதல், செய்பவன், கருத்தா என்பன ஒரு பொருட் சொற்கள்.

எழுவாய் வேற்றுமை, முதல் வேற்றுமை, பெயர் வேற்றுமை என்பன ஒரு பொருட் சொற்கள்.

'உரையிற் கோடல்' என்னும் உத்தியால் இவ்வேற்றுமைக்குச் சிறுபான்மை ஆனவன், ஆகின்றவன், ஆவான், என்பவன் முதலிய ஐம்பாற் சொற்களும் சொல்லுருபுகளாக வரும்.

**(எ.கா)** சாத்தனானவன் வந்தான்
சாத்தியானவள் வந்தாள்
சாத்தரானவர் வந்தார்
யானையாவது வந்தது.
யானையானவை வந்தன.**நூற்பா – 295**

**இரண்டாம் வேற்றுமை**

- இரண்டாம் வேற்றுமையின் உருபு 'ஐ' ஒன்றுமேயாம், அதன் பொருள்களாவன.
- ஆக்கப்படுபொருள், அழிக்கப்படுபொருள், அடையப்படுபொருள், துறக்கப்படு பொருள், நீக்கப்படு பொருள், ஒக்கப்படு பொருள், உடைமைப் பொருள் முதலியனவாகும். **நூற்பா – 296**

**மூன்றாம் வேற்றுமை:-**

- ❖ மூன்றாம் வேற்றுமையின் உருபுகள் ஆல், ஆன், ஒடு, ஓடு, என்பன அவற்றின் பொருள் கருவிப் பொருள், வினைமுதற்பொருள், உடனிகழ்ச்சிப் பொருள் என்னும் மூன்றுமாம். **நூற்பா – 297**

**நான்காம் வேற்றுமை**

- நான்காம் வேற்றுமையின் உருபு ‘கு’ ஒன்றுமே ஆகும்.

**அதன் பொருள்கள்:-**

கொடை. பகை, நட்பு, தகுதி, அதுவாதல், பொருட்டு. முறை முதலிய பொருள் தோன்றப் புணரும் புணர்ச்சியில் ‘இதற்கு இது’ என்பது பட வருவனவாகும். **நூற்பா – 298**

**ஐந்தாம் வேற்றுமை**

- ஐந்தாம் வேற்றுமையின் உருபுகள் இல், இன் என்பன அவற்றின் பொருள் நீங்கல், ஒப்பு, எல்லை, ஏது என்னும் நான்குமாம்.

**(எ.கா)** மலையின் வீழருவி - நீக்கப் பொருள்
காக்கையின் காது களம்பழம் - ஒப்புப் பொருள்
மதுரையின் வடக்குச் சிதம்பரம் - எல்லைப்பொருள்
கல்வியிற் பெரியவர் கம்பர் - ஏதுப் பொருள் **நூற்பா – 299**

**ஆறாம் வேற்றுமை**

- ஆறாம் வேற்றுமையினது வருமொழியின் ஒருமைப் பொருண்மைக்கு அது. ஆது என்பன உருபுகளாகும்.
- பன்மையாகிய வருமொழியை உடைய ஆறாம் வேற்றுமைக்கு ‘அ’ என்பது உருபு ஆகும்.

**இதன் பொருளாவன**

- குணமும், தொழிலுமாகிய பண்பு, உறுப்பு, ஒரு பொருள் கூட்டம், பல பொருள் கூட்டம், ஒன்று திரிந்து மற்றொன்றாதல் என்னும் ஐந்து தற்கிழமைப் பொருள்களையும்,

அவையல்லாத பொருள் இடம் காலம் ஆகிய பிறிதின் கிழமைப் பொருள்களையும் உடையனவாக வருதலாம்.

- தற்கிழமை என்பது தன்னோடு ஒற்றுமையுடையது. பிறிதின் கிழமை என்பது தன்னின் வேறானது.

**தற்கிழமை**

**(எ.கா)** சாத்தனது கருமை - குணம்
சாத்தனது வரவு - தொழில்
சாத்தனது கை - உறுப்புத் தற்கிழமை
மாந்தரது தொகுதி - ஒன்றன் கூட்டத் தற்கிழமை

படைகளது தொகுதி - பலவின் கூட்டத் தற்கிழமை

நெல்லினது பொரி - ஒன்று திரிந்து ஒன்றாயதன் தற்கிழமை

**பிறிதின் கிழமை**

முருகனது வேல் - பொருட் பிறிதின் கிழமை

சாத்தனத வீடு - இடப் பிறிதின் கிழமை

சாத்தனது நாள் - காலப் பிறிதின் கிழமை

எனாது கை, நினாது தலை - ஆதுருபு

என் கைகள், தன தாள்கள் - அகரவுருபு **நூற்பா – 300**

**ஏழாம் வேற்றுமை**

- ஏழாம் வேற்றுமை உருபுகள் கண் முதலாகிய பலவாம்.

**இதன் பொருளாவது**

பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் என்னும் அறுவகைப் பெயர்களும் தற்கிழமை, பிறிதின் கிழமை என்னும் இரண்டிற்கும் இடமாக நிற்றலாம். எனவே, ஏழாம் வேற்றுமையின் பொருள் இடப்பொருள் எனலாம். **நூற்பா – 301**

**கண் முதலிய உருபுகள்**

- கண் முதல் இல் ஈறாகச் சொல்லப்பட்ட இருபத்தெட்டும் தம்மை ஏற்ற பெயர்ப் பொருளை இடப்பொருளாக வேற்றுமை செய்யும் ஏழன் உருபுகளாகும். **நூற்பா – 302**

**எட்டாம் வேற்றுமை**

- எட்டாம் வேற்றுமையின் உருபுகளாவன விளி அடைந்த பெயரின் ஈறுதிரிதல், கெடுதல், மிகுதல், இயல்பாதல், ஈற்றியல் எழுத்துத் திரிதல் என்பன.
- அதன் பொருள் படர்க்கைப் பெயர்ப் பொருளைத் தனக்கு எதிர் முகமான அழைக்கும் விளிப்பொருளாம்.
- விளித்தற்கு கருவியாகிய உருபை விள் என்றது காரியவாகு பெயர்.

**(எ.கா)** அன்னை- அன்னாய் - ஈறுதிரிதல்

அரசன் - அரச - ஈறுகுன்றல்

மகன் - மகனே - ஈறுமிகுதல்

நம்பி - தோழி - இயல்பாதல்

மக்கள் - மக்காள் - ஈற்று அயல்திரிதல்

அப்பன் - அப்பா - ஈறுகுன்றி ஈற்றயல் திரிதல்

அண்ணன் - அண்ணாவோ - ஈறுகுன்றி ஈற்றயல் திரிந்து ஈறு மிகுதல்

வேஎள், ஆஅய் எனச் சிறுபான்மை அளபெடுத்து வருவதும் உண்டு.

**விளிக்கப்படு பெயர்**

- இ, உ, ஊ, ஐ. ஓ என்னும் உயிர்களையும் ன, ள, ர. ல, ய என்னும் மெய்களையும் ஈற்றில் பெற்றுவரும் உயர்திணைப் பெயர்கள்.
- அவற்றுள் ஓ, ர என்னும் இரண்டும் தவிர்த்த மற்ற எட்டெழுத்துக்களுடன் ண, ஆ என்னும் இரண்டும் சேரப் பத்து எழுத்துக்களையும் ஈற்றில் உடைய இருதிணைப் பொதுப் பெயர்கள்.
- மொழிக்கு ஈற்றில் வரும் என்று சொல்லப்பட்ட இருபத்து நான்கு எழுத்துக்களுக்குள் ஞ, ந, எ அல்லாத மற்றை இருபத்தோரெழுத்துக்களையும் ஈற்றில் உடைய அஃறிணைப் பெயர்கள் ஆகியவை விளி ஏற்கும் பெயர்களாகும்.

**(எ.கா) உயர்திணைப் பெயர்கள்**

நம்பி, வேந்து, ஆடு, விடலை, கோ,
ஐயன், வேன், வணிகர், தோன்றல்,
சேய்

**இருதிணைப் பொதுப் பெயர்கள்**

சாத்தி, கூற்று, அழிதூ, தந்தை, சாத்தன்,
கடவுள், தூங்கல், தாய், ஆண், பிதா

**அஃறிணைப் பெயர்கள்**

மக, புறா, கிளி, தீ, முசு, பூ, சே, நாரை,
சோ, மண், கராம், அலவன், தாய், தகர்,
குயில், தெவ், பூழ், புள், வண்டு

**பொதுவாகிய விளி உருபு**

- உயர்திணை, பொது, அஃறிணை என்ற மூவகைப் பெயர்களிடத்தில் இயல்பாதல், 'ஏ' மிகுதல், இகரம் ஈகாரம் ஆதல் என்னும் இவை பெரும்பாலும் விளியுருபுகளாக வரும். **(நூற்பா – 305)**

**விளி உருபுக்குச் சிறப்பு விதி**

- ஐகாரத்தை இறுதியாக உடைய பொதுப் பெயர்க்கு இயல்பாதலும், ஏ மிகுதலும், அன்றி ஐகாரம் 'ஆய்' எனத் திரிதலும் 'ஆ' எனத் திரிதலும் உருபாம்.
- உயர்திணை, அஃறிணைப் பெயர்களுக்கு அவ்விரண்டு உருபுகளே அன்றி ஐகாரம் 'ஆ' எனத் திரிதலும் உருபாம்.

**(எ.கா)** அன்னை – அன்னாய், அன்னா – பொதுப்பெயர்க்கு ஆயும், ஆவும் வந்தன.
விடலை - விடலாய்
நாரை - நாராய்

- உயர்திணைப் பெயர்க்கும், அஃறிணைப் பெயர்க்கும் 'ஆய்'' வந்தது.

❖ உரையிற் கோடலால் 'அன்னே யன்னை யல்லாமல் இனியாரை நினைக்கேனே' எனப் பொதுப்பெயர்க்கு ஐகாரம் ஏகாரமாகத் திரிதலையும் கொள்ள வேண்டும். **(நூற்பா – 306)**

**னகர இறுதி உயர்திணைப் பெயர்**
**விளியேற்கும் முறை**

❖ பொதுவிதியின் படி வருதலேயன்றி னகர மெய்மை ஈறாகவுடைய சில உயர்திணைப் பெயர்கள் அளபெடுக்கும், சில ஈறுகெடும், சில ஈற்றயல் நீளும்.

❖ சில ஈற்றயல் நீண்டு ஈறு கொடும் சில ஈறுகெட்டு ஈற்றயல் நீண்டு ஓகாரம் மிகும், சில ஈறு கெட்டு ஓகாரம் மிகும்

❖ சில இறுதி கைர மெய் யகர மெய் ஆகும். சில ஈற்று னகரமெய் யகர மெய்யாகத் திரிந்து, அயலில் உள்ள ஆகாரம் ஓகாரமாகி 'ஏ' மிகும் சில ஈறுகெட்டு அயலில் உள்ள அகரம் ஏகாரமாகும் இவை விளியுருபுகளாகும். **(நூற்பா – 307)**

**ளகர இறுதிப் பெயர் விளியேற்கும் முறை**

❖ பொதுவிதியின்றி, ளகர மெய்யை இறுதியாக உடைய உயர்திணைப் பெயர்களுள் சில அளபெடுக்கும்: சில ஈறு கெடும், சில ஈற்று அயல் நீளும்: சில இறுதி ளவ்வொற்று ய்வவொற்று ஆகும். சில ஈற்றயல் அகரம் ஏகாரமாகும் இவை விளியுருபுகளாகும்.

**(எ.கா)** விளித்தனு என்பது விளியுருபு.

வேள் - வேஎள் - அளபெடுத்தது
எல்லாம் - எல்லா - ஈறுகெட்டது
மக்கள் - மக்காள் - ஈற்றயல் நீண்டது
குறையாள் - குழையாய் - ளவ்வொற்று யவ் வொற்றாயிற்று.
அடிகள் - அடிகேள் - ஈற்றயலகரம் ஏகார மாயிற்று **(நூற்பா – 308)**

**ரகர ஈற்றுப் பெயர் விளியேற்கும் முறை**

❖ பொதுவிதியன்றி ரகர மெய் ஈற்று உயர்திணைப் பெயர்களுள் சில அளபெடுக்கும்: சில ஈற்றயல் அகரம் இகரமாகவும் ஈகாரமாகவும் திரியும்.

❖ சில ஈற்றயல் ஆகாரம் ஈகாரமாகும், சில அதனுடன் ஏகாரமேற்கும், சில ஈற்றில் ஏகாரம் மிகுந்து 'யா' கெட்டு அதன் அயல் இகரம் ஈகாரமாகும். சில ஈற்றில் ஈர் ஆகும்.

**(எ.கா)** சிறார் - சிறாஅர் - அளபெடுத்தது.

தெவ்வர் - தெவ்விர் - ஈற்றயல் அகரம் இகரம் ஆயிற்று
நாய்கர் - நாய்கீர் - ஈற்றயல் அகரம் ஈகாரமாய் ஆயிற்று.
சான்றார் - சான்றீர் - ஈற்றயல் ஆகாரம் ஈகாரமாய் ஆயிற்று.

கணியார் - கணியீரே - ஈற்றயல் ஆகாரம் ஈகாரமாய் ஏகாரம் மிக்கது.

நம்பியார் - நம்பீரே - ஈற்றயல் ஏகாரம் மிக்கு, அயல் 'யா'க் கெட்டு அதனயல் இகரம் ஈகாரம் ஆயிற்று

எமர் - எமரீர் - ஈர் ஏற்றது. **(நூற்பா – 309)**

**லகர யகர ஈற்றுப் பெயர்கள்**

**விளியேற்கும் முறை**

- பொது விதியன்றி, லகர மெய்யீற்று உயர்திணைப் பெயர்களுள் சில அளபெடுக்கும், சில ஈற்றயல் நீளும்.
- யகர ஈற்று உயர்திணைப் பெயர்கள் அளபெடுக்கும்

**(எ.கா)**

மால் - மாஅல் - லகரவீறு அளபெடுத்தல்

தோன்றல – தோன்றால் - லகரவீறு ஈற்றயல் நீளல்

சேய் - சேஎய் - யகரவீறு அளபெடுத்தல் **(நூற்பா – 310)**

**னகர இறுதி அஃறிணைப் பொதுப்பெயர்**

- பொதுவிதியன்றிச் சில னகர மெய்யீற்று அஃறிணைப் பெயர்களும் சில பொதுப் பெயர்களும் ஈறுகெடும் சில ஈறு கெட்டு ஈற்றயல் நீளும் இவையும் விளி உருபுகளாம்.

**(எ.கா)**

1. **அஃறிணைப்பெயர்**

அலவன் - அலவ - ஈறுகெட்டது.
கலுழன் - கலுழா - ஈறுகெட்டு ஈற்றயல் நீண்டது.

2. **பொதுப் பெயர்**

சாத்தன் - சாத்த - ஈறுகெட்டது
கொற்றன் - கொற்றா - ஈறுகெட்டு ஈற்றயல் நீணடது. **(நூற்பா – 311)**

**லகர, ளகர ஈற்று அஃறிணைப் பெயரும் பொதுப் பெயரும்**

- லகர, ளகர, ஈற்று அஃறிணைப் பெயர்க்கும், பொதுப்பெயர்க்கும் பொது விதியேயன்றி ஈற்று அயல் எழுத்து நீளுதலும் விளி உருபாம்.

1. **அஃறிணைப் பெயர்**

(எ.கா) முயல் - முயால் - ஈற்றயல் நீளல்

2. பொதுப் பெயர்

மக்கள் - மக்காள் - ஈற்றயல் நீளல் **(நூற்பா – 312)**

**விளி உருபுகளுக்குப் புறனடை**

- ❖ முன் சொல்லப்பட்ட விளி உருபுகளுள் அண்மை விளிக்கு இயல்பும், ஈறுகெடுதலும் உருபாக வரும். சேய்மை விளிக்கண் அளபெடுத்தலும், புலம்பலுக்கு ஓகாரம் மிகுதலும் விளியுருபாக வரும்.
- ❖ மற்றை விளியுருபுகள் இம் மூன்றிடத்தும் கலந்து வரும்

**(எ.கா)** தம்பி, அரச - அண்மை விளி

மாஅல், சேஅய் - சேய்மை விளி

அய்யாவோ - புலம்பல் விளி **(நூற்பா – 313)**

**விளி உருபு ஏலாப் பெயர்கள்**

- ❖ நுவ்வுடன் மூன்று முதல் வினா எழுத்துக்களையும், மூன்று சுட்டெழுத்துக்களையும் முறையே பொருந்திய ன,ள,ர என்னும் மூன்றீற்று உயர்திணைப் பெயர்களும்,

வை, து என்னும் இரண்டு ஈற்றினை உடைய அ∴றிணைப் பெயர்களும், தான் என்னும் பொதுப்பெயரும், இவை போல்வன பிறவும் விளி ஏலாப் பெயர்களாம்.

**(எ.கா)** நுமன், நுமள், நுமர் - கிளைப் பெயர்

எவன், எவள், எவர், எவை,
எது, யாவன், யாவள், யாவர்,
யாவை, யாது, ஏவன், ஏவள்
ஏவர், ஏவை, ஏது } - வினாப்பெயர்

அவன், அவள், அவர், அவை, அது
இவன், இவள், இவர், இசை, இது,
உவன், உவள், உவர், உவை, உது } - சுட்டுப் பெயர்

தான் - பொதுப்பெயர்

இன்னை என்றதனால், மற்றையான், பிறன், எல்லாம் முதலியனவும் கொள்ள வேண்டும். **(நூற்பா – 314)**

**முதல் சினைத் தொடர்பின் கண் அவ்விரண்டிலும்**
**இரண்டனுருபு வாராது எனல்**

- ❖ முதலையும் சினையையும் சேர்த்துக் கூறுமிடத்து முதலினை ‘ஐ’ யுருபு பொருந்தினால், சினையினைக் கண்ணுருபு பொருந்தும்.
- ❖ முதற் பொருளுக்கு ‘அது’ உருபு வந்தால், சினைக்கு ‘ஐ’ உருபு வரும்.

இரட்டுற மொழிதலால் ‘அது’ என்பதற்கு ‘அக்கண்ணுருபு’ எனப் பொருள் கூறினும் அமையும்.

(எ.கா) யாணையைக் காலின் கண் வெட்டினான்

யானையது காலை வெட்டினான்

யானையின் கண் காலை வெட்டினான். **(நூற்பா – 315)**

**முதல் சினைகளின் ஒற்றுமையும் மேற்சூத்திரப் பொருளோடு இப்பொருளைப் பிண்டப்பொருளுக்கு ஏற்பித்தலும்**

- ❖ 'இவை முதற் பெயர்கள்' 'இவை சினைப்பெயர்கள்' எனக் கூறுமாறு வெவ்வேறு இல்லை. அவை ஒரு பொருளையே அவ்வாறு இரண்டாகப் பகுத்துக் கூறுவோரின் குறிப்பில் பொருந்தியனவாம்.

பிண்டப் பொருளும் அத்தன்மையை உடையதாம் **(நூற்பா – 316)**

**உருபு மயக்கம்**

**யாதன் உருபின் கூற்று ஆயினும்**
**பொருள்செல் மருங்கின் வேற்றுமை சாரும். (நூற்பா – 317)**

- ❖ ஒரு வேற்றுமைப் பொருள் மற்றொரு வேற்றுமை உருபில் சொல்லப்பட்டதாயினும், அதன் பொருள் சென்ற வழியே அவ்வுருபும் சேரும்.

**சில வேற்றுமை உருபுகள் செய்யுளிடத்துத் திரிந்து வருதல்**

- ❖ ஐ, ஆன, கு என்னும் மூன்று வேற்றுமை உருபுகளும் செய்யுளில் சில விடங்களில் அகரமாகத் திரிந்தும் வரும்.

அ.்.றிணையில் ஐயுருபும் குவ்வுருபும் அகரமாகத் திரியாது. **(நூற்பா – 318)**

**எட்டு வேற்றுமைக்கும் முடிக்கும் சொல்**

- ❖ எல்லைப் பொருளில் வரும் 'இன்' என்னும் ஐந்தாம் வேற்றுமை உருபும். 'அது' என்னும் ஆறாம் வேற்றுமை உருபும் பெயரைக் கொண்டு முடியும்.
- ❖ ஒழிந்த எழுவாய் முதலிய வேற்றுமைகள் அனைத்தும் வினைச் சொல்லைக் கொண்டு முடியும்.
- ❖ நான்காம் வேற்றுமையும், ஏழாம் வேற்றுமையும் பெரும்பாலும் வினையைக் கொண்டு முடிதலேயன்றி, வினையோடு பொருந்தும் பெயரையும் கொண்டு முடியும். **(நூற்பா – 319)**

**தொகுப்புரை**

சொற்களின் பொது இலக்கணம் எடுத்துரைக்கப்படுகின்றது. மூவகையான மொழிகள் இருதிணைகள், ஐம்பால்களுக்கு விளக்கம் கொடுக்கப்படுகின்றன. மூன்று இடங்களும் இரு வழக்குகளும் சொல்லின் வகைகளும் இடம்பெறுகின்றன. பெயர், வினை இடை, உரி என்பது மட்டுமின்றி இயற்சொல், திரிசொல், திசைச்சொல், வடசொல் என்று வகைப்பிரித்தறியப்படு கின்றன. ஐம்பாலில் இடம்பெறும் பெயர்ச்சொற்கள் பற்றிச் சான்றளிக்கப் பட்டுள்ளன. மூவிடப்பெயர்கள் தொழிற்பெயர்கள், வினையாலணையும் பெயர்கள், ஆகுபெயர் போன்றவை சுட்டப்படுகின்றன. வேற்றுமையின் பெயரும் முறையும் விளக்கப்பட்டுள்ளது. இவ்வாறு பெயரியலில் பல்வேறு பெயர் சொற்கள் பற்றிய கருத்துகள் விவரித்துரைக்கப்பட்டுள்ளன.

## பயிற்சி வினாக்கள்

**சிறு வினாக்கள்:**

1. சொல்லதிகாரம் விளக்குக.
2. சொல்லதிகாரத்தில் எத்தனை இயல்கள் உள்ளன. அவை யாவை?
3. பெயரியல் - விளக்குக.
4. சொல்லின் மூவகை யாது?
5. ஒருமொழி விளக்குக. எ.கா தருக.
6. தொடர்மொழி விளக்கு. எ.கா தருக.
7. பொதுமொழி விளக்கு. எ.கா தருக.
8. இருதிணைகள் யாது?
9. ஐம்பால்கள் எவை
10. மூவிடம் விளக்குக.
11. வழக்கு என்றால் என்ன? அதன் வகைகளை கூறுக.
12. இயல்பு வழக்கு – விளக்குக.
13. மரூஉ - வரையறு
14. குழூஉக்குறி குறித்தெழுதுக
15. செய்யுள் விளக்குக.
16. ஒன்றொழி பொதுச்சொல்
17. இயற்சொல் - விளக்குக.
18. திரிசொல் - விளக்குக.
19. திசைச்சொல் என்றால் என்ன?
20. பெயர்ச்சொல் என்றால் என்ன? எ.கா. தருக.
21. உயர்திணை பெண்பாற் பெயர் விளக்குக.
22. பால்பகா அ∴றிணைப் பெயர் விளக்குக.
23. தன்மை, முன்னிலைப் படர்கைப் பெயர்கள் எ.கா. தந்து விளக்குக.
24. ஆகுபெயர் என்றால் என்ன? அவை எத்தனை வகைப்படும்
25. இடவாகு பெயர் எடுத்துக்காட்டுடன் விளக்குக.
26. ‘வற்றலோடு உண்டான் இதில் எவ்வகை ஆகுபெயர் பயின்று வருகிறது விளக்குக.
27. அடையடுத்து ஆகுபெயர் விளக்குக
28. ஆகுபெயருக்கும், அன்மொழித் தொகைக்கும் உள்ள வேற்றுமைகள் யாவை?
29. வேற்றுமைகள் எத்தனை வகைப்படும்
30. வேற்றுமை உருபுகளைத் தருக.
31. இரண்டாம் வேற்றுமையை எ.கா. விளக்கம் தருக.
32. விளி வேற்றுமை என்றழைக்கப்பவடுவது எது.
33. லகர, யகர ஈற்றுப் பெயர்கள் விளியேற்கும் முறை குறித்தெழுதுக.
34. விளி உருபு ஏலாப் பெயர்கள் குறித்தெழுதுக.
35. உருபு மயக்கம் விளக்குக.

**குறு வினாக்கள்**

1. மூவகை மொழிகள் குறித்தெழுதுக.
2. இருதிணை, ஐம்பால் குறித்தெழுதுக.
3. வழக்கின் வகையை விரித்து கூறுக.
4. திசைச்சொல் குறித்து விளக்குக.
5. உயர்திணை பெண்பாற்பெயர் விளக்குக.
6. அ∴றிணைப் பெயர்குறித்து விளக்குக.
7. எண்ணால் வரும் உயர்திணைப் பெயர் குறித்தெழுதுக.
8. ஆகுபெயர் விளக்குக.
9. 2,3,4 ஆம் வேற்றுமை குறித்து எழுது.
10. னகர இறுதி உயர்திணை, அ∴றிணைப் பொதுப் பெயர் குறித்தெழுதுக.

**நெடு வினாக்கள்**

1. சொல்லின் பொது இலக்கணத்தைக் கூறுக.
2. சொல்லின் வகைகள் குறித்துக் கட்டுரை வரைக.
3. பெயர்ச்சொல் விளக்கி வரைக.
4. ஆகுபெயர் குறித்துக் கட்டுரை வரைக.
5. வேற்றுமையின் வகை குறித்து விளக்கமாக கட்டுரைக்க.

## அலகு – 2

## வினையியல்

**பாட நோக்கம்**

வினைச் சொற்களின் பயன்பாட்டை உணர்த்துதல். அதன் தன்மைகளை வெளிப்படுத்துதல்.

**வினைச் சொல்**

**தெரிநிலை வினைச்சொல்லின் பொதுவிலக்கணம்:-**

**செய்பவன் கருவி நிலம்செயல் காலம்**

**செய்பொருள் ஆறும் தருவது வினையே. (நூற்பா – 320)**

- வினைமுதல், கருவி, இடம், செயல், காலம், செயப்படுபொருள் ஆகிய அறுவகைப் பொருளையும் தருவது தெரிநிலை வினைச்சொல் எனப்படும்.

**விளக்கம்**

- வினைச் சொல்லை 'வினை' என்றது ஆகுபெயர்.
- 'செய்பவன்' என ஆண்பாலில் கூறினாரேனும் 'ஒரு மொழி ஒழிதன் இனங் கொளற் குரித்தே' என்பதனால் ஐம்பாலையும் கொள்ள வேண்டும்.

**(எ.கா)** 'குடத்தை வனைந்தான்' வனைந்தான் என்றுக் கூறும்போதே அதில்,

குயவன் - செய்பவன்
மண் - முதற்காரணம்
தண்டசக்கரம் - துணைக்காரணம்

வனைதற்கு ஆதாரமான இடம் } இடம்
- வனைதற்கு முதற்காரணமாகிய செயல்

வனைந்தான் - இறந்த காலம்
குடம் - செயப்படுபொருள்

ஆகியவை வெளிப்படையாகத் தோன்றுகின்றன.

- வினைமுதல், கருவி, இடம், செயல், காலம், செயப்படுபொருள் ஆகிய ஆறையுந் தருவது - செயப்படுபொருள் குன்றாத வினை எனப்படும். (எ.கா) வனைந்தான்
- செயப்படுபொருள் ஒழிந்த ஐந்தையும் காட்டுவது செயப்படுபொருள் குன்றிய வினை எனப்படும். (எ.கா) வந்தது.

**குறிப்பு வினைச் சொல்லின் பொதுவிலக்கணம்**

- ❖ பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் என்னும் ஆறினையும் அடிப்படையாகக் கொண்டு அவற்றின் இடத்தே பிறந்து, செய்பவன் முதலிய ஆறனுள் கருத்தா ஒன்றையுமே விளக்குவது குறிப்பு வினைச்சொல் எனப்படும்.

**விளக்கம்:**

- ❖ தெரிநிலை வினைக்கு முதனிலைகள் தெளிவாக விளங்கி நிற்பது போலுக் குறிப்பு வினைச் சொல்லுக்கு முதனிலைகள் விளங்கித் தோன்றாததால் 'பொருள் முதல் ஆறினும் தோற்றி' எனக் கூறினர்.

**(எ.கா)** குழையினன், பொன்னினன் - பொருள்

அகத்தினன், புறத்தினன் - இடம்

ஆதிரையான், ஓணத்தான் - காலம்

குறுந்தாளன், செங்கண்ணன் - சினை

கரியன், நல்லன் - குணம்

கடுநடையன், இன்சொல்லன் - தொழில்

- ❖ இவற்றுள் விகுதியால் 'செய்பவன்' விளங்கிற்று, கருவி முதலிய மற்றவை குறிப்பால் உணரப்பட்டது.
- ❖ இவை பொருள் முதலிய ஆறும் காரணமாக ஒரு பொருளை வழங்குவதற்கு வரும் பெயராகாது.

குழையை உடையவனாயினான், ஆகின்றான், ஆவான் எனப் பொருள் பெற்று வருதலால் குறிப்பு வினைச்சொற்கள் ஆயிற்று.

- ❖ இவை, முன்பு குறிப்பு வினையாய் நின்று, பின்னர் பொருளை வழங்குவதற்குரிய பெயராய்வரின் குறிப்பு வினையாலனையும் பெயர் எனப்படும். **(நூற்பா – 321)**

**வினைச் சொற்களின் பகுப்பு**

தெரிநிலையாகவும், குறிப்பாகவும் வரும் என்ற வினைச்சொற்கள் முற்று வினைச்சொற்களும், பெயரெச்ச வினைச் சொற்களும், வினையெச்ச வினைச்சொற்களுமாகி, திணைபால் இடங்களுள் ஒன்றிற்குச் சிறப்பாகவும், பலவற்றிற்கும் பொதுவாகவும் வரும்.

இனி, ஒரு மொழி ஒழிதன் இனங்கொளற்கு உரித்தே என்பதனால் பிறவழிகளால் ஒன்றற்குரியவும், பொதுவுமாய் நிற்பனவும் சில உள என்று அறியவேண்டும்.

**(எ.கா)**

1. நடந்தான் - தன்வினை : நடத்தினான் - பிறவினை

   வெளுத்தான் - தன்வினை, பிறவினை இரண்டிற்கும் பொதுவினை

2. நடந்தான் - உடன்பாட்டுவினை

நடவான் - எதிர்மறைவினை

சாவான், வேவான் - உடன்பாட்டுவினை, எதிர்மறைவினை இரண்டிற்கும் பொதுவான வினை.

3. உண்டான் - செய்வினை

உண்ணப்பட்டது – செயப்பாட்டு வினை

புலிகொன்ற யானை – செய்வினை செயப்பாட்டுவினை இரண்டிற்கும் பொதுவினை.

4. தேடிய சாத்தன், தேடிய வந்தான் - தேடிய என்னும் சொல் ஒன்றே பெயரெச்சம், வினைஎச்சம் இரண்டிற்கும் பொதுவாய் வந்தது. **(நூற்பா – 322)**

**வினைமுற்று**

**வினைமுற்றின் இலக்கணம்**

பலவகை வினைகளுக்கும் பொதுவிலக்கணமாகிய செய்பவன் முதலிய ஆறையும் தோன்றச் செய்து, பொருட் பெயர் முதலிய அறுவகைப் பெயரையும் பயனிலையாக ஏற்று, மற்றொன்றையும் ஏற்காதவை தெரிநிலையும், குறிப்பும் ஆகிய வினைமுற்றுகளாம்

**தெரிநிலை வினைமுற்று**

**(எ.கா)** செய்தான் அவன் - பொருட்பெயர் கொண்டது

குளிர்ந்தது நிலம் - இடப்பெயர் கொண்டது

வந்தது கார் - காலப்பெயர் கொண்டது

குவிந்தது கை - சினைப்பெயர் கொண்டது

பரந்தது பசப்பு - குணப்பெயர் கொண்டது

ஒழிந்தது பிறப்பு - தொழிற்பெயர் கொண்டது

**குறிப்பு வினைமுற்று**

நல்லன் அவன் - பொருட்பெயர் கொண்டது

நல்லது நிலம் - இடப்பெயர் கொண்டது

நல்லது கார் - சினைப் பெயர் கொண்டது

நல்லது கை - குணப்பெயர் கொண்டது

நல்லது பிறப்பு - தொழிற்பெயர் கொண்டது

மற்றைத் திணை, பால், இடம், காலந்தோறும் இவ்விதிபொருந்தும். **(நூற்பா – 323)**

தெரிநிலை வினைமுற்றின் பாகுபாடு:-

- ஆண்பால் முதலிய ஐம்பால் வினைமுற்றுகளையும் படர்க்கையிடத்திலும்
- ஒருமை வினைமுற்றையும் பன்மை வினைமுற்றையும் தன்மை முன்னிலை இடங்களிலும் வைத்து முக்காலங்களாலும் மாற, சொல்லப்பட்ட முறையே, படர்க்கை வினைமுற்றுகள் பதினைந்து ஆகும்.

❖ தன்மை வினைமுற்றுகள் ஆறு ஆகும், முன்னிலை வினைமுற்றுகள் ஆறு ஆகும், ஆகத் தெரிநிலை வினைமுற்றுச் சொல் ஒன்றுமே இருபத்தேழாகும்.

**1. படர்க்கை வினைமுற்று – 15**

**(எ.கா)** நடந்தான், நடந்தாள், நடந்தார், நடந்தது, நடந்தன.
- இறந்தகால வினைமுற்று 5

நடக்கின்றான், நடக்கின்றாள், நடக்கின்றார், நடக்கின்றது. நடக்கின்றன.
- நிகழ்கால வினைமுற்று 5

நடப்பான், நடப்பாள், நடப்பார், நடப்பது, நடப்பன.
- எதிர்கால வினைமுற்று 5

**2. தன்மை வினைமுற்று: 6**

**(எ.கா)** நடந்தேன், நடந்தோம் - இறந்த கால வினைமுற்று 2
நடக்கிறேன், நடக்கின்றோம் - நிகழ்கால வினைமுற்று 2
நடப்பேன், நடப்போம் - எதிர்கால் வினைமுற்று 2

**3. முன்னிலை வினைமுற்று: 6**

**(எ.கா)** நடந்தாய், நடந்தீர் - இறந்தகால வினைமுற்று 2
நடக்கின்றாய், நடக்கின்றீர்- நிகழ்கால வினைமுற்று 2
நடப்பாய், நடப்பீர் - எதிர்கால வினைமுற்று 2
ஆக வகை மூன்றுக்கும் முற்றுவினை – 27 **(நூற்பா – 324)**

**ஆண்பால் படர்க்கை வினைமுற்று**

❖ அன், ஆன் என்னும் இரண்டு விகுதிகளையும் இறுதியிலுடைய சொற்கள் ஆண்பாற் படர்க்கை வினைமுற்றும், குறிப்பு வினைமுற்றும் ஆகும்.

**(எ.கா)** நடந்தான், நடந்தனன் - இறந்தகால வினைமுற்று
நடக்கின்றனை, நடக்கின்றான் - நிகழ்கால வினைமுற்று
நடப்பன், நடப்பான் - எதிர்கால வினைமுற்று
குழையன், குழையான்(அவன்) - குறிப்பு வினைமுற்று **(நூற்பா – 325)**

**பெண்பால் படர்க்கை வினைமுற்று**

❖ அள், ஆள் என்னும் இரண்டு விகுதிகளையும் இறுதியில் உடைய சொற்கள் உயர்திணைப் பெண்பாற் படர்க்கை வினைமுற்றும், குறிப்பு முற்றும் ஆகும்.

**(எ.கா)** நடந்தனள், நடந்தாள் - இறந்தகால வினைமுற்று

நடக்கின்றனள், நடக்கின்றாள் - நிகழ்கால வினைமுற்று

நடப்பள், நடப்பாள் - எதிர்கால வினைமுற்று

குழையள், குழையாள் - குறிப்பு வினைமுற்று **(நூற்பா – 326)**

**பலர்பால் படர்க்கை வினைமுற்று**

- ❖ அர், ஆர், ப, மார் என்னும் நான்கு விகுதிகளையும் இறுதியிலுடைய சொற்கள் உயர்திணைப் பலர்பாற் படர்க்கை வினைமுற்றும், குறிப்பு முற்றுமாகும்.
- ❖ மார் ஈற்று வினைமுற்று, பெயருடன் முடிவதேயன்றி வினையுடனும் முடியும்.

**(எ.கா)** நடந்தன, நடந்த - இறந்தகால வினை முற்று

நடக்கின்றன. நடக்கின்ற - நிகழ்கால வினைமுற்று

நடப்பன, நடப்ப - எதிர்கால வினைமுற்று

குழையர், குழையார்(அவர்) – குறிப்பு வினைமுற்று

நடப்ப, எய்துப, மொழிப(அவர்) – 'ப'விகுதி

"பாடின் மன்னரைப் பாடன்மார் எமரே" - மாரீற்று வினைமுற்று பெயருடன் முடிந்தது.
(பாடன்மார் - பாடுவாரல்லர், அல் - எதிர்மறை இடைநிலை)

"ஆர்த்தார் கொண்மார் வந்தார்" -மார் ஈற்று வினைமுற்று வினையொடு முடிந்தது.
(கொண்மார் - கொள்வார்)

- ❖ மார், ப விகுதிகள் தாமே காலங்காட்டுவதால் குறிப்பு வினையில் வாராது. **(நூற்பா – 327)**

**ஒன்றன்பால் படர்க்கை வினைமுற்று**

- ❖ து,று,டு என்னும் மூன்று விகுதிகளையும் இறுதியில் உடைய குற்றியலுகர ஈற்று மொழிகள் அஃறிணை ஒன்றன்பால் படர்க்கை வினைமுற்றும், குறிப்பு முற்றுமாகும்.
- ❖ இவற்றுள் டு விகுதி குறிப்பு வினைமுற்றில் மட்டுமே வரும்,

  தெரிநிலை வினைமுற்றில் வராது.

**(எ.கா)** நடந்தது, கூயிற்று - இறந்தகால வினைமுற்று

நடக்கின்றது – நிகழ்கால வினைமுற்று

நடப்பது – எதிர்கால வினைமுற்று

குழையது, அற்று - குறிப்பு வினைமுற்று

று விகுதி, இறந்தகால இடைநிலையோடு மட்டும் கூடிவரும் **(நூற்பா – 328)**

**பலவின்பால் படர்க்கை வினைமுற்று**

- அ. ஆ என்னும் இரு விகுதிகளையும் ஈற்றில் உடைய மொழிகள் அஃறிணைப் பலவின்பாற் படர்க்கை வினைமுற்றும், குறிப்பு வினைமுற்றுமாம்.
- அவற்றுள் ஆகார விகுதி எதிர்மறையில் மட்டுமெ வரும்: உடன்பாட்டில் வராது.

**(எ.கா)** நடந்தான், நடந்த - இற்நதகால வினை முற்று
நடக்கின்றன, நடக்கின்ற - நிகழ்கால வினைமுற்று
நடப்பன. நடப்ப - எதிர்கால வினைமுற்று
கரியன், கரிய (அவை) - குறிப்பு வினைமுற்று
நடவா நின்றில, நடவா - எதிர்மறை வினைமுற்று

**இருதிணைப் பொதுவினை**

தன்மையிடத்துத் தெரிநிலை குறிப்பு வினைமுற்றுக்களும், முன்னிலையிடத்துத் தெரிநிலை குறிப்பு வினைமுற்றுக்களும்,
வேறு, இல்லை, உண்டு என்னும் மூன்று குறிப்பு வினைமுற்றுகளும்,
தெரிநிலையும் குறிப்புமாகிய பெயரெச்ச வினை எச்சங்களும் உயர்திணை, அஃறிணை என்னும் இரு திணைக்கும் பொது வினைகளாம்.

“செய்யும் என்னும் பெயரெச்சமே செய்யும் என்னும் முற்றாதலால் அம்முற்றும் இருதிணைப் பொதுவினை ஆகும்.” **(நூற்பா – 330)**

**தன்மை ஒருமை வினைமுற்று**

- கு,டு,து,று என்னும் நான்கு குற்றியலுகர விகுதிகளும்,
- அல், அன், என், ஏன் என்னும் நான்கு மெய்யீற்று விகுதிகளும் ஆகிய இவ்வெட்டு விகுதிகளையும் இறுதியில் பெற்று வரும் சொற்கள்,
- இருதிணைக்கும் உரிய ஒருவன், ஒருத்தி, ஒன்று என்னும் மூன்று பால்களுக்கும் பொதுவாகிய தன்மை ஒருமை வினைமுற்றும் குறிப்பு முற்றுமாம்.

**(எ.கா)** கு – உண்கு – எதிர்கால வினைமுற்று
டு – உண்டு - இறந்தகால வினைமுற்று
து – வந்து, வருது - இறந்தகால, எதிர்கால வினைமுற்று
று – சென்று, சேறு - இறந்தகால, எதிர்கால வினைமுற்று
அல் - செய்வல் - எதிர்கால வினைமுற்று
அன் - அண்டனன், உண்கின்றவன், உண்பன்
என் - உண்டனென், உண்கின்றனென், உண்பென்
ஏன் - உண்டேன், உண்கின்றேன், உண்பேன் முக்கால வினைமுற்றுக்கள்

குழையன், குழையென், குழையேன் - குறிப்பு வினைமுற்று

- ❖ கு, டு, து, று என்னும் நான்கும் தாமே காலம் காட்டுவதால் குறிப்பு வாராது.
- ❖ அல் விகுதி எதிர்கால இடைநிலைகளோடு மட்டும் வரும். **(நூற்பா – 331)**

**தன்மைப் பன்மை வினைமுற்று**

- ❖ அம், ஆம் என்னும் இவ்விரு விகுதிகளையும் இறுதியில் பெற்றுவரும் சொற்கள் முன்னிலை இடத்தாரையும்,
- ❖ எம், ஏம், ஓம் என்னும் இம்மூன்று விகுதிகளையும் இறுதியில் பெற்றுவரும் சொற்கள் படர்க்கை இடத்தாரையும்,
- ❖ கும், டும், தும், றும் என்னும் இந்நான்கு விகுதிகளையும் இறுதியில் உடைய சொற்கள் முன்னிலை, படர்க்கை என்னும் ஈரிடத்தார்களையும் தன்னுடன் கூட்டும் உளப்பாட்டுத் தன்மைப் பன்மை வினைமுற்றும், குறிப்பு ஆகும்.

| **(எ.கா)** **இறப்பு** | **நகழ்வு** | **எதிர்வு** | **குறிப்பு** |
|---|---|---|---|
| அம் - உண்டனம் | உண்கின்றனம் | உண்பம் தாரினம் | யாம் |
| ஆம் - உண்டாம் | உண்கின்றாம் | உண்பாம் தாரினாம் | யானும் ,நீயும் |
| எம் - உண்டனெம் | உண்கின்றனெம் | உண்பெம்தாரினெம் | |
| ஏம் - உண்டேம் | உண்கின்றேம் | உண்பேம்தாரினேம் | யாம் |
| ஓம் - உண்டோம் | உண்கின்றோம் | உண்போம் தாரினோம் | யானும் அவனும் |

**இறப்பு** **எதிர்வு**

கும் - உண்கும்
டும் - உண்டும் } யாம்

வந்தும் வருதும்
சென்றும் சேறும் } யானும், நீயும், அவனும்

- ❖ இவை சிறுபான்மை இம்முறையின்றி மயங்கி வருதலுமுண்டு.
- ❖ தன்னொடு சார்ந்தவர்களையும் கூட்டியல்லது தனித்து நில்லாமையின் ‘‘தன்னொடு படுக்கும் தன்மைப்பன்மை’’ என்றார்.
- ❖ கும்,டும்,தும்,றும் என்னும் நான்கும் தாமே காலங்காட்டுவதால் இவை குறிப்பு வினைமுற்றாக வராது. **(நூற்பா – 332)**

**வினையுடனும் முடியும் தன்மை வினைமுற்றுகள்**

- ❖ ‘செய்கு என்னும் தன்மை ஒருமை வினைமுற்றும் ‘செய்கும்’ என்னும் தன்மைப் பன்மை வினைமுற்றும் பெயருடனேயன்றி வினையுடனும் முடியும்.
- ❖ அவ்வாறு முடியினும் அவை முன்பு கூறிய வினைமுற்றுக்களேயாகும்

**(எ.கா)** உண்கு வந்தேன், உண்கும் வந்தேம் **(நூற்பா – 333)**

**உளப்பாட்டு முன்னிலைப் பன்மை வினைமுற்று**

- ❖ (தன்மையோடு கூடிய முன்னிலை, படர்க்கைகள் தன்மையானாற் போல) முன்னிலையோடு கூடிய படர்க்கையும் முன்னிலையாம்.

**(எ.கா)** உண்ணிர், உண்டீர், உண்மின், குழையினிர், குழையீர் - நீயும் அவனும். **(நூற்பா – 334)**

**முன்னிலை ஒருமை வினைமுற்று**

- ❖ ஐ,ஆய்,இ என்னும் மூன்று விகுதிகளை இறுதியியல் உடைய மொழிகளும்,
- ❖ விகுதி குன்றியும் குன்றாமலும் நிற்பனவாகிய ஏவலில் வரும் இருபத்துமூன்று ஈற்று மொழிகளும்.
- ❖ ஒருவன், ஒருத்தி, ஒன்று என்னும் மூன்று பால்களுக்கும் பொதுவாகிய முன்னிலை ஒருமை வினைமுற்றும் குறிப்பு முற்று ஆகும்.

**(எ.கா)**

| **இறப்பு** | **நிகழ்வு** | **எதிர்வு** | **குறிப்பு** | |
|---|---|---|---|---|
| உண்டனை | உண்கின்றனை | உண்பை | குழையினை | } நீ |
| உண்டாய் | உண்கின்றாய் | உண்பாய் | குழையாய் | |
| உண்டி | உண்ணாநின்றி | சேறி | வில்லி | |

- ❖ ஆய், இ, அல், ஏல், ஆல் என்னும் விகுதிகளை இறுதியில் உடைய வினைச் சொற்களும்,
- ❖ ஆய் விகுதி இன்றிப் பகுதி மாத்திரையாய் நிற்கும் வினைச் சொற்களும், முன்னிலை ஏவல் ஒருமை வினைமுற்றுகள் ஆகும்.
- ❖ இவற்றுள் அல், ஏல், ஆல் என்னும் மூன்றும் விகுதிகளும் எதிர்மறையில் வரும்

**(எ.கா)** உண்ணாய் உண்ணுதி உன்
உண்ணல் உண்ணேல் மறால் } - நீ

- ❖ எதிர்மறை ஏவல் ஒருமை வினைமுற்றுகள், எதிமறை ஆகார இடைநிலையின் முன் தகரவெழுத்துப் பேற்றோடு, ஏகார விகுதி இகர விகுதிகளுள் ஒன்று பெற்றும் வரும்.

**(எ.கா)** உண்ணாதே, உண்ணாதி

- ❖ இகர விகுதி எதிர்காலத்தை இடைநிலை இன்றித் தானே காட்டும். **(நூற்பா – 335)**

**சில ஏவல் வினைமுற்றுக்குச் சிறப்பு விதி**

- ❖ முன்னிலை ஏவல் வினைமுற்றுகளுக்கு முன் ஈகாரமும் ஏகாரமும் அவ்விடத்து நிற்குரிய மரபினையுடைய யாதேனும் ஒரு மெய்யை ஊர்ந்து வரும்

**(எ.கா)** “சென்றீ பெருமநிற் றகைக்குநர் யாரே” (செல் - சென்றீ)

" அட்டிலோலை தொட்டனை நின்மே" (நில் - நின்மே)

இவ் ஈகார ஏகாரங்கள் விகுதிகளல்ல: முன்னிலை அசைகள் ஆகும். **(நூற்பா – 336)**

**முன்னிலைப் பன்மை வினைமுற்று**

- இர், ஈர், என்னும் இரண்டு விகுதிகளையும் இறுதியிலுடைய மொழிகள் இருதிணைக்கும் பொதுவாகிய முன்னிலைப் பன்மை வினைமுற்றும், குறிப்பு வினைமுற்றும் ஆகும்.
- மின் மிகுதியை இறுதியில் உடைய மொழிகள் முன்னிலைப் பன்மை ஏவல் வினைமுற்றாகும்.

**(எ.கா)**

உண்டனிர், உண்டீர் - இறந்தகால வினைமுற்று

உண்கின்றனிர், உண்கின்றீர் - நிகழ்கால வினைமுற்று

உண்பிர், உண்பீர் - எதிர்கால வினைமுற்று

குழையினிர், குழையீர் - குறிப்பு வினைமுற்று

உண்மின், உண்ணீர், உண்ணும் - ஏவல் வினைமுற்று

- மின் விகுதியன்றி, ஈர், உம் விகுதிகளும் முன்னிலைப் பன்மை ஏவலுக்கு வரும் **(நூற்பா – 337)**

**வியங்கோள் வினைமுற்று**

**கயவொடு ரவ்வொற்று ஈற்ற வியங்கோள்**
**இயலும் இடம்பால் எங்கும் என்ப. (நூற்பா – 338)**

- க, ய என்னும் இரண்டு உயிர் மெய்களையும், ரகர ஒற்றையும் இறுதியாக உடைய மொழிகள் வியங்கோள் வினைமுற்றுகள் ஆகும்.
- அவை மூன்று இடங்களிலும், ஐம் பாலிலும் வரும்

**(எ.கா)** வாழ்க உண்க ஆடுக
வாழிய உண்ணிய ஆடிய } யாம், யாம், நீ, நீர்,
வாழியர் உண்ணிய } அவன், அவள், அவர், அது, அவை

உரையிற் கோடலால் அ, அல், தல் என்பனவும் வியங்கோள் விகுதிகளாக வரும்

**(எ.கா)** "நான்மறை அறங்கள் ஓங்க"

"மக்கள் பதடி எனல்"

"மனத்துக்கண் மாசிலன் ஆதல்"

இவ்வியங்கோள் வினைமுற்று,

- நடக்க, வருக என உயர்ந்தோன் இழிந்தோனை இன்னது செய்க என விதித்தற் பொருளிலும்,
- "போற்றியருளுக" என வேண்டிக் கோடற் பொருளிலும்,

- "பரந்து கெடுக உலகியற்றியான்" என வைதற் பொருளிலும் வரும்.

**ஐம்பால் மூவிடத்தும் வரும் குறிப்பு வினைமுற்று**

- வேறு, இல்லை, உண்டு என்னும் மூன்று குறிப்பு வினைமுற்றுகளும் ஐம்பால் மூவிடங்கட்கும் உரியனவாகும்.

**(எ.கா)** யான் வேறு, யாம் வேறு
நீ வேறு, நீர் வேறு
அவன்வேறு, அவள்வேறு, அவர்வேறு
அது வேறு, அவைவேறு.

- இல்லை, உண்டு என்பவையும் மூவிடப் பெயர்களோடு இவ்வாறே வரும்.
- வேண்டும், தகும், படும் என்னும் சொற்களும் ஐம்பால் மூவிடங்களுக்கும் பொதுவாக வரும்

**(எ.கா)** அவர் ஓதல் வேண்டும், நீ போதல் வேண்டும்: இச்சோறு உண்ணத்தகும், இச்செயல் செய்யத்தகும், வஞ்சகரை அஞ்சப்படும்.

"கற்றறிந் தோரைத் தலை நிலத்து வைக்கப்படும். **(நூற்பா – 339)**

**பெயரெச்சம்**

**செய்த செய்கின்ற செய்யும்என் பாட்டில்**
**காலமும் செயலும் தோன்றிப் பாலொடு**
**செய்வ தாதி அறுபொருள் பெயரும்**
**எஞ்ச நிற்பது பெரெச் சம்மே. (நூற்பா – 340)**

- செய்த, செய்கின்ற. செய்யும் என்று சொல்லப்படும் மூவகை வாய்பாட்டுச் சொற்களிலும்.
- இறப்பு, நிகழ்வு, எதிர்வு, என்னும் மூவகைக் காலங்களிலும், தொழிலும் வெளிப்படையாகத் தோன்றி,
- வினை முற்றுதற்கு வேண்டும் பாலொன்றும் தோன்றாமல், அப்பாலுடனே செய்பவன், கருவி, நிலம், செயல், காலம், செயப்படுபொருள் என்னும் அறுவகைப் பொருட்பெயர்களம் எஞ்சும்படி நிற்பன தெரிநிலைப் பெயரெச்சமும் ஆகும்.

**விளக்கம்**

- 'நிற்பது' என்பது தொகுதி ஒருமை
- 'ஏற்புழிக் கோடல்' என்னும் உத்தியால், தோன்றி என்பதுவரைக்கும் தெரிநிலை உடன்பாட்டிற்கும்.
- ஒழிந்த விதி தெரிநிலையும் குறிப்புமாகிய உடன்பாடு. எதிர்மறை இரண்டிற்கும் கொள்ளவேண்டும்.

**(எ.கா)**

1. இறப்பு – உண்ட
   நிகழ்வு - உண்கின்ற
   எதிர்வு - உண்ணும்

   சாத்தன் - வினைமுதல்
   கலம் - கருவி
   இடம் - நிலம்
   ஊன் - தொழில்
   சோறு - செயப்படுபொருள்

1. வேலாண் முகத்த கயிறு, மூவிலைய வேல்,
   கரிய குதிரை - குறிப்புப் பெயரெச்சம்
2. பாடாத பைங்கிளி – எதிர்மறைத் தெரிநிலைப் பெயரெச்சம்.
3. இல்லாத பொருள் - எதிர்மறைக் குறிப்புப் பெயரெச்சம்.

**செய்யுமென் எச்சத்திற்குச் சிறப்பு விதி**

- சில இடங்களில் 'செய்யும்' என்னும் வாய்பாட்டுப் பெயரெச்சத்தினுடைய ஈற்று உயிர் மெய் கெடும்:
- செய்யுளில் 'உம்' உந்து எனத் திரிந்தும் வரும்.
- 'செய்யும்' என்னும் முற்றாயின் அதன் இறுதி உயிராயினும் உயிர் மெய்யாயினும் கெட்டுவரும்.

**(எ.கா)**

1. ஆகும் பொருள் - ஆம்பொருள்
   போகும் பொருள் - போம்பொருள் என வழக்கிலும்,
   "ஆம் பொருள்களாகுமவை யார்க்கும் அழிப் புண்ணாவாம்"
   எனச் செய்யுளிலும், செய்யுமென் எச்ச ஈற்று உயிர் மெய் கெட்டன.
2. "தென்கடற் றிரைமிசைப் பாயுந்து"
   "நீர்கோழி கூப்பெயர்க்குந்து"
   எனச் செய்யுளில் பாயும் என்பது பாயுந்து எனவும், கூப்பெயர்க்கும் என்பது கூப்பெயர்க்குந்து எனவும் உம் உந்தாயின.
3. அஃதாம், இவைபோம் என வழக்கின்கண் ஆகும், போதும் என்பன முற்றாய விடத்து ஆம், போம் என ஈற்றிலுள்ள உயிர்மெய் கெட்டன. **(நூற்பா – 341)**

**வினையெச்சம்**

**வினையெச்சத்தின் இலக்கணம்**

> **தொழிலும் காலமும் தோன்றிப் பால்வினை**
> **ஒழிய நிற்பது வினையெச் சம்மே. (நூற்பா – 342)**

- தொழிலும் காலமும் வெளிப்படையாகத் தோன்றி வினைமுற்றுதற்கு வேண்டும் பாலும் வினையும் எஞ்சிநிற்பன தெரிநிலை வினை எச்சமும் குறிப்பு வினை எச்சமும் ஆகும்.

**விளக்கம்**

- வினை எனப் பொதுப்படக் கூறினமையால், உடன்பாடும் எதிர்மறையும் பற்றிவரும் தெரிநிலையும், குறிப்புமாகிய வினைமுற்றும், பெயரெச்சமும், குறிப்புமாகிய வினைமுற்றும், பெயரெச்சமும், வினையெச்சமும், வினையாலணையும் பெரும், தொழிற்பெயருமாகிய ஐவகை வினைச் சொற்களும் அடங்கும்.
- ஏற்புழிக் கோடலால் தொழிலும் காலமும் தோன்றுதல் தெரிநிலைக்கும், பாலும் வினையும் ஒழியநிற்றல் தெரிநிலை, குறிப்பு இரண்டிற்கும் உரியன.

**(எ.கா)** உண்டு வந்தான் - தெரிநிலை வினைஎச்சம்

அருளின்றிச் செய்தான் - குறிப்பு வினை எச்சம்

இவற்றுள் உண்டு என்பது, உணல் என்னும் தொழிலும், இறந்த காலமும் தோன்றி, அத்தொழில் நிகழ்த்துதற்கு வேண்டும் பால் தோன்றாமையும், அப்பாலுடனே வினை ஒழிய நிற்றலையும் காணலாம்.

### வினையெச்ச வாய்பாடுகள்

செய்து. செய்பு, செய்யா, செய்யூ, செய்தென, செய, செயின், செய்யிய, செய்யியர் என்னும் ஒன்பது வாய்பாட்டால் வருவனவும்,

- வான், பான், பாக்கு என்னும் மூன்று விகுதிகளைக் கொண்டு வருவனவும், இவை போல்வன பிறவும் வினையெச்ச விளைகள் ஆகும்.
- முன்னர் உள்ள ஐந்தும் இறந்த காலம் காட்டும் நடு நின்ற ஒன்று நிகழ்காலம் காட்டும் பின்னைய ஆறும் எதிர்காலம் காட்டும்.

### இறந்தகாலம்

**(எ.கா)**உண்டு - செய்து

உண்குபு- செய்பு

உண்ணா - செய்யா

உண்ணூ - செய்யூ

உண்ணென - செய்தென

நிகழ்காலம் - உண்ண – செய்

### எதிர்காலம்

**(எ.கா)** உண்ணின் - செயின்

உண்ணிய - செய்யிய

உண்ணியர் - செய்யியர்

உண்ணுவான் - வான்

தின்பான் - பான்

செய்பாக்கு - பாக்கு **(நூற்பா – 343)**

**வினையெச்சங்களுக்கு முடிபு வேறுபாடு**

- ❖ வினையெச்சங்களுள், முதலில் உள்ள செய்து, செய்பு, செய்யா, செய்யூ என்னும் நான்கும்,
- ❖ இறுதியில் உள்ள வான், பான், பாக்கு என்னும் மூன்றும் வினைமுதல் வினையைக் கொண்டு முடியும்.
- ❖ நடுவில் உள்ள செய்தென, செய, செயின், செய்யிய, செய்யியர் என்னும் ஐந்தும், இவை போல்வன பிறவும் செய்பவனைக் கொண்டு முடிதலேயன்றிப் பிறவற்றையும் கொண்டு முடியும்.

**(எ.கா)** உ - தாடைத்து வந்தான்

பு - தானுண்குபு போனான்

ஆ - தான் கல்லாக் கழித்தான்

ஊ - தான் காணூஉ மகிழந்தான்

வான் - தான் கொல்வான் செல்வான்

பான் - தானலைப்பான் புகுந்தான்

பாக்கு – தான் தருபாக்கு வருவான்

- இவை வினைமுதல் கொண்டு முடிந்தன.

என - தானுண்டென மகிழ்ந்தான், பிறனுன்டென மகிழ்ந்தான்

அ - தானுண்ண வருகிறான், பிறனுண்ணக் காண்கிறான்

இன் - தனுண்ணின் மகிழ்வான், பிறனுண்ணிற் கொடுப்பான்

இய – தானுண்ணிய வருவான், பிறனுண்ணிய கொடுப்பான்.

இயர் - தானுண்ணியர் போவான், பிறனுண்ணியர் வழங்குவான்

- வினை முதலும் பிறவுங் கொண்டு முடிந்தன.

உண்டால் உவக்கும், உண்டால் பசிதீரும்

மழையின்றிப் பொய்ப்பின் விருந்தின்றி யுண்டான்

- இன்ன என்றதனால் வரும் ‘செய்தால்’ முதலியவையும் வினையெச்சக் குறிப்பும் வினைமுதலும் பிறவும் ஏற்றன. **(நூற்பா – 344)**

**வினைமுதல் கொள்ளும் என்பவனவற்றிற்கு ஒரு புறனடை**

- ❖ முதலில் நான்கும், ஈற்கும், ஈற்றில் மூன்றும் என்ற வினையெச்சங்கள் சினைவினையாயின் அவை, முன்னர் வினைமுதல் கொள்ளும் என்ற விதியினாலே சினையுடனேயன்றி ஒற்றுமை பற்றி முதலுடனும் முடியும்.

**(எ.கா)** காலொடிந்து விழுந்தான்

கண்வருவான் கதிரவனைத் கைதொழுதான்

ஒடிதல், வருதல் - சினைவினை

விழுதல், தொழுதல் - முதல்வினை

**வினையெச்ச வாய்பாடுகளின் திரிபு**

வினையெச்ச வாய்பாடுகள், வேறு வாய்பாடுகளாக மாறி வந்தாலும், பொருள் திரிந்து வேறுபடாது.

**(எ.கா)**

1. ஞாயிறு பட்டு வந்தான் என்பதில் 'பட' என்னும் செயவென் வாய்பாட்டு வினையெச்சம் பட்டெனத் திரிந்து நின்றது.
2. மழை பெய்து நெல் விளைந்தது
   இதில் பெய்ய என்னும் காரணப் பொருட்டாகிய செய என்னும் வாய்பாட்டு இறந்த கால வினையெச்சம் 'பெய்து' எனத் திரிந்து நின்றது.
3. யான் கொள்வான் பொன் கொடுத்தான்
   என்னுமிடத்தும் 'கொள்' என்னும் செயவென் வாய்பாடு வினைஎச்சம், கொள்வான் எனத் திரிந்து நின்றது. **(நூற்பா – 346)**

**ஒழிபு**

**வினைக்குறிப்பு**

- ஆக்கத்தால் வரும் வினைக்குறிப்பும் சொற்கள் விரிந்தாயினும் தொக்காயினும் வரும் ஆக்கச் சொல் இல்லாமல் வராது.

**(எ.கா)** சாத்தன் நல்லன் ஆயினான், சாத்தன் நல்லன்
கல்வியால் பெரியன் ஆயினான்: கல்வியால் பெரியன்
கற்று வல்லவன் ஆயினான்: கற்று வல்லவன்

இங்கு ஆக்கச் சொல் விரிந்தும், தொக்கும் வந்தன,

- எனவே 'நல்லன்' என்பது இயற்கை வினைக் குறிப்பாயின் விரிதல், தொகுதல் இல்லாமல் சாத்தனல்லன் என்றே வரும். **(நூற்பா – 347)**

**செய்யுமென் முற்று**

- 'செய்யும்' என்னும் வாய்பாட்டு முற்றானது உயர்திணைப் பன்மைப் படர்க்கையிலும், முன்னிலையிலுந், தன்மையிலும் வராது.

**(எ.கா)** அவனுண்ணும், அவளுண்ணும்,
அதுவுண்ணும், அவையுண்ணும்

- படர்க்கைப் பலர்பால் ஒழிந்த மற்ற ஆண்பால், பெண்பால், ஒன்றன்பால், பலவின்பால் என்னும் நான்கு பால்களிலும் வரும். **(நூற்பா – 348)**

**பால் பொதுவினை**

- ‘யார்’ என்னும் வினாப் பொருளைத்தரும் குறிப்பு வினைமுற்று உயர்திணை படர்க்கை முப்பால்களுக்கும் உரிய பொதுவிணை யாகும்.

**(எ.கா)** அவன் யார், அவள்யார், அவர் யார்.

அஃதியார், அவையார், யான் யார், யாம் யார், நீ யார், நீர் யார் என அஃறிணை இருபாலிலும் மற்றை ஈரிடத்திலும் வருதல் உண்டு.

- யார் என்பது ஆரென விகாரப்பட்டும் வரும். **(நூற்பா – 349)**

- ‘எவன்’ என்னும் வினாப்பொருளைத் தரும் குறிப்பு வினைமுற்று அஃறிணை இருபாலுக்கு பொதுவினையாகும்.

**(எ.கா)** அஃதெவன், அவையெவன்

எவனென்பது என், என்ன, என்னை என விகாரப்பட்டும் வரும்.

**இருவகை முற்றிற்கும் புறனடை**

- தெரிநிலை வினைமுற்று எச்சமாகி வருதலும், குறிப்பு வினைமுற்று வினையெச்சமாகியும், பெயரெச்சமாகியும் வருதலும் உண்டு.

**(எ.கா)** கண்டனன் வணங்கினான்.

முகந்தனர் கொடுத்தார் - கண்டு, முகந்து எனப்பொருள்படுதலால் வினைமுற்று வினையெச்சமாயிற்று

அவன் வில்லினன் வந்தான் - வில்லையுடையவனாக எனப் பொருள்படுதலால் குறிப்பு முற்று வினையெச்சமாயிற்று.

குழையின்ன கொற்றன் வந்தான் - குழையையுடைய கொற்றன் வந்தான் எனப் பொருள் படுதலால் குறிப்பு முற்று பெயரெச்சமாயிற்று. **(நூற்பா – 351**

## தொகுப்புரை

வினைச் சொல்லின் பொது இலக்கணம் எடுத்துரைக்கப்படுகின்றது. தெரிநிலை, குறிப்பு என்று பிரிக்கப்படுகின்றன. அவற்றின் பொது இலக்கணமும் விவரிக்கப்பட்டுள்ளது. பொது, குறிப்பு என்று வினைமுற்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. மூவிட வினைமுற்றுகள் கூறப்படுகின்றன. பெயரெச்சம் வினையெச்சம், வினையெச்ச வாய்ப்பாடுகள் போன்றவை விளக்கம் பெற்று வினையியல் முற்றுப் பெறுகின்றது.

## பயிற்சி வினாக்கள்

### சிறு வினாக்கள்

1. வினைச்சொல் என்றால் என்ன?
2. குறிப்பு வினைச்சொல் என்றால் என்ன?
3. வினைமுற்றின் இலக்கணம் தருக.
4. பலர்பால் படர்க்கை வினைமுற்று விகுதிகள் எவை?
5. வியங்கோள் வினைமுற்று குறித்தெழுதுக.
6. பெயரெச்சம் குறிப்பு வரைக.
7. வினையெச்சத்தின் இலக்கணம் குறித்தெழுதுக.
8. வினையெச்ச வாய்பாடு தருக.
9. தொகைநிலைத் தொடர் மொழி விளக்குக.
10. தொகைநிலைத் தொடர்கள் எத்தனை வகைப்படும் அவை யாவை?
11. உவம உருபுகள் தருக.
12. தொகா நிலைத் தொடர்மொழிகள் விளக்குக.
13. திணை வழுவமைதி என்றால் என்ன?
14. இட வழுவமைதி என்றால் என்ன?
15. அறுவகை வினா குறித்தெழுதுக.
16. எண்வகை விடை குறித்தெழுதுக.
17. அடுக்குத் தொடர் விளக்குக.
18. ஒரு பொருட் பல் பெயர் எவை.
19. மரபு வழுவமைதி என்றால் என்ன?
20. பொருள்கோள் என்றால் என்ன? எத்தனை வகைப்படும்?
21. தாப்பிசைப் பொருள்கோள் விளக்குக.
22. "சுரையாடி அம்மி மிதப்ப ……… இப்பாடலில் பயின்று வரும் பொருள்கோள் எது?

### குறு வினாக்கள்

1. வினைச் சொல் வகை மற்றும் விரி குறித்தெழுதுக.
2. வினைமுற்றின் இலக்கணத்தை விளக்குக.
3. படர்க்கை வினைமுற்று குறித்து விளக்குக.
4. வினையெச்ச இலக்கணம் குறித்தெழுதுக.

### நெடு வினாக்கள்

1. வினைச்சொல் குறித்து கட்டுரை வரைக.
2. வினைமுற்று குறித்து கட்டுரை வரைக.
3. வினை எச்சங்கள் குறித்து கட்டுரை வரைக.

# அலகு - 3.
# பொதுவியல்

**பாட நோக்கம்**

மொழியின் வழு வழுவின்மையை உணர்த்துதல், சொற்களின் பொதுத்தன்மையை எடுத்துக்காட்டுதல்.

**இயல் வைப்பு முறை**

❖ இது முன்வந்த பெயர்ச்சொல்லுக்கும், வினைச்சொல்லுக்கும், பின்வரும் இடைச்சொல்லுக்கும், உரிச்சொல்லுக்கும் பொது இலக்கணங்களைச் சிங்க நோக்காகக் கூறுவது எனவே நடுவே வைக்கபட்டுள்ளது.

**பால் பொதுமை நீங்கும் நெறி**

❖ இருதிணையிலும் ஆண்பால், பெண்பால்களுக்குப் பொதுவாகிய பெயர்ச் சொற்களும், அத்தகைய வினைச் சொற்களும் அவ் ஆண்பால், பெண்பால்களுள் ஒரு பாலைக் குறிப்பினல் நீக்கும்..

**விளக்கம்:**

**உயர்திணை**

**(எ.கா)** ஆயிரம் மக்கள் போர் செய்யப் போயினார்.

இதில் மக்கள் என்னும் உயர்திணை ஆண், பெண் என்ற இருபாலுக்கும் பொதுப்பெயரும், போயினார் என்னும் இருபாற் பொதுவினையும்,'போர் செயல்' என்னும் குறிப்பினால் பெண்பால் ஒழித்தன.

**அ.்.றிணை**

**(எ.கா)** இப்பெற்றங்கள்: பால் சொரிந்தன.(இப்பெற்றங்கள் உழவொழிந்தன) பெண் பசு

இதில் பெற்றங்கள் என்னும் பொதுப்பெயரும், சொரிந்தன என்னும் பொதுவினையும், 'பால்' என்னும் குறிப்பினால் ஆண்பாலை ஒழித்தன. **(நூற்பா – 352)**

**பெயர் வினையிடத்து ஈற்றயல் திரிதல்**

❖ பெயரிடத்தும், வினையிடத்தும் னகர, ளகர, ரகர, டயகர ஈற்றிற்கு அயலிலுள்ள விகுதி முதல் ஆகாரம், செய்யுளில் ஓகாரமாகத் திரிதலும் உண்டு.

**(எ.கா)** வில்லோன் காலன கழலே

தொடியோள் மெல்லடி சிலம்பே

‘வரையாது கொடுத்தோய்’

‘நல்லோர் யார்கொல்’ - பெயரிடத்து ஆகாரம் ஓகாரமாயிற்று

‘படைத்தோன் மன்றவப் பண்பிலாளன்’

‘நல்லோன் மன்றகூப் பெயர்ததோனே’

‘சென்றோர் அன்பிலர் தோழி’

“வந்தாய் மன்ற தெண்கடற் சேர்ப்ப” - வினையிடத்து ஆகாரம் ஓகாரமாகத் திரிந்தது,

**(நூற்பா – 353)**

### உருபும் வினையினும் எதிர்மறையினுந் திரியாமை

- ❖ எட்டு வேற்றுமை உருபுகளும், மூவகை வினைச்சொற்களும் எதிர் மறுத்துச் சொல்லுமிடத்தில் தத்தம் ஈற்றினின்றும், அவ்வவ் வுருபினின்றும் வேறுபடாது என்றும் சொல்லுவர் புலவர்.
- ❖ உருபு உருபினின்றும், திரியாதென்றும் வினை ஈற்றினின்றும், திரியாதென்றும் என எதிர் நிரல் நிறையாக அமைத்துக் கொள்ளவேண்டும்.
- ❖ உருபின் கண் எதிர்மறுத்தல் என்பது அவற்றின் பயனிலைகள் என உணரலாம்.
- ❖ மூவகை வினைச் சொற்கள்: வினைமுற்று வினையெச்சம், பெயரெச்சம்.

### உருபு எதிர் மறுத்தல்

**(எ.கா)** சாத்தன் வாரான், குடத்தை வனையான்
வாளால் வெட்டான், புல்லர்க்குக் நல்கான்,
நிலையினிழியாள்இ நீங்கான், பொருளின தின்மை,
தீயர்கண் சேரான்,
} முறையே எட்டு வேற்றுமை உருபுகளும் எதிர்மறையிலும் தத்தம் உருபு மாறுபடாமல் வந்துள்ளது.

1. **வினை எதிர் மறுத்தல்**

நடவான், நடவாத, நடவாது –

ஓடாக் குதிரை - இதில் ஓடாத என்னும் பெயரெச்ச ஈறு கெட்டது.

- ❖ மூவகை வினைச் சொற்களும் எதிர்மறையிலும் தம் தம் விகுதி மாறுபடாவாயின. **(நூற்பா – 354)**

### உருபும் வினையும் அடுக்கி முடிதல்

எட்டு வேற்றுமை உருபுகளும விரிந்தும், தொக்கும் தம்முள் விரவியாயினும் வெவ்வேறாக பல அடுக்கிவரினும், மூவகை வினைச்சொற்களும் வெவ்வேறு பல அடுக்கிவரினும் தாம் தாம் கொண்டு முடியுஞ் சொல் ஒன்று இறுதியில் வர எல்லாம் அதனோடு முடியும்.

**(எ.கா)** அரசனானவன் பகைவனை வாளால் வெட்டினான்.

உருபுகள் விரிந்து, தம்முள் விரவிப், பல அடுக்கி, வெட்டினானென்னும் ஒரு வினை கொண்டன.

வாள்கைக்கொண்டான் - உருபு தொக்கு அவ்வாறு வந்தன.

2. சாத்தனையும், கொற்றனையும் வாழ்த்தினான், சாத்தனுக்கும் கொற்றனுக்குந் தந்தை

- 'ஐ' உருபுங் குவ் வுருபும் விரிந்து, வேறுபல அடுக்கி, வாழ்த்தினானென்னும் ஒரு வினையும் தந்தையென்னும் ஒரு பெயரும் முறையே கொண்டன.

'அருளறம் உடையான்' - உருபு தொக்கு அவ்வாறு வந்தன.

3. ஆடினான் பாடினான் சாத்தன், இளையர் மெல்லியர் மடந்தை வினைமுற்றும், குறிப்பு முற்றும், வேறு பல அடுக்கி சாத்தன், மடந்தை என்னும் ஒரு பெயர் முறையே கொண்டன.

4. கற்ற கேட்ட பெரியவர், நெடிய பெரிய மனிதன்

- தெரிநிலை வினைப் பெயரெச்சமும், குறிப்பு வினைப் பெயரெச்சமும் வேறுபல அடுக்கிப் பெரியோர், மனிதன் என்னும் ஒரு பெயர் முறையே கொண்டன.

6. கற்றுக் கேட்டறிந்தார், விருப்பின்றி வெறுப்பின்றி இருந்தார்

- தெரிநிலை வினையெச்சமும் குறிப்பு வினையெச்சமும், வேறுபல அடுக்கி, அறிந்தார், இருந்தார் என்னும் ஒருவினை முறையே கொண்டன. **(நூற்பா – 355)**

## இடைப்பிற வரல்

- எட்டு வேற்றுமை உருபுகளும், வினைமுற்றுகளும் பெயரெச்சங்களும், வினை எச்சங்களும், கொண்டு முடியும் பெயருக்கும் வினைக்கும் இடையே அவ்விடங்கட்கும் பொருத்தமான பிற சொற்கள் வருதலும் உண்டு.

அவ்வாறு வருதல் ஏற்கத்தக்கது, அது இடைப்டபிற வரல் எனப் பெயர் பெறும்.

### 1. வேற்றுமை உருபு

**(எ.கா)** வேலன் (வயிறார) உண்டான்.
அறத்தை (அழகுபெறச்) செய்தான்
கத்தியால் (மாய) வெட்டினான்.
தேவர்க்குச் (செல்வம் வேண்டிச்) சிறப்பெடுத்தான்.
மலையினின்று (உருண்டு) வீழ்ந்தான்.
முருகனது (இத்தடக்கை) யானை.
ஊர்க்கண் (உயர்ந்தவொளி) மாடம்
கண்ணா (விரைந்து ஓடி) வா.

2. **வினைமுற்று**

**(எ.கா)** வந்தான் (அவ்வூர்க்குப் போன) சாத்தன்

3. **பெயரெச்சம்**

**(எ.கா)** வந்த (வண்டமிழ்) மன்னன்.

4. **வினையெச்சம்**

**(எ.கா)** வந்து (சாத்தன் அவ்வூர்க்குப்) போயினான்.

❖ இனி, ஏற்பன என்றதனால், ஏலாதவரின் பொருள் இன்னதெனத் துணிவு தோன்றா வண்ணம் நிற்குமாதலால் அவ்விடங்களில் இடைப் பிறவரலாகப் பிற சொற்கள் வாராது. **(நூற்பா – 356)**

**முடிக்கும் சொல் நிற்குமிடம்**

❖ உருபுகளும், முற்றுகளும், பெயரெச்சங்களும், வினையெச்சங்களும் ஆகிய இவை கொண்டு முடிகின்ற எச்சமாகிய பெயரும் வினையும் அவற்றிற்கு ஈற்றிலும் வரும்.

❖ ஈற்றினும் என்ற உம்மையால் முதலிலும் வருதலை அறியலாம்.

| | | |
|---|---|---|
| **(எ.கா)** | ஈற்றில் வருதல் | முதலில் வருதல் |
| | சாத்தன் வந்தான் | வந்தான் சாத்தன் |
| | மரத்தைக் குறைத்தான் | குறைத்தான் மரத்தை |
| | சாத்தனால் வந்தான் | வந்தான் சாத்தனால் |
| | சாத்தனுக்குக் கொடுத்தான் | கொடுத்தான் சாத்தனுக்கு |
| | சாத்தன் கட் சென்றான் | சென்றான் சாத்தன் கண் |
| | சாத்தா வா | வா சாத்தா |

- உருபுகளின் எச்சங்கள் ஈரிடத்தும் வந்தன.

| | |
|---|---|
| வந்தான் சாத்தன் | சாத்தன் வந்தான் |
| வந்த சாத்தன் | ~~~~~~~~ |
| வந்து போயினான் | போயினான் வந்து. |

- முற்று, எச்சம் இவைகளின் எச்சங்கள் ஈரிடத்தும் வந்தன.

❖ ஆறனுருபின் எச்சமும், ஏழனுருபின் எச்சப் பெயரும், பெயரெச்சத்தின் எச்சமும் முதற்கண் வாரா என்பதும், ஒழிந்தன முதற்கண் வராது.

❖ மற்றவை முதலில் வந்தாலும் இறுதிக்கண் வருதலைப் போல சிறப்பினவல்ல என்பதும் விளங்குவதற்காக 'ஈற்றினும்'என்று உம்மையால் உணர்த்துகிறார். **(நூற்பா – 357)**

**ஒரு மொழி வேறொன்றை அமைத்தல்**

பெயர், வினை, இடை, உரி என்னும் நால்வகைச் சொற்களுள் ஒவ்வொன்று, ஒழிந்து நின்ற தன் தன் இனங்களைக் கொண்டு முடிதற்கு உரிமை உடையதாகும்.

**(எ.கா)**

- சோற்றை உண்டான் என்றால், கறியைத் தின்றான் எனவும்,
- பாக்கைத் தின்றான் என்றால் வெற்றிலையைத் தின்றான், சுண்ணாம்பைத் தின்றான் எனவும்,
- நஞ்சுண்டவன் சாவான் என்றால் நஞ்சுண்டவள் சாவாள், நஞ்சுண்டவர் சாவார், நஞ்சுண்டது சாம், நஞ்சுண்டவை சாம் எனவும் கூறாமலேயே விளங்குவதால், இனங்களாய் எஞ்சி நின்றன. **(நூற்பா – 358)**

**திணைபால் இடப் பொதுமை நீங்கும் நெறி**

- திணைபால் இடங்களுக்குப் பொதுவான பெயர்ச் சொல், வினைச் சொற்களின் பொதுத் தன்மையை மேல்வரும்ட சிறப்பாகிய பெயர்களும் வினைகளும் நீக்கி ஒன்றற்கு உரிமை செய்யும்.
- ஒன்றற்கு முன், பின் என்னும் ஈரிடங்களும் மேல் என்று கூறப்படுதலால், சிறப்புப் பெயர் வினை எவ்விடத்தும் வரினும் கொள்ள வேண்டும்.

**(எ.கா)**

1. சாத்தன் இவன், சாத்தன் இது
   சாத்தன் வந்தான், சாத்தன் வந்தது

   - பெயர்த் திணைப் பொதுமையைப் பின் வந்த சிறப்புப் பெயரும் வினையும், நீக்கி ஒரு திணையை உணர்த்தின.

2. ஒருவர் என்னையர், ஒருவர் என் தாயார், மரம் வளர்ந்தது, மரம் வளர்ந்தன.

- பெயர்ப்பாற் பொதுமையைப் பின் வந்த சிறப்புப் பெயரும் வினையும், நீக்கி ஒரு பாலை உணர்த்தின.

3. யாமெல்லாம் வருவம், நீயிரெல்லாம் போமின், அவரெல்லாம் இருந்தார்.

- பெயரிடப் பொதுமையை, முன்வந்த சிறப்புப் பெயரும், பின்வரும் வந்த சிறப்பு வினையும் நீக்கி ஒவ்வோரிடத்தை உணர்த்தின.

4. வாழ்க அவன், அவள், அவர், அது, அவை, யான், யாம், நீ, நீர்.

- வினைத்டதிணை பாலிடப் பொதுமையை, பின் வந்த சிறப்புப் பெயர்கள், நீக்கி ஒரு திணையையும் பாலையும் இடத்தையும் உணர்த்தின.

5. உண்டு வந்தான், வந்தாள், வந்தார், வந்தது, வந்தன, வந்தோர், வந்தோம், வந்தாய், வந்தீர்.

6. வினைத்திணைப் பாலிடப் பொதுமையைப் பின் வந்த சிறப்பு வினைகள் நீக்கி, ஒரு திணையையும், பாலையும், இடத்தையும் உணர்த்தின. **(நூற்பா – 359)**

### எச்சங்களின் முடிபு

- ❖ பெயரெச்சமும், வினையெச்சமும், உம்மையெச்சமும், சொல்லெச்சமும், பிரிநிலை எச்சமும், எனவெச்சமும், ஒழியிசை எச்சமும், எதிர்மறை எச்சமும், இசை எச்சமும் என்பது ஒன்பது சொல்லெச்சங்களும் குறிப்பெச்சம் ஒன்றும் ஆகப் பத்து எச்சங்களும் தத்தம் எச்சங்களைக் கொண்டு முடியும். **(நூற்பா – 360)**

  **(எ.கா)**

  1.செய்த சாத்தான் நல்ல சாத்தான் - பெயரெச்சம்
  2.செய்து வந்தான் நல்லன் - வினையெச்சம்
  3.சாத்தானும் வந்தான் - உம்மையெச்சம்
  4.சாத்தனோ –ஓ கொண்டான் - பிரிநிலை எச்சம்
  5.யானோ செய்தேன் - எதிர்மறை எச்சம்

### தொகைநிலைத் தொடர் மொழி

- ❖ பெயர்ச் சொல்லோடு பெயர்ச்சொல்லும், பெயர்ச் சொல்லோடு வினைச்சொல்லும், வேற்றுமை முதலான அறுவகைப் பொருட்புணர்ச்சியின் கண், அவற்றின் உருபுகள் நடுவிலே தொக்கு நிற்ப,
- ❖ இரு சொற்கள் அல்லது பல சொற்கள் தொடர்ந்து ஒரு சொல் போல வருபவை தொகை நிலைத் தொடர் மொழிகளாகும்.

(தொகை என்பது இங்கே உருபு மறைந்து வருதலாகும்.) **(நூற்பா – 361)**

### தொகை நிலைத் தொடர்கள்

- ❖ தொகை நிலைத் தொடர் மொழிகள் வேற்றுமைத் தொகை, வினைத் தொகை, பண்புத்தொகை, உவமைத்தொகை, உம்மைத்தொகை, அன்மொழித் தொகை என ஆறுவகைப்படும். **(நூற்பா – 362)**

**1.வேற்றுமைத்தொகை**

**இரண்டு முதலாம் இடைஆறு உருபும்**
**வெளிப்படல் இல்லது வேற்றுமைத் தொகையே. (நூற்பா – 363)**

- ❖ **எழுவாய்க்கும், விளிக்கும் இடையே நின்ற இரண்டாவது முதலிய ஆறு வேற்றுமை உருபுகளும், வெளிப்படாமல் மறைந்து நிற்கும் தொடர் மொழிகள், வேற்றுமைத் தொகைளாகும்.**

**(எ.கா)**

**1.மொழி கற்றான் - மொழியைக்கற்றான் (ஐ) 2ம் உருபு மறைந்து வருதல்**

**2.சாத்தன் கை - சாத்தனது கை (அது) 6ம் உருபு மறைந்து வருதல்**

**2.வினைத்தொகை**

**காலம் கரந்த பெயரெச்சம் வினைத்தொகை. (நூற்பா – 364)**

- ❖ காலம் காட்டும் வினையுருபுகளான இடைநிலை, விகுதி முதலியன மறைந்து நின்ற பெயரெச்சங்கள் வினைத் தொகைகளாம்.
- ❖ காலங்காட்டும் இடைநிலை, விகுதி முதலிய வினையுருபுகள் தொக்கு வரும், முதனிலை மட்டும் தொகாது வரும்.

**(எ.கா)**

நேற்றுக் கொல்களிறு முன் விடுகணை - இறந்தகால வினைத்தொகை
இன்று கொல் களிறு இப்பொழுது விடுகணை - நிகழ்கால வினைத்தொகை
நாளைக் கொல் களிறு பின்விடு கணை - எதிர்கால வினைத்தொகை

- ❖ இவை விரியுமிடத்துக் கொன்ற, கொல்கின்ற, கொல்லும் எனவும், விட்ட, விடுகின்ற, விடும் எனவும் விரியும்.
- ❖ கொல்களிறு, விடுகணை என்றாற் போல்வன, முக்காலமும் பற்றிவரின், முக்கால வினைத்தொகை எனப்படும்.
- ❖ வருபுனல், தருசுடர் என வினைப்பகுதி விகாரப்பட்டும் வினைத் தொகை வரும்.

**(எ.கா)** அயலகடல்,அடுகளிறு

**3.பண்புத்தொகை**

**பண்பை விளக்கும் மொழிதொக் கனவும்**
**ஒருபொருட்கு இருபெயர் வந்தவும் குணத்தொகை. (நூற்பா – 365)**

- ❖ பண்போடு பண்பிக்கு உள்ள ஒற்றுமையை விளக்குவதற்கு வருகிற ‘ஆகிய’ என்னும் பண்புருபு மறைந்து நிற்பவையும், அப்பண்புருவு தொக்கு நிற்க, ஒரு பொருளுக்குச் சிறப்புப்பெயரும், பொதுப்பெயருமான இரு பெயர்கள் வந்தவையும் பண்புத் தொகைகளாகும்.
- ❖ ஒரு பொருட்கு இரு பெயர் வந்தது இருபெயரொட்டுப் பண்புத் தொகை எனப்படும். இதில் சிறப்புப் பெயர் முன்னும், பொதுப்பெயர் பின்னும் நிற்கும்.
- ❖ ‘குணத்தொகை’ என்று கூறிய சொல்லாற்றலால் ஒரு பொருளுக்கு வரும் அவ்விரு பெயர்களின் நடுவில் ஆகிய என்னும் பண்புருபு தொக்குவரும்.
- ❖ பண்பு எனப் பொதுப்படக் கூறியதால் வண்ணம், வடிவு, அளவு, சுவை முதலிய அனைத்தையும் கொள்ளவேண்டும்.

**(எ.கா)**

1. செந்தாமரை, கருங்குதிரை - வண்ணப்பண்புத் தொகை
   - இவை விரியுமிடத்து செம்மையாகியத் தாமரை என விரியும்.
2. வட்டக்கல், சதுரப் பலகை - வடிவுப் பண்புத்தொகை
   - விரியும்போது வட்டமாகிய கல் என விரியும்.
3. துவர்க்காய், இன்சொல் - சுவைப் பண்புத் தொகை
   - இது விரியும் போது துவர்ப்பாகிய காய் என விரியும்.
4. ஆயன் சாத்தன், சாரைப்பாம்பு- இரு பெயரொட்டுப் பண்புத் தொகை
   - இது ஆயனாகிய சாத்தன் என விரியும்.
5. செந்நிறக் குவளை, கரும்புருவச் சிலை – பன்மொழித் தொகை
   - செம்மையாகிய நிறமாகிய குவளை என விரியும்.

### 4.உவமைத் தொகை

**உவம,உருபுஇலது உவமத் தொகையே. (நூற்பா – 366)**

- ❖ வினை, பயன், மெய், உரு என்பனவற்றைப் பொருளாகக் கொண்டு வரும் உவம உருபு தொக்க தொடர்மொழி உவமைத் தொகை எனப்படும்.

**(எ.கா)**

1. புலிக்கொற்றன், குருவி கூப்பிட்டான் - வினையுவமத்தொகை
   - விரியுமிடத்துப், ‘புலி போலுங் கொற்றன்’ என விரியும்.
2. மழைக் கை, கற்பக வள்ளல் - பயனுவமத் தொகை
   - விரியுமிடத்து ‘மழை போலும் கை’ என விரியும்.
3. துடியிடை, வேய்த்தோள் - மெய்யுவமத் தொகை
   துடிபோலும் இடை என விரியும்.
4. கார் கூந்தல், பவளவாய் - உருவுவமத் தொகை
   - கார் போலுங் கூந்தல் என விரியும்.

5. மரகதக் கிளிமொழி, இருண்மழைக்கை - பன்மொழித் தொடர்
- மரகதம் போலும், கிளிபோலும் மொழி என விரியும்.

**உவம உருபுகள்**

**போலப் புரைய ஒப்ப உறழ**
**மானக் கடுப்ப இயைய ஏய்ப்ப**
**நேர நிகர அன்ன இன்ன**
**என்பவும் பிறவும் உவமத்து உருபே. (நூற்பா – 367)**

- ❖ போல, புரைய, ஒப்ப, உறழ, மான, கடுப்ப, இயைய, ஏய்ப்ப, நேர, நிகர என்னும் செயவென் எச்சமொழிகள் பத்தும்,
- ❖ அன்ன, இன்ன, என்னும் குறிப்புப் பெயரெச்சம் இரண்டும், இவை போல்வனவும் உவம உருபுகளாகும்.
- ❖ 'பிறவும்' என்றதனால் போல, புரைய முதலியவற்றின் அடியாகப் பிறக்கும் மற்றை வினை எச்ச வேறுபாட்டு உருவங்களும், பெயரெச்ச வேறுபாட்டுருவச் சொற்களும்,
- ❖ பொருவ, ஏற்ப, அனைய, இகல, எதிர், சிவண, மலைய முதலிய சொற்களும் உவம உருபுகளாகும்.

**5.உம்மைத் தொகை**

**எண்ணல் எடுத்தல் முகத்தல் நீட்டல்**
**எனும்நான்கு அளவையுள் உம்இலது அத்தொகை. (நூற்பா – 368)**

- ❖ எண்ணலளவை, எடுத்தலளவை, முகத்தலளவை, நீட்டலளவை என்கிற நால்வகை அளவைகளால் பொருள்களை அளக்குமிடத்துத் தொடர்கிற அவ்வளவைப் பெயர்களும் உம்மையாகிய உருபு தொக்கு நிற்பவை, அவ்வும்மைத் தொகைகளாகும்.

**(எ.கா)** ஒன்றே கால், கபில பரணர் எண்ணுலும்மைத் தொகை, - ஒன்றுங்காலும் எனவிரியும்.
கழஞ்சே கால், தொடியே க.:.சு – எடுத்தலும்மைத் தொகை கழஞ்கங்காலும்
கலனே தூணி, நாழியாழாக்கு - முகத்தலும்மைத் தொகை கலனுந்தூணியும்
சாணங்குலம், சாணரை - நீட்டலும்மைத் தொகை சாணும் மங்கலமும்,
சேர, சோழ. பாண்டியர் புலிவில் கெண்டை - பன்மொழித் தொகை
சேரனுஞ், சோழனும், பாண்டியனும் என விரியும்.

- ❖ உம் உருபு இடையில் தொகுவதேயன்றி ஈற்றிலும் தொகும் ஆதலால்,
- ❖ இடையில் தொகும் தன்மையை உடைய வேற்றுமை முதலிய நான்கு தொகைக்குப் பின்னரும்,
- ❖ இறுதியில் மட்டும் தொகும் இயல்பை உடைய அன்மொழித் தொகைக்கு முன்னரும் இதனை வைத்தார்.

**6.அன்மொழித் தொகை**

**ஐந்தொகை மொழிமேல் பிறதொகல் அன்மொழி. (நூற்பா – 369)**

- வேற்றுமைத்தொகை முதலிய ஐவகைத் தொகைநிலைத் தொடர்மொழிகளுக்கும் புறத்தே அவையல்லாத பிற மொழிகள் தொக்கு வருபவை அன்மொழித் தொகை எனப்படும்.

**தொகைநிலைத் தொடர் மொழிகளில்**

வேற்றுமைத்தொகை – புங்குழல்

வினைத்தொகை - தாழ்குழல்

பண்புத்தொகை - கருங்குழல்

உவமைத்தொகை - துடியிடை

**பொருள் சிறக்கும் இடங்கள்**

**(எ.கா)**

குடம் வனைந்தான் - முன்மொழிகளில் பொருள் சிறந்தன

நிலம் உழுதான் - பின்

கபிலபரணர் - அனைத்து மொழிகளிலும்

முன்மொழி, பின்மொழி, அனைத்து மொழி, அனைத்து மொழிக்கும் புறத்தில் வரும் மொழி ஆகிய இந்நான்கு இடங்களுள் ஒன்றில் தொகைநிலைத் தொடர்ப்பொருள் சிறந்து நிற்கும். **(நூற்பா– 370)**

**இடத்தொகை பெயர்த்தொகைகட்கு வேறுபாடு அறியும் முறை**

- தொகை நிலைத் தொடர்களின் இடையே வல்லின ஒற்றுவரின் அது இடத்தின் கண் தொக்க தொகையாகும்.
- இடையில் மெல்லொற்று வந்தால் அது பெயரின் கண்ணே தொக்கத் தொகையாகும்.

**(நூற்பா – 371)**

**(எ.கா)**

வடுகக்கண்ணன் - வடுகங்கண்ணன்

துளுவச்சாத்தான் - துளுவஞ்சாத்தான்

**உம்மைத் தொகைக்குப் புறனடை**

- உயர்திணையில் ஒருமை குறித்து வரும் உம்மைத்தொகைகள் ரகரவொற்று, கள் என்னும்பலர்பால் விகுதிகளைப் பெற்றுவரும்.

**(எ.கா)** கபில பரணர், கல்லாட மாமூலர்:

சேர, சோழ, பாண்டியர், தேவன் தேவிகள் என வரும்

- ❖ ‘பலர் ஈறே’ என்னும் தோற்றத்தால், அ·றிணை ஒன்றன்பாலில் வரும் உம்மைத் தொகைகளும், பொதுமையாக உயர்திணை அ·றிணை ஒருமை பற்றி வரும் உம்மைத் தொகைகளும் தத்தம் பன்மையீறாகவே வரவேண்டும் என்ற நியதி இல்லாமல்

உண்மை இன்மைகள், உண்மை இன்மை,
இராப் பகல்கள் , இராப்பகல்:
தந்தைதாயர், தந்தை தாய்கள், தந்தை தாய்:
சாத்தன் சாத்தியர், சாத்தன் சாத்திகள், சாத்தன் சாத்தி,
- எனப் பன்மை ஈற்றாலும்: இயல்பான ஒருமை ஈற்றாலும் வரும். **(நூற்பா – 372)**

**(எ.கா)**

தெய்வ வணக்கம் - தெய்வத்தை வணங்கும் தெய்வத்திற்கு வணங்கும்

**தொகைநிலைத் தொடர்மொழிகள் பலபொருள் படுதல்**

**(எ.கா)**

சொல் இலக்கணம் (அது,கு) தற்சேர்ந்தார் (ஐ,ஓடு)

- ❖ வேற்றுமை உருபு போன்றவை தொக்கு நிற்குமிடங்களில் பொருளால மயங்கி நிற்கும் இயல்பையுடைய தொடர்மொழிகள் இரண்டாம் வேற்றுமை முதல் ஏழாம் வேற்றுமை ஈறான பொருள்களில் மயங்கி வரும் எனக் கூறுவர். **(நூற்பா – 373)**

**தொகநிலைத் தொடர்மொழி**

- ❖ வினைமுற்று, பெயரெச்சம், வினை எச்சம், எழுவாய், விளி என்னும் ஐவகைப் பொருள் பற்றிப் புணரும் புணர்ச்சியும்,
- ❖ இரண்டாம் வேற்றுமை முதலிய ஆறு வேற்றுமை உருபுகளும் விரிந்து நிற்கப் பெயர் வினைகள் புணர்ந்து வரும் புணர்ச்சியும்,
- ❖ இடைச் சொற் புணர்ச்சியும், உரிச்சொற் புணர்ச்சியும், ஒரு சொல் அடுக்கி வரும் புணர்ச்சியும் ஆகிய இவ்வொன்பதும் தொகாநிலைத் தொடர்மொழிகள் ஆகும்.

**(எ.கா)**

1. உண்டான் சாத்தன், குழையன் கொற்றன் - வினை முற்றுத் தொடர்
2. உண்ட சாத்தன், கரிய சாத்தன் - பெயரெச்சத் தொடர்
3. உண்டு வந்தான், உழுதன்றியுண்ணான் - வினையெச்சத் தொடர்
4. சாத்தன் வந்தான் - எழுவாய்த்தொடர்

5. சாத்தாவா - விளித்தொடர்
6. குடத்தை வனைந்தான்
   வாளால் வெட்டினான்
   இரப்போர்க் கீந்தான்
   மணியினிழிந்தான்
   சாத்தனது கை
   மணியின் கணொளி - வேற்றுமைத் தொகா நிலைத் தொடர்
7. மற்றொன்று - இடைச்சொற்றொடர்
8. நனிபேதை - உரிச்சொற்றொடர்
9. பாம்பு பாம்பு – அடுக்கத் தொடர் **(நூற்பா – 374)**

**வழாநிலை வழுவமைதி**

- ❖ இருதிணை ஐம்பால் மூவிடம், முக்காலம், வினா, விடை, மரபு ஆகிய இவ்வேழும் தத்தம் முறை மயங்கி வருவது வழு எனப்படும்.
- ❖ மரபு எனப்படுவது தொன்று தொட்டு முன்னோரால் வழங்கப்பட்டு வரும் முறைமையாகும்.
- ❖ வழாநிலை என்பது முடிக்கப்படும் சொற்களோடு முடிக்கும் சொற்கள் மாறுபாடு இல்லாமல் தொடர்ந்து நிற்பது ஆகும்.
- ❖ அவ்வாறன்றி மாறுபட்டு நிற்பது வழு ஆகும்.
- ❖ வழு என்றால் இலக்கணக் குற்றம் உடையதாகும்.

**(எ.கா)** அவன் வந்தது - திணை வழு
அவன் வந்தாள் - பால் வழு
யான் வந்தான் - இடவழு - அவன் வந்தேன்
நாளை வந்தான் - கால வழு - நேற்று வருவேன்

‘கறக்கின்ற எருமை பாலோ சினையோ’ – வினா வழு – சேவல் எத்தனை முட்டைகள் இட்டுள்ளன?

‘சேலத்திற்கு வழியாது எனின், செவலைமாடு நூறு பணம் என்பது - விடை வழு
யானை மேய்ப்பானை இடையன் என்பது - மரபு வழு **(நூற்பா – 376)**

**திணையொடும் பாலொடும் வினாவிடைகள் வழுவாமல் காத்தல்**

**(எ.கா)**

வினா வழுவாமல் காத்தல் - குற்றியோ,மகனோ எனின் - அவ்விடத்து தோன்றுகின்ற “ வரு” பொது சொல்லால் வினாவல்

விடை வழுவாமல் காத்தல - குற்றியோ,மகனோ துணியப்பட்டது – மகன் அன்று: என கூறுதல்

- ❖ திணை பற்றி வரும் ஐயத்தையும், பால் பற்றி வரும் ஐயத்தையும் அவ்வவற்றின் பொதுச் சொல்லினாலும் இன்னும் எனத் துணிந்த பொருளின் மேல் அல்லாத தன்மையை வைத்தும் விளங்கச் சொல்லுவர். **(நூற்பா – 376)**

**திணை வழுவமைதி**

**(எ.கா)**

ஒரு பசுவை என் லட்சுமி வந்துவிட்டாள் என்பது மகிழ்ச்சியினால் அஃறிணை உயர்திணையாயிற்று

- ❖ உயர்திணை எழுவாயைச் சார்ந்து வருகின்ற அஃறிணைப் பொருளாதி ஆறும், அவ்வுயர்திணையோடு சார்த்திக் கூறின் அவ்வுயர்திணை முடிபைப் பெறும். **(நூற்பா – 377)**

**திணைபால் மரபு வழுவமைதி**

**(எ.கா)**

பால் - தாய் மகிழ்ச்சியால் புதல்வனை என்னம்துும வந்தாள் என்பது ஆண்பால் பெண்பால் ஆயிற்று

- ❖ திணைகளும், பால்களும், வெவ்வேறு வினைகளுக்குரிய பல பொருள்களும் ஒன்றோடொன்று கலந்து ஒரு தொடராக வருமாயின.
- ❖ அவை சிறப்பின் காரணமாகவும், மிகுதிகாரணமாகவும், இழிவு காரணமாகவும் ஒரு முடிவைப் பெறும். **(நூற்பா – 378)**

**திணைபால் வழுவமைதி**

**(எ.கா)**

பால் - இழிவு காரணம்

வீரம் இல்லாத கோழையை நோக்கி இவன் பெண் என்பது ஆண்பால் பெண்பாலானது.

- ❖ மகிழ்ச்சி காரணமாகவும், உயர்வு காரணமாகவும், சிறப்பு காரணமாகவும் , சினம் காரணமாகவும், எள்ளல் காரணமாகவும், பாலும், திணையும் வழுவி வருதல் உண்டு. அவ்வாறுவரினும் இயல்பாகவே கருதப்படும். **(நூற்பா – 379)**

**பால் இட வழுவமைதி**

**(எ.கா)**

வெயில் எல்லாம் மறைத்தது மேகம் - வெயில் என்னும் ஒருமைப்பால் எல்லாம் என்னும் பன்மை சொல் சேர்த்துக் கூறப்பட்டது.

- ❖ ஒருமைப்பாலில் பன்மைபாற் சொல்லையும், பன்மைப் பாலில் ஒருமைப்பாற்சொல்லையும்,

- ❖ மூவிடங்களில் ஒன்றற்குரிய சொல்லில் பிறவிடங்கட்கு உரிய சொற்களையும் தழுவிக் கூறுதல் உண்டு: அவை வழுவமைதிகளாகக் கொள்ளப்படும். **(நூற்பா – 380)**

### இடம் வழுவாமற் காத்தல்

- ❖ தரல், வரல், கொடை, செலல் என்னும் இந்நான்கு சொற்களையும் படர்க்கை ஏற்கும்.
- ❖ முதலில் உள்ள தரல், வரல் என்னும் இரண்டையும் தன்மை, முன்னிலைகள் ஏற்கும்.

**(எ.கா)** அவனுக்குத் தந்தான், அவனிடத்து வந்தான்:
அவனுக்குக் கொடுத்தான், அவனிடத்துச் சென்றான் - நான்கும் படர்க்கையைச் சேர்ந்தன.

எனக்குத் தந்தான், என்னிடத்து வந்தான் - தன்மை.
உனக்குத் தந்தான், உன்னிடத்து வந்தான் - முன்னிலை.

- ❖ தரல், வரல் என்னும் இரண்டையும், தன்மை, முன்னிலைக்கும் கூட்டி உரைத்தமையால், கொடை, செலல் என்னம் இரண்டும் படர்க்கைக்கே சிறந்தன.
- ❖ எஞ்சியுள்ள தரலும், வரலும் படர்க்கைக்குச் சிறந்தன அல்ல என்பதும், கொடையும் செலலும் தன்மை முன்னிலைகளுக்கு வராது என்பதும் பெறப்படும்.
- ❖ எனக்குக் கொடுத்தான், நின்பால் வந்தன என்பன போல் வரும் சொற்கள் வழுவமைதியாகும். **(நூற்பா – 381)**

### காலம்

**இறப்பு எதிர்வு நிகழ்வு எனக் காலம் மூன்றே. (நூற்பா – 382)**

- ❖ இறப்பு, நிகழ்வு, எதிர்வு என காலம் மூவகைப்படும்

### கால வழுவமைதி

- ❖ மூன்று காலங்களிலும் தமது தொழில் இடையறாது ஒரு தன்மையாய் நிகழும் பொருள்களை நிகழ்காலத்தால் கூறுவர்.

**(எ.கா)**

உணவு உண்கின்ற ஒருவனை விரைவு காரணமாக உண்டாயோ எனக் கேட்டல். உண்டேன் உண்டேன் என இறந்த காலத்தில் கூறுவான் **(நூற்பா – 383)**

- ❖ விரைவு காரணமாகவும், மிகுதி காரணமாகவும், தெளிவு காரணமாகவும், இயல்பாகவும், மூன்று காலங்களும் ஒன்று மற்றொன்றாகக் கூறப்படுதலும் உண்டு.
- ❖ அவை பொருந்துமிடத்து ஏற்கப்படும். **(நூற்பா – 384)**

**அறுவகை வினா**

**அறிவு அறியாமை ஐயுறல் கொளல்கொடை**
**ஏவல் தரும்வினா ஆறும் இழுக்கார். (நூற்பா – 385)**

❖ அறிதல், அறியாமை, ஐயுறுதல், கொளல், கொடுத்தல், ஏவல் ஆகிய இவ்வறுவகைப் பொருளையும் பற்றி வரும் வினாக்களைப் புலவர்கள் களையாது ஏற்றுக் கொள்வர்.

**(எ.கா)** ஆசிரியன் இப்பாடற்குப் பொருள் யாது? - அறிவினா
மாணாக்கன் இப்பாடற்குப் பொருள் யாது? – அறியாவினை
குற்றியோ மகனோ ? - ஐயவினா.
பயறு உளதோ வணிகீர் - கொளல் வினா
சாத்தனுக்கு ஆடை இல்லையா? - கொடைவினா
சாத்தா உண்டாயா? - ஏவல் வினா

**எண்வகை விடை**

**சுட்டு மறைநேர் ஏவல் வினாதல்**
**உற்றது உரைத்தல் உறுவது கூறல்**
**இனமொழி எனும்எண் இறையுள் இறுதி**
**நிலவிய ஐந்தும்அப் பொருண்மையின் நேர்ப. (நூற்பா – 386)**

❖ சுட்டுதல், எதிர்மறுத்தல், உடன்படுதல், ஏவுதல், வினாதல், உள்ளது உரைத்தல், உறுவது கூறல், இனம் மொழிதல் என்னும் எண்வகை விடைகளில், ஈற்றில் உள்ள ஐந்தும் அவ்விடைப் பொருளைத் தருதலால் புலவர்கள் அவற்றை விடைகளாகவேக் கொள்வர்.

❖ **(எ.கா)** தில்லைக்கு வழியாது? -‘இது’ எனல் - சுட்டு விடை

இது செய்வாயா? - இதை செய் - சுட்டு விடை
- ‘செய்யேன்’ – மறைவிடை
- செய்வேன் - நேர் விடை
” - நீ செய் - ஏவல் விடை
” - செய்வேனோ? – வினா எதிர் விடை
” - உடம்பு நொந்தது – உற்றது உரைத்தல் விடை.
” - உடம்பு நோம் - உறுவது கூறல் விடை
” - மற்றையது செய்வேன் - இனமொழி விடை

**வினாவிடைகளில் முதல் சினை வழுவாமை**

**(எ.கா)**

கண் பிறழ்ந்ததோ கயல் பிறழ்ந்ததோ.

- ❖ வினாவும் பொழுதும், விடை கூறும் பொழுதும் சினையும் முதலும் ஒன்றென வைத்து முதலொடு சினையும், சினையொடு முதலும் மயங்கும்படி சொல்லப்படாது. **(நூற்பா – 387)**

**மரபு**

**எப்பொருள் எச்சொல்லின் எவ்வாறு உயர்ந்தோர்**
**செப்பினர் அப்படிச் செப்புதல் மரபே. (நூற்பா – 388)**

- ❖ எந்த ஒரு பொருளை யாதொரு சொல்லால் எம் முறையினால் அறியுடையார் கூறினரோ, அப்பொருளை அச்சொல்லால் அம்முறைப்படிச் சொல்லுதல் மரபு எனப்படும்.

**(எ.கா)**

கோழிக்குஞ்சு
யானைக் குட்டி
கீரிப் பிள்ளை

**மரபு வழா நிலை**

**(எ.கா)**

அடிசில் என்பது – உண்பன, தின்பன, நக்குவன, பருகுவன என எல்லாவற்றிற்கும் பொது அதனால் அடிசில் அயின்றார் என்பதே பொதுவினை

- ❖ வேறு வேறு வினைகளுக்கு உரிய பல பொருள்களையும் ஒருங்கு தழுவி நிற்கும் ஒரு பொதுச் சொல்லும்,
- ❖ அவற்றின் சிறப்புச் சொற்களாக எண்ணி நிற்கும் பல சொற்களும்,
- ❖ ஒன்றிற்கு மட்டுமே உரிய சிறப்பு வினையை வேண்டாமல், எல்லாவற்றிற்கும் உரியதான ஓர் பொதுவினையை வேண்டி நிற்கும். **(நூற்பா – 389)**

**சிறப்பு வினை வழாநிலை**

**(எ.கா)**

மாவீழ் மலர் எனின் - வண்டு என்பது சார்பால் விளங்கிற்று.

தேர், கரி, மா, காலாள், மாச்சதுரங்கம் - எனின் - இனத்தால் - குதிரை குறித்தது.

- குறித்த பொருளை விளக்குவதற்கு வேண்டிய வினையும் சார்பும், இனமும், இடமும், பொருந்திப்பொருள் விளங்காத பலபொருள் ஒரு சொல்லைச் சிறப்புச் சொல்லோடு கூட்டிக் கூறுவர் அறிஞர். **(நூற்பா – 390)**

**ஒலி வேறுபாட்டால் பொருள் துணிதல்**

- எழுத்தின் தன்மை வேறுபடாமல், பொருள் வேறுபட்டுச் சொல்லும் பொருளும் ஐயுற நிற்கும் தொடர் மொழிகள்.
- அக்குறிப்பிட்ட சொற்களின் இறுதியும் முதலும் தோன்ற ஓசையை அறுதியிட்டுப் பிரித்துக் கூறும் மறை வேறுபாட்டினால் பொருளின் தெளிவைப் பெறும். **(நூற்பா – 391)**

**(எ.கா)** செம்பொன்பதின்றொடி

செம்பொன் - பதின்தொடி என ஓசை பிரித்துக் கூறின்.

செம்பொன் - பத்துப்பலம் எனப் பொருள்படும்.

ஆற்றுக்கரை - ஆறுகரை - ஆற்றுக்கு அரை

**மரபு வழாநிலையும், வழுவமைதியும்**

- ஒரு பொருளின் மேல் பல பெயர்கள் வருமானால் பொருள் ஒன்றே என்பது தோன்ற அவற்றின் இறுதியில் ஒரு முடிக்கும் சொல்லைப் பயனிலையாகக் கொடுத்துக் கூறுவர்.

**(எ.கா)** பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதியிவன்

- சாத்தன் என்ற ஒரு பொருளைக் குறித்து வந்த பல பெயர்கள் ஈற்றில் ‘வந்தான்’ என்னும் ஒரு வினை கொண்டன. **(நூற்பா – 392)**

**இயற்பெயர் வரும் இடம்**

**திணைநிலம் சாதி குடியே உடைமை**
**குணம்தொழில் கல்வி சிறப்பாம் பெயரொடு**
**இயற்பெயர் ஏற்றிடின்பின்வரல் சிறப்பே. (நூற்பா – 393)**

**(எ.கா)**

ஆசிரியன் அமிழ்தன் - அமிழ்தன் ஆசிரியர் - கல்வி

கரியன் கம்பன் - கம்பன் கரியன் - குணம்

ஊர்கிழான் ஓணன் - ஓணன் ஊர்கிழான் - குடி

- ஐந்திணையும், நாடும், குலமும், குடியும், உடைமையும், பண்பும், தொழிலும், கல்வியும் முதலியன பற்றிவரும் சிறப்புப் பெயரோடு இயற்பெயரும் ஒருங்கு வருமானால் அத்தொடரில் இயற்பெயர் பின்வருதலே சிறந்த மரபு ஆகும்.

- படர்க்கை இடத்திற்குரிய உயர்திணை, அஃறிணைப் பொதுப்பெயர்களோடு சுட்டுப் பெயர் சேரும் போது அங்கு முடிக்குஞ்சொல் வினையாக வருமானால் அம்மூவகைப் பெயருக்கும் பின்னால் சுட்டுப்பெயர் வர வேண்டும்.
- அம் முடிக்கும் வினைச்சொல் இல்லையானால் சுட்டுப் பெயர் மூவகைப் பெயர்க்கு முன்னும், பின்னும் வரும், இம்மரபு உலக வழக்கிற்கு உரியது.

**(எ.கா)**

நம்பி வந்தான் அவனுக்குச் சோறிடுக.

எருது வந்தது அதற்குப் புல் இடுக.

- செய்யுளில் வரையரை இன்றி வேண்டியவாறே வரும். **(நூற்பா – 394)**

## அடுக்குத் தொடர்

**அசைநிலை பொருள்நிலை இசைநிறைக்கு ஒருசொல்**
**இரண்டு மூன்றுநான்கு எல்லைமுறை அடுக்கும். (நூற்பா – 395)**

- ஒரு சொல்லானது அசைநிலை பற்றியும், விரைவு, வெகுளி, உவகை, அச்சம், அவலம் முதலிய பொருள்நிலை பற்றியும் முறையே இரண்டு, மூன்று, நான்கு முறைகள் அடுக்கிவரும்.

**(எ.கா)** அசைநிலை – அன்றே அன்றே.

### பொருள்நிலை

| | | |
|---|---|---|
| உண்டேன் உண்டேன் | - | விரைவு (போ,போ,போ) |
| எறி எறி எறி | - | வெகுளி (எய்,எய்) |
| வருக வருக | - | உவகை (பொலிக,பொலிக,பொலிக) |
| பாம்பு பாம்பு | - | அச்சம் (தீத்,தீத்,தீத்) |
| உய்யேன் உய்யேன் | - | அவலம் **(நூற்பா – 395)** |

### இசைநிறை

‘பாடுகோ பாடுகோ பாடுகோ பாடுகோ’

### மரபு வழா நிலை

இரட்டைச் சொற்கள் அவ் இரட்டிப்பினின்றும் பரித்து தனியாக ஒவியாது.

**(எ.கா)** “சல சல மும்மதம் பொழிய” **(நூற்பா – 396)** (குறுகுறு, கலகல)

**ஒரு பொருட் பல் பெயர்**

- ஒரு பொருளின் மேல் பல பெயர்களைக் கூறும் போது அப்பொருளின்றும் பிரிதல் இல்லாதவைகளைப் புலவர்கள் நீங்காமல் ஏற்றுக் கொள்வர். **(நூற்பா – 397)**

**(எ.கா)** ஆசிரியன் பேரூர்கிழான் சாத்தன் வந்தான்.

**மரபு வழுவமைதி**

- ஒரு பொருளைக் குறித்துவரும் பல சொற்கள் அவ்வாறு வருவதற்கு ஒரு குறிப்பிட்ட காரணம் இல்லையானாலும், சிறந்த நிற்பதால் அவைமு என்று நீக்கப்படமாட்டாது. **(நூற்பா – 398)**

**(எ.கா)** மீ மிசை ஞாயிறு. ஊயர்ந்து ஓங்கு பெருவரை

**மரபு வழுவாமல் காத்தல்**

**(எ.கா)**

நீலயானை, ஆகாயப்பு, முயற்கோடு

- இன்ன அளவினது என்று வரையறுத்து உணரப்படும் பொருளையும்,
- உலகில் இல்லாத பொருளையும் வினைப்படுத்துக் கூறும்போது முற்றும்மை கொடுத்துக் கூறவேண்டும்.

**(எ.கா)** தமிழ்நாட்டு மூவேந்தரும் வந்தார்- இனைத்தென்று அறிபொருட்கள் முயற்கோடு - உலகில் இல்லாப் பொருள். **(நூற்பா – 399)**

**மரபு வழுவமைதி**

- உலக வழக்கில், செயப்படுபொருளைக் கருத்தாவைப் போல வைத்து, அதன்மேல் அக்கருத்தாவின் வினையை ஏற்றிக் கூறுதலும் உண்டு. **(நூற்பா – 400)**

**(எ.கா)** இம்மாடு யான் கொண்டது.

இவ்வீடு யான் இருந்தது – நிலம்

இந்த நாள் யான் பிறந்தது – காலம்

**மரபு வழுவாமல் காத்தலும் மரபு வழுவமைதியும்**

பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் முதலிய ஆறு அடையெடுத்து வரும் மொழிகள், உலக வழக்கிலும், செய்யுள் வழக்கிலும் இனம் உள்ளவை, இனம் இல்லாதவை என இருவகைப்படும்.

| (எ.கா) | **இன முள்ளவை** | **இனம் இல்லவை** |
|---|---|---|
| | நெய்க்குடம் | உப்பளம் - பொருள் |
| | குளநெல் | ஊர்மன்று - இடம் |

பூமரம் நாளரும்பு - காலம்

இலைமரம் - சினை

செம்போத்து – குணம்

தோய்தயிர் - தொழில் **(நூற்பா – 401)**

**மரபு வழுவாமல் காத்தல்**

- பொருள்முதல் ஆறு அடைசேர் மொழியானது இனத்தைத் தருதலேயனறி, அவ்விடத்திற்குப் பொருந்தினால் இனம் அல்லாததையும் தரும். **(நூற்பா – 402)**

**(எ.கா)** பாவஞ்செய்தான் நரகம் புகும், என்றால் புண்ணியம் செய்தால் அவர்க்கம் புகும் என்பது பெறப்படுகிறது.

**மரபு வழுவாமல் காத்தலும் மரபு வழுவமைதியும்**

- ஒரு அடையும், ஒரு சினையும், ஒரு முதலும் ஒன்றை ஒன்று சிறப்பித்து வருதலும்,
- இரண்டு அடைமொழிகள் முதலைச் சிறப்பித்து வருதலும் உலக வழக்கு நடையாகும்.
- இரண்டு அடைமொழிகள் சினையைச் சிறப்பித்து வருதலும், இவ்வரம்பு பிறழ்ந்து வருதலும் செய்யுள் நடை ஆகும். **(நூற்பா – 403)**

**(எ.கா)**

வேற்கை முருகன், நிலப்பு – உலகவழக்கு- செங்கால் நாரை சிறுகருங்காக்கை – செய்யுள் வழக்கு

**மரபு வழுவமைதி**

இயற்கை, செயற்கை என்னும் இருவகைப் பொருள்களில் இயற்கைப் பொருளை ஆக்கமும், காரணமும் கொடாமல் இத்தன்மையது என்று சொல்லுதல் வேண்டும்

**(எ.கா)** நிலம் வலிது, தீ வெய்து. **(நூற்பா – 404)**

**மரபு வழுவாமற் காத்தலும் வழுவமைதியும்**

**செயற்கைப் பொருளானது**

**(எ.கா)**

கடுவும் கைபிடி எண்ணெயும் பெற்றமையால் மயிர் நல்லவாயின.

1. காரணச்சொல் முன் வர ஆக்கச் சொல் பின்வரப் பெற்றும்,
2. காரணச் சொல் மறைந்து நிற்க ஆக்கச் சொல் வரப் பெற்றும்,
3. ஆக்கச் சொல் மறைந்து நிற்கக் காரணச் சொல்வப்பெற்றும்.
4. ஆக்கம் காரணம் என்னும் இருவகைச் சொல்லும் மறைந்தும் வரப்பெறும். **(நூற்பா – 405)**

**மரபு வழுவாமல் காத்தல்**

**(எ.கா)**

பயிறு உண்டோ வணிகரே என்ற வாக்கு உளுந்து, துவரை, உண்டு இனம் கூறுதல்

❖ தம்மிடம் இல்லாத பொருள்களை இல்லை எனக் கூறப்புகுமிடத்து, வினாவப் பட்டதற்கு இனமாகத் தம்மிடம் உள்ள பொருளைக் கூறி,' அதனை இல்லை' என உணர்த்தியும்,

❖ உள்ள பொருளாயின, 'இன்ன அளவு உண்டு' என்று சுட்டியும் வினாவும் விடையுமாகிய சொல் சுருங்குதற் பொருட்டு உரைப்பர். **(நூற்பா – 406)**

**ஈ தா கொடு**

**ஈதா கொடுஎனும் மூன்றும் முறையே**
**இழிந்தோன் ஒப்போன் மிக்கோன் இரப்புரை. (நூற்பா – 407)**

❖ தா, கொடு என்னும் மூன்று சொற்களும் முறையே இழிந்தவனும், ஒப்பவனும், உயர்ந்தவனும் கூறும் இரப்பு உரைகள் ஆகும்.

**(எ.கா)**

தந்தையே ஈ - இழிந்தோன் இரப்பு
தோழா தா - ஒப்போன் இரப்பு
மைந்தா கொடு - உயர்ந்தோன் இரப்பு

**மரபு வழுவமைதி**

"வெளிப்படையாக இல்லாமல் குறிப்பால் பொருள் அறியப்படும் சொற்களும் சில உண்டு"

**(எ.கா)** "குழை கொண்டு கோழி எறியும் வாழ்க்கையர்"

- செல்வ வாழ்க்கையர் என்பது குறிப்பினால் உணரப்பட்டது. **(நூற்பா – 408)**

❖ அஃறிணையிடத்துக் கேளாதனவற்றைக் கேட்பன போலவும், பேசாதனவற்றைப் பேசுவன போலவும், இயங்காதவைற்றை இயங்குவன போலவும், இத்தொழில்கள் அல்லன பிற செய்யாதனவற்றைச் செய்வன போலவும் கூறப்படும்.

**(எ.கா)** "நன்னீரை வாழி அனிச்சமே" - கேளாதது கேட்டது போலச் சொல்லப்பட்டது
"பகைமையும் கேண்மையும் கண்ணுரைக்கும் - பேசாதது பேசுவது போலச் சொல்லப்பட்டது
"இவ்விழி அவ்வூர்க்குப் போகும்" - நடவாதது நடப்பது போலச் சொல்லப்பட்டது.
"தன்னெஞ்சே தன்னைச் சுடும்" - செய்யாதது செய்வது போலச் சொல்லப்பட்டது. **(நூற்பா – 409)**

**பொருள் கோள்**

**பொருள் கோளின் பெயரும், தொகையும்**

**யாற்றுநீர் மொழிமாற்று நிரனிறை விற்பூண்**
**தாப்பிசை அளைமறி பாப்புக் கொண்டுகூட்டு**
**அடிமறி மாற்றெனப் பொருள்கோள் எட்டே. (நூற்பா – 411)**

செய்யுளில் பொருள் அமைந்து நிற்கும் முறையே பொருள்கோள் எனப்படும்.

1. யாற்றுநீர்ப் பொருள் கோள்
2. மொழி மாற்றுப் பொருள் கோள்
3. நிரல் நிறைப் பொருள் கோள்
4. விற்பூட்டுப் பொருள் கோள்
5. தாப்பிசைப் பொருள் கோள்
6. அளைமறி பாப்புப் பொருள் கோள்
7. கொண்டு கூட்டுப் பொருள் கோள்
8. அடிமறி மாற்றுப் பொருள் கோள்

என பொருள்கோள் எட்டு வகைப்படும்.

**1. யாற்றுநீர்ப் பொருள்கோள்**

**மற்றைய நோக்காது அடிதொறும் வான்பொருள்**
**அற்றற்று ஒழுகும.்.து யாற்றுப் புனலே. (நூற்பா – 412)**

❖ மொழிமாற்று முதலிய மற்றைய பொருள் கோள்களைப் போலப் பிறழ்ந்து செல்லாமல், யாற்று, நீர் ஒழுக்கைப் போல அடிதோறும் சிறந்தபொருள் அமைத்து நடப்பது யாற்று நீர்ப் பொருள்கோள் ஆகும்.

**(எ.கா)** “சொல்லரும் சூற்பசும் பாம்பின் தோற்றம் போல்
மெல்லவே கருவிருந்து ஈன்று மேலலார்”

**2. மொழிமாற்றுப் பொருள் கோள்**

**ஏற்ற பொருளுக்கு இயைபு மொழிகளை**
**மாற்றி ஓரடியுள் வழங்கல் மொழிமாற்றே. (நூற்பா – 413)**

❖ ஏற்ற இரண்டு பயனிலைகளுக்குப் பொருந்தும் மொழிகளை மாற்றி, ஏலாத பயனிலைகளுக்குத் தனித்தனியே கூட்டி, ஓரடிக்குள் வழங்குவது மொழிமாற்றுப் பொருள் கோள் எனப்படும்.

**(எ.கா)** “சுரையாழ அம்மி மிதப்ப வரையனைய,
யானைக்கு நீத்து முயற்கு நிலை என்ப,
கானக நாடன் சுனை”

**3.நிரல் நிறைப் பொருள்கோள்**

**அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை**
**பண்பும் பயனும் அற**

**பெயரும் வினையுமாம் சொல்லையும் பொருளையும்**
**வேறு நிரனிறீஇ முறையினும் எதிரினும்**
**நேரும் பொருள்கோள் நிரனிறை நெறியே. (நூற்பா – 414)**

- ❖ பெயரும் வினையுமாம் சொல்லையும் அவை கொள்ளும் பெயரும் வினையுமாகிய பயனிலைகளையும் வேறு வேறு வரிசையாக நிறுத்தி, முறையாகவேனும் எதிராகவேனும் இதற்கு இது பயனிலை என்னும் பொருள்படக் கூறுவது நிரல் நிறைப் பொருள்கோள் ஆகும்.

**4.பூட்டுவிற் பொருள்கோள்**

**எழுவாய் இறுதி நிலைமொழி தம்முள்**
**பொருள்நோக்குடையது பூட்டுவில் ஆகும். (நூற்பா – 415)**

- ❖ ஒரு செய்யுளில் முதலிலும் இறுதியிலும் நிற்கும் சொற்கள் தம்முன் பொருளை நோக்கி அமைந்திருப்பது பூட்டுவிற் பொருள் கோள் ஆகும்.

- ❖ **(எ.கா)** "திறந்தடுமின் தீயவை பிற்காண்டும் மாதர்

------------------------------------------------------------------------
கண்ணாரக் காணாகி கதவு.

**5.தாப்பிசைப் பொருள்கோள்**

**இடைநிலை மொழியே ஏனையீ ரிடத்தும்**
**நடந்து பொருளை நண்ணுதல் தாப்பசை. (நூற்பா - 416)**

- ❖ ஒரு செய்யுளின் இடையில் நிற்கும் சொல்லானது அதன் முதலினும், ஈற்றினும் சென்று இயைந்து பொருள்தருவது தாப்பிசைப் பொருள்கோள் ஆகும்.

**(எ.கா)** "உண்ணாமை உள்ள துயிர்நிலை: ஊனுண்ண
அண்ணாத்தல் செய்யா தளறு"

**6.அளைமறி பாப்புப் பொருள்கோள்**

**செய்யுள் இறுதி மொழியிடை முதலினும்**
**எய்திய பொருள்கோள்அளைமறி பாப்பே. (நூற்பா – 417)**

❖ ஒரு செய்யுளின் இறுதியில் நின்ற சொல், அதன் இடையிலும், பின்னர் முதலிலும் சென்று இயைந்து பொருள் தருவது அளைமறிபாப்புப் பொருள்கோள் எனப்படும்.

❖ **(எ.கா)** “தாழ்ந்த உணர்வினராய்த் தாளுடைந்து

------------------------------------------------------------

நெறிமுன்னி முயலா தாரே

**7. கொண்டு கூட்டுப் பொருள்கோள்**

**யாப்படி பலவினும் கோப்புடை மொழிகளை**
**ஏற்புழி இசைப்பது கொண்டு கூட்டே. . (நூற்பா – 418)**

❖ செய்யுள் அடிகள் பலவற்றினும் ஆக்கப்பட்டுள்ள சொற்களை எடுத்துப் பொருளுக்கு ஏற்ற இடங்களில் கூட்டியுரைப்பது, கொண்டு கூட்டுப் பொருள்கோள் எனப்படும்.

❖ **(எ.கா)** “ தெங்கங்காய் போலத் திரண்டுருண்ட பைங்கூந்தல்

வெண்கோழி முட்டை உடைத்தன்ன மாமேனி”

**8.அடிமறி மாற்றுப் பொருள்கோள்**

**ஏற்புழி எடுத்துடன் கூட்டுறும் அடியவும்**
**யாப்பீறு இடைமுத லாக்கினும் பொருள் இசை**
**மாட்சியும் மாறா அடியவும் அடிமறி. (நூற்பா – 419.)**

❖ பொருளுக்குப் பொருந்துமிடத்தில் எடுத்துக் கூட்டியுரைக்கும் அடியை உடையனவும், யாதேனும் ஓர் அடியை எடுத்து அச்செய்யுளின் இறுதி, நடு, முதல் இடங்களில் கூட்டிய போதும் பொருள் மாட்சியும், இசையும் மாறாது நிற்பனவும் அடிமறி மாற்றுப் பொருள்கோள் ஆகும்.)

**(எ.கா)** “ நடுக்குற்றுத் தற்சேர்ந்தார் துன்பத் துடையார்

------------------------------------------------------------------

விடுக்கும் வினையுலந்தக் கால்”

அடிகளை ஏற்குமிடங்களில் மாற்றிக் கூட்டிப் பொருள் கொள்ள நின்றது.

“மாறாக் காதலர் மலைமறந் தனரே

-----------------------------------------------------

கூறாய் தோழியான் வாழு மாறே”

- இச் செய்யுளில் எந்த அடியை எங்கு மாற்றிப் பொருள் கொள்ளினும் பொருளும், ஓசையும் வேறுபடாது.

**தொகுப்புரை**

இவ்வியல் பெயர்ச் சொல்லுக்கும் வினைச் சொல்லுக்கும் இடைச் சொல்லுக்கும் உரிச்சொல்லுக்கும் பொது இலக்கணங்களை எடுத்துரைக்கின்றது. உருபுகள் அடுக்கிவருதல் இடைப்பிறவரல், முடிக்கும் சொல் நிற்குமிடம் , திணைப்பால் இடப்பொதுமை நீங்கும் நெறி, தொகைநிலைத் தொடர்மொழிகள், வழாநிலை, வழுவமைதி, எண்வகை விடை, அடுக்குத்தொடர், பொருள்கோள்கள் முதலானவைகள் இடம்பெறுகின்றன.

## பயிற்சி வினாக்கள்

### சிறு வினாக்கள்:

1. உருபு எதிர் மறுத்தல் என்றால் என்ன.
2. வினை எதிர் மறுத்தல் என்றால் என்ன.
3. தொகை நிலைத் தொடர்கள் எத்தனை வகைப்படும்.
4. வினைத்தொகை விளக்குக.
5. உவமைத் தொகை விளக்குக.
6. உவம உருபுகள் எவை?
7. அன்மொழித் தொகை விளக்குக.
8. தொகாநிலைத் தொடர்மொழிகள் விளக்குக.
9. திணை வழுவமைதி குறிப்பு வரைக.
10. கால வழுவமைதி குறிப்பு வரைக.
11. அறுவகை வினாக்கள் எவை?
12. எண்வகை விடையைத் தருக.
13. மரபு என்றால் என்ன?
14. மரபு வழுவமைதி குறித்தெழுதுக.
15. பொருள்கோள் என்றால் என்ன? அதன் வகைகளை கூறுக.
16. பூட்டுவிற் பொருள்கோள் விளக்குக.
17. கொண்டு கூட்டு பொருள்கோள் விளக்குக.
18. அடுக்குத் தொடர் குறிப்பு வரைக.

### குறு வினாக்கள்:

1. உருபும் வினையும் அடுக்கி முடிதல் குறித்தெழுதுக.
2. இடைபிற வரல் விளக்கிவுரைக்க
3. தொகை நிலைத் தொடர்கள் குறித்தெழுதுக.
4. தொகாநிலைத் தொடர்மொழி குறித்தெழுதுக.
5. வழுவமைதி அமையும் விதம் குறித்தெழுது.
6. வினாவிற்கேற்ற எண்வகை விடை எங்ஙனம் அமைப்பு முடியும் விளக்குக.
7. தாப்பிசை, அளைமறி பாப்பு பொருள்கோள் குறித்தெழுதுக.

### நெடு வினாக்கள்:

1. தொகைகள் குறித்து கட்டுரை வரைக.
2. வழுவமைதி, வழா நிலை கட்டுரை வரைக.
3. அறுவகை வினை, எண்வகை விடை அமையும் விதம் குறித்து கட்டுரை வரைக.
4. பொருள்கோள் என்றால் என்ன? அதன் வகைகளை விளக்கி வரைக.

# அலகு – 4

# இடையியல்

**பாட நோக்கம்**

இடைச் சொற்களின் வருகையிடங்களை கற்பித்தல். மொழிப்பனுவலைப் பகுப்பாயும் திறனைக் கற்பித்தல்.

**இடைச்சொல்லின் இலக்கணம் கூறும் இயல்**

**இடைச்சொல்லின் பொதுவிலக்கணம்**

**வேற்றுமை வினைசா ரியைஒப் புஉருபுகள்**
**தத்தம் பொருள இசைநிறை அசைநிலை**
**குறிப்புஎன்எண் பகுதியின் தனித்துஇய லின்றிப்**
**பெயரினும் வினையினும் பின்முன் ஓரிடத்து**
**ஒன்றும் பலவும்வந்து ஒன்றுவது இடைச்சொல். (நூற்பா – 420)**

- ஐ முதலிய ஆறு வேற்றுமை உருபுகளும், விகுதிகளும் இடைநிலைகளுமாகிய வினையுருபுகளும்,
- அன், ஆன் முதலிய சாரியையுருபுகளும்,
- போல, புரைய முதலிய உவம உருபுகளும்,
- பிறவாறு தத்தமக்குரிய பொருளை உணர்த்தி வருபவையும்,
- அசைத்தலே பொருளாக நிற்பவையும்,
- வெளிப்படையாக வரும் இவை போலாது ஒலி, அச்சம், விரைவு இவற்றைக் குறிப்பாலுணர்த்தி வருபவையும் என்னும் இவ்வெட்டு வகையினை உடையனவாய் தனித்து நடக்கும் தன்மையில்லாமல்,
- பெயர்ச்சொல்லினிடத்தும், வினைச்சொல்லினிடத்தும் அவற்றின், பின்னேயாயினும், முன்னேயாயினும் வந்து ஒன்றுபட்டு நடக்கும் தன்மையை உடையது இடைச்சொல்.

**இடைச்சொற் பொருள்**

**(எ.கா)**

முற்று – தமிழ்நாட்டு முவரும் வந்தார்.

வினா - குற்றியோ? மகனோ (ஓ)

ஐயம் - குற்றிகொல்லோ மகன்கொல்லோ.

எச்சம் - கொற்றனும் வந்தான்

ஒழியிசை- வருகதில் அம்ம எம் சேரி

தெரிநிலையும், தெளிவும், ஐயமும், முற்றும், எண்ணும், சிறப்பும், எதிர்மறையும், எச்சமும், வினாவும், விருப்பமும், ஒழிந்த சொல்லும், பிரிநிலையும், கழிவும், ஆக்கமும் இவை போல்வன பிறவும் 'தத்தம் பொருள்' என்ற இடைச் சொற்களின் பொருள்களாம். **( நூற்பா – 421)**

**ஏகார இடைச்சொல்**

1.பிரிநிலை – அவருள் இவனே கள்வன்

2. வினா - நீயே கொண்டாய்? நீயா கொண்டாய்

3.எண் - நீலமே, நீரே, தீயே,

4.தோற்றம் - உண்டோ மறுமை

5.இசைநிலை – ஏஎ இவனொருத்தி பேடி.

- பிரிநிலையும், வினாவும், எண்ணும், ஈற்றிலசைத்தலும், தெளிவும், இசைநிறைத்தலும், என்று ஆறு பொருளை ஏகார இடைச்சொல் தரும். **(நூற்பா – 422)**

**ஓகார இடைச்சொல்**

1.ஒழியிசை – படிக்கவோ வந்தாய்

2.வினா - குற்றியோர் மகனோ

3.சிறப்பு - ஓஒ பெரியன், ஓஒ கொடியன்

4.தெரிநிலை – ஆணும் அல்ல பெண்ணும் அல்ல

5.அசைநிலை – காணியவம்மினோ

- ஒழியிசையும், வினாவும், சிறப்பும், எதிர்மறையும், தெரிநிலையும், கழிவும், அசைநிலையும், பிரிநிலையும் என எட்டுப் பொருளை ஓகார இடைச்சொல் தரும். **(நூற்பா – 423)**

**என, என்று என்னும் இடைச்சொற்கள்**

- வினையும், பெயரும், குறிப்பும், இசையும், எண்ணும், பண்பும் ஆகிய ஆறு பொருளிலும் என என்னும் இடைச்சொற் சேர்ந்து வரும் என்று என்னும் இடைச்சொல்லும் அப்படியே ஆறு பொருளிலும் வரும். **(நூற்பா – 424)**

  **(எ.கா)**

  அழுக்காறு என ஒரு பாவி – பெயர்

  ஒல்லென் இசைத்தது - இசை

  வெள்ளென விளர்த்து - பண்பு

**உம்மை இடைச்சொல்**

சிறப்பு – குறவரும் மருளும் குன்று

தெரிநிலை – ஆணும் அன்று பெண்ணும் அன்று

ஐயம் - பத்தாயினும் எட்டாயினும் கொடு, எச்சம் - சாத்தனும் வந்தான்.

- ❖ எதிர்மறையும், சிறப்பும், ஐயமும், எச்சமும், முற்றும், எண்ணும், தெரிநிலையும், ஆக்கமும் ஆகிய எட்டுப் பொருளையும் உம்மை இடைச்சொல் தரும். **(நூற்பா – 425)**

**முற்றும்மைக்கு சிறப்பு விதி**

முற்றுமை ஒரு சில இடத்து எச்சவும்மையும் ஆகும் **(நூற்பா – 426)**

**(எ.கா)**

எல்லோரும் வந்திலர், அவர் பத்துங்கொடார்
(சிலர் வந்தார்)

**எச்சவும்மைக்கு விதி**

எச்சவும்மை எண்ணிடைச்சொல்லாக வந்தால் ஈற்றில் வரும்

**(எ.கா)** “கல்வி செல்வமொழுக்கங் குடிப்பிறப்பும் பெறுவாருமுளர்”

**எண்ணிடைச் சொற்களுக்குரிய இலக்கணம்**

- ❖ பெயர்களிடையே எண்ணிடைச் சொற் தொக்கி நிற்க வரும் செவ்வெண்ணும், பெயரோடு தொகாது வரும் ஏ, எண்ணும், என்றா என்ற எண்ணும், என என்ற எண்ணும் ஆகிய நான்கு எண்களும் தொகைப் பெற்று வரும்.

உம்மை, என்று, என, ஒடு, என்ற நான்கு எண்களும் தொகை பொறாது வரும்.

**(எ.கா)** சாத்தன் கொற்றன் இருவரும் வந்தார்
சாத்தனே கொற்றனே யிருவரும் வந்தார்
சாத்தன் என்றா கொற்றன் என்றா இருவரும் வந்தார்
சாத்தன் எனாக் கொற்றன் எனா இருவரும் வந்தார்

**சில எண்ணிடைச் சொற்களுக்குச் சிறப்பு விதி**

என்று, என, ஒடு என்னும் இம்மூன்று இடைச்சொற்களும் ஓரிடத்து நின்றும், பிரிந்து எண்ணப்படும் பொருள்தோறும் சென்று பொருந்தும்.

**(எ.கா)** “சாத்தனுங் கொற்றனு மிருவரும் வந்தார்

சாத்தனென்று கொற்றனென் றிருவருளர்” - தொகை பெற்றுவந்தன.

சாத்தனும் கொற்றனும் வந்தார்.

நிலனோடு நீரோடு தீயோ------பூதம்” - இவை தொகை பெறாது வந்தன. **(நூற்பா – 429)**

**எண்ணிடைச் சொற்கள் வினையொடும் வருதல்**

எண்ணிடைச் சொற்கள் வினையோடுவரினும் மேற் பெயரோடும் வந்தாற் போதும்.

**(எ.கா)** “வினைபகை யென்றிரண்டின் எச்சம்” (அ) மயிலாடக் குயில்வாட மாமுகில் எழுந்தது-

என்றென்பது வினையென்று, பகையென்று என நின்றவிடத்துப் பிரிந்து பிறவழியும் சென்று பொருந்தியது. **(நூற்பா – 430)**

**தில் என்னும் இடைச்சொல்**

**விழைவே காலம் ஒழியிசை தில்லே. (நூற்பா – 431)**

- ஆசை, காலம், ஒழிந்த சொல்லுமாகிய 3 பொருளையும் தில் என்னும் இடைச் சொல் தரும்.

**(எ.கா)**

“வார்ந்திலங்குவை யெயிற்றுச் சின்மொழி
அரிவையைப் பெறுகதில் யம்ம யானே”
அரிவையைப் பெறுதல் வேட்கையை யுணர்த்தலால் விழைவு.
பெற்றறாங்கு அறிகதில் அம்மவில்வுரே
வருகதில் அம்ம எம் சேரி சேரி

**மன் - இடைச்சொல்**

**மன்னே அசைநிலை ஒழியிசை ஆக்கம்**
**கழிவு மிகுதி நிலைபேறு ஆகும். (நூற்பா – 432)**

- மன் என்னும் இடைச்சொல் அசைநிலை ஒழியிசை, ஆக்கம், கழிவு, மிகுதி, நிலைபேறு ஆகிய பொருளில் வரும்.

**(எ.கா)** “அதுமற் கொண்கன் றேரே”
“கூரியதோர் வாள்மன்”
பண்டு காடு மண்
சிறியகள் பெறினே எமக்கு ஈயும் மன்னே

**மற்று என்னும் இடைச்சொல்**

- மற்று என்ற இடைச்சொல் வினைமாற்று, அசை நிலை, பிறிது பொருளையும் தரும்.

**(எ.கா)**

மற்று அறிவாம் நல்வினை

சூழினுந் தான் முந் துறும்'' – ஊழல்ல தொன்றென்னும் பொருளைத் தருவது.

**மற்றை என்னும் இடைச்சொல்**

- மற்றை என்னும் இடைச்சொல் முன்னே சுட்டிய பொருளை ஒழித்து அதற்கு இனமான பொருளைக் குறிக்கும்,

**(எ.கா)** "இரண்டு நூல்கள் உள்ள இடத்து ஒன்றைக் கொண்டு வர, அது வேண்டாதவன்'' மற்றையது கொண்டுவா''

என்றால் அதற்கு இனமான நூலையே குறித்து நிற்கிறது.

**கொல் என்னும் இடைச்சொல்**

**கொல்லே ஐயம் அசைநிலைக் கூற்றே. (நூற்பா – 435)**

- கொல் என்னும் இடைச்சொல் ஐயப்பொருளையும் அசைநிலைப் பொருளையும் தரும்.

**(எ.கா)** இவ்வுருக் குற்றிகொல் மகன்கொல் - குற்றியோ மகனோ என்னும் பொருளைத் தருதலால் ஐயம்.

ஆசைநிலை – கற்றதனால் ஆய பயன் என் கொல்?

**ஓடு, தெய்ய - இடைச்சொல்**

ஓடு. தெய்ய என்னும் இரண்டு சொல்லும் இசை நிறைத்தற் பொருளைத் தரும்.

**(எ.கா)**

விதைக்குறு வட்டீ போ தொடு பொதுள

**செல்லேன் தெய்ய நின்னொடு பெயர்த்தே (நூற்பா – 437)**

அந்தில், ஆங்கு என்னும் இரண்டு இடைச்சொற்களும் அசைநிலை, இடப்பொருளில் வரும்.

**(எ.கா)**

அந்தில் - அந்தில் கழவினன் கச்சினன்

ஆங்கு – ஆங்க அத்திறனல்ல யாங்கழற

**அம்ம இடைச்சொல்**

**“அம்ம வுரையசை கேண்மின் என்றாகும்” (நூற்பா – 438)**

❖ அம்ம என்ற சொல் உரையசைப் பொருளையும், ஒன்று சொல்வேன் கேளுங்கள் என்ற ஏவற பொருளையும் தரும்.

**(எ.கா)** “அம்ம வாழி தோழி”

ஒன்று சொல்வேன் கேள் என்னும் ஏவற் பொருளில் வந்தது.

**வியங்கோள் அசை**

மா என்னும் சொல் வியங்கோள் இடத்து வரும் அசைச் சொல்லாகும்.

**(எ.கா)** “உப்பின்று – புற்கை யுண்கமா கொற்கை யோனே”

மா என்னும் அசைச்சொல் உண்க என்னும் வியங்கோள் வினையை அடுத்து வந்தது.

**முன்னிலை அசைச்சொல்**

“மியாயிக மோமதி யத்தை யித்தை
வாழிய மாளவீ யாழமுன் னிலையசை” **(நூற்பா – 440)**

மியா, இக, மோ, மதி, அத்தை, இத்தை, வாழிய, மாள, ஈ, யாழ என்னும் பத்து இடைச் சொற்களும் முன்னிலை இடத்து வரும் அசைச் சொற்களாம்.

**(எ.கா)** மியா - சிலையன் செழுந்தலையன் கேண்மியா”

இக - தண்டுரையூர காண்மதி வெனவே”

மதி - சென்மதி பெரும

வாழிய - வாழிய வாவா

அத்தை- சொல்லியரத்தை

இத்தை – நீஒன்று பாடித்தை

ஈ - சென்றீபெரும

மோ - கண்டது மொழிமோ

**எல்லா இடத்தும் வரும் அசைச் சொல்**

“யாகா பிறபிறக் கரோபோ மாதிகுஞ்
சின்குரை யோரும் போலுமிருந்திட்
டன்றாந் தாந்தான் கின்று நின்றசை மொழி”

**சொற்கள்**

**எ.கா**

1. யா - யா பன்னிருவர் மாணாக்கர் அகத்தியனார்க்கு
2. கா - புறநிழற் பட்டாளோ இவள் இவட் காண்டிகா்
3. பிற - ஆயனை யல்ல பிற
4. பிறக்கு - பிறக்கு அதனுள் செல்லான் பெருந்தவம் பட்டான்
5. அரோ - நோதக விருங்குயில் ஆலுமரோ
6. போ - பிரியின் வாழா தென்போ
7. மாது - விளிந்தன்று மாதவா்க் தெளிந்தவென்னெஞ்சே
8. இதும் - காண்டிகு மல்லமோ கொண்க
9. சின் - கேட்டிசின்
10. போலும் - மகிழ்ந்தனை போலும்
11. இருந்து – எழுந்திருந்ததேன்
12. ஆம் - பணியுமாம் என்றும்
13. தாம் - நீா் தாம்

குரை, ஓரும், போலும், சின் ………………

## தொகுப்புரை

இடைச்சொற்களின் பொதுவிலக்கணம் எடுத்தியம்பப்பட்டுள்ளது. இடைச் சொற்களின் பொருளும் விளக்கப்படுகின்றன. எண்ணிடைச் சொற்களின் இலக்கணம் விளம்பப்படுகின்றது. சில சிறப்பு விதிகளும் சிலவினையொடு வருவனவும் கூறப்படுகின்றன. எல்லா இடத்திலும் வரும் அசைச் சொற்கள் உணர்த்தப்படுகின்றன. இவ்வாறு இடையியலில் பல்வேறு செய்திகள் எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

## பயிற்சி வினாக்கள்

### சிறு வினாக்கள்

1. இடைச்சொல்லாவது எது?
2. ஏகார இடைச்சொல் தரும் பொருள் குறித்தெழுதுக.
3. உம்மை இடைச்சொல் குறிப்பு வரைக.
4. தில் என்னும் இடைச்சொல் தரும் பொருள் யாது?
5. கொல் என்னும் இடைச்சொல் தரும் பொருள் யாது?
6. வியங்கோள் அசைச்சொல் யாது.
7. முன்னிலை அசைச்சொல் குறிப்பு வரைக.

### குறு வினாக்கள்

1. இடைச்சொல்லின் பொது இலக்கணம் குறித்தெழுதுக.
2. எண்ணிடைச் சொற்களுக்குரிய இலக்கணம் குறித்தெழுதுக.
3. அசைச்சொற்கள் குறித்து விளக்குக.

### நெடு வினாக்கள்

1. இடைச்சொல் அமையும் விதம் குறித்து இடையியல் வாயிலாக கட்டுரைக்க.

# அலகு - 5.

## உரியியல்

**பாட நோக்கம்**

உரியியல் கோட்பாட்டைக் கூறுதல். இடைக்கால இலக்கியங்களின் வழி மொழி அமைப்பைப் புரியவைத்தல்.

**உரிச்சொற்களின் இலக்கணங்களைக் கூறும் இயல்**

**உரிச்சொல்லின் பொது இலக்கணம்**

**பல்வகைப் பண்பும் பகர்பெய ராகி**
**ஒருகுணம் பலகுணம் தழுவிப் பெயர்வினை**
**ஒருவா செய்யுட்கு உரியன உரிச்சொல். (நூற்பா – 442)**

- ❖ இசை, குறிப்பு, பண்பு ஆகிய பல்வேறு வகைப்பட்ட பண்புகளையும் உணர்த்தும் பெயராகி, அவ்வாறு உணர்த்தும்போது ஒரு சொல் ஒரு குணத்தையுணர்த்துவனவும், பல குணங்களை உணர்த்துவனமாய், பெயர் வினைகளைவிட்டு நீங்காது, செய்யுளுக்கு உரியவையாய்ப் பொருட்கு உரிமை பூண்டு நிற்பவை உரிச்சொற்களாகும்.

(பெயர், வினைகளின் பண்பை உணர்த்தி அவற்றிற்கு உரிமை பூண்டு நிற்பன உரிச்சொல் எனப்படும்)

**பண்பு**

**உயிர்உயிர் அல்லதாம் பொருட்குணம் பண்பே. (நூற்பா – 443)**

- ❖ உயிராகிய பொருளும், உயிரல்லாத பொருளும் என இருவகையுள் அடங்கும்.

**உயிர்ப்பொருள்**

**மெய்ந்நா மூக்கு நாட்டம் செவிகளின்**
**ஒன்றுமுத லாக்கீழ்க் கொண்டுமேல் உணர்தலின்**
**ஓரறிவு ஆதியா உயிர்ஐந்து ஆகும். (நூற்பா – 444)**

- ❖ மெய், நாக்கு, மூக்கு, கண், காது ஆகிய 5ம் பொறிகளாலும் உற்று உணர்ச்சி, சுவை, நாற்றம், ஒளி, ஓசை என்பதை உணரும் ஓரறிவுயிர் முதல் 5 அறிவுயிர் வரை 5 வகைப்படும்.

**ஓரறிவுயிர்**

**"புல்மர முதலஉற்று அறியும்ஓ ரறிவுயிர்" (நூற்பா – 445)**

❖ புல், மரம் முதலியவை மெய்யால் தொடுதல் உணர்வை அறியும் உயிர் ஓரறிவுயிர்களாகும்.

**(எ.கா)** செடி. கொடி,புதல்

**ஈரறிவுயிர்**

**"முரள்நந் துஆதிநா வறிவொடு ஈரறிஉயிா". (நூற்பா – 446)**

❖ இப்பி, சங்கு முதலியவை மெய்யறிவே அன்றி, நாவால் சுவையை அறியும் அறிவுடைய ஈரறிவு உயிர்களாகும்.
**(எ.கா)** கிளிஞ்சல்

**மூவறிவுயிர்**

**"சிதல் எறும்பு ஆதிமூக்க றிவின்மூ வறிவுயிர்". (நூற்பா – 447)**

❖ மேலே கூறிய இரண்டறிவுகளுடன் மூக்கால் நாற்றத்தை அறியும் அறிவுடையன மூவறிவுயிராகும்

**எ.கா:** கறையான், எறும்பு, ஈயல், அட்டை

**நாலறிவுயிர்**

**தும்பிவண்டு ஆதிகண் ணறிவின்நா லறிவுஉயிர். (நூற்பா – 448)**

❖ மூன்றறிவு உயிர்களே அன்றி, கண்ணால் உருவத்தை அறியும் அறிவுடைன நாலறிவுயிராகும்

**(எ.கா)** நண்டு. தேனீ, வண்டு

**ஐயறிவுயிர்**

**வானவர் மக்கள் நரகர் விலங்குபுள்**
**ஆதிசெவி அறிவோடு ஐயறி வுஉயிரே. (நூற்பா – 449)**

❖ தேவர், மனிதர், நரகர்,விலங்குகள், பறவைகள் முதலியவை மேற்கூறிய நான்கு அறிவுகளோடு செவியால் ஓசையை அறியும் அறிவோடு ஐந்து அறிவுயிர்களாகும்.

**உயிரல்லாத பொருள்**

❖ அறிவின் நிறைவாகிய உயிரொன்றுமே அன்றி, உடம்பு முதலாகிய உலகத்துப் பொருள்களெல்லாம் உயிரில்லாத பொருள்களாகும்.

**உயிர்ப்பொருள்களின் குணப்பண்பு**

- அறிவு, அருள், ஆசை, அச்சம், மானம், நிறை, பொறை, ஓர்ப்பு, கடைப்பிடி, மையல், நினைவு, வெறுப்பு, உவப்பு, இரக்கம், நாண், வெகுளி, துணிவு, அழுக்காறு, அன்பு, எளிமை, எய்த்தல், துன்பம், இன்பம், இளமை, மூப்பு, இகல், வென்றி, பொச்சாப்பு, ஊக்கம், மறம், மதம், மறவி, என்னும் 32-ம் இவை போல்வன பிறவும் உடம்போடு கூடிய உயிர்களினுடைய குணங்கள் ஆகும். துய்த்தல், துஞ்சல், தொழுதல், அணிதல், உய்த்தல் என்னும் ஐந்தும் இவை போல்வன பிறவும் உடம்போடு கூடிய உயிர்கிளனுடைய தொழிற் குணங்கள் ஆகும். **(நூற்பா - 452)**

**(எ.கா)**

1.ஓர்ப்பு – ஆராய்ந்து தெளிதல்

2.கடைப்பிடி – மறவாமல் உறுதியாகப் பற்றுதல்

3.மறவி - மறந்து செய்யும் குற்றம்

4.பொச்சாப்பு – மறதி

**உயிரல் பொருள்களின் குணப்பண்பு**

வட்டம், இருகோணம், முக்கோணம், சதுரம் முதலிய பலவகை வடிவுகளும், நறுநாற்றம், தீ நாற்றம், என்னும் இருவகை நாற்றமும், வெண்மை, செம்மை, கருமை, பொன்மை, பசுமை என்ற 5 வண்ணங்களும், கைப்பு, புளிப்பு, துவர்ப்பு, உவர்ப்பு, கார்ப்பு, இனிப்பு என்ற அறு சுவைகளும், வெம்மை, தண்மை, மென்மை, வன்மை, நொய்மை, சீர்மை, இழுமெனல், சருச்சரை என்னும் எட்டு ஊறுகளும் உயிரல்லாத பொருள்களினுடைய குணங்கள் ஆகும்.

**இருபொருள்களுக்கும் பொதுவான தொழிற்பண்பு**

தோன்றல், மறைதல், வளர்தல், சுருங்கல், நீங்கல், அடைதல், நடுங்கல், இசைத்தல், ஈதல் என்ற 9ம், இவை போன்ற பிறவும் உயிர்பொருளும், உயிரற்ற பொருளுமாகிய இரண்டிற்கும் பொதுவாகிய தொழிற் குணங்கள் ஆகும்.

**ஒரு குணம் தழுவிய உரிச்சொல்**

சால என்பது முதலாகிய இவ் ஆறு உரிச்சொற்களும் மிகுதியாகிய ஒரு குணத்தை உணர்த்தும் உரிச்சொற்கள் ஆகும். **(நூற்பா – 456)**

**(எ.கா)**

நனி – நனி வருந்திணை

கூர் - களி கூர் மனம்

சால - பருவத்து சாலப் பல கொலென்று எண்ணி - சாலப்புலவர்

உறு - உறுவளி துரக்கு முயர்சினை மாவின் - உறுபுகழ்

தவ - தவச்செய் நாட்டார் ஆயினும். - தவப்பல

**பல குணம் தழுவிய உரிச்சொல்**

கடி என்னும் உரிச்சொல் காவலும், கூர்மையும், மணமும், விளக்கமும், அச்சமும், சிறப்பும், விரைவும், மிகுதியும், புதுமையும், ஒலித்தலும், நீக்கலும், மணமும், கரிப்பும் ஆகி 13 குணங்களிலும் வரும். **(நூற்பா – 457)**

**(எ.கா)**

1. கடிநகர் - காப்பு
2. கடிவேல் - கூர்மை
3. கடிமாலை சூடி - விரைவு
4. கடிஅரசமகளிர் - அச்சம்
5. சிறப்பு - கடிஅரண்
6. கடிமிளகு - கரிப்பு

**ஒரு குணம் தழுவிய உரிச்சொல்**

மாற்றம் முதலாகிய பதினாறும் சொல் என்னும் ஒரு குணத்தை உணர்த்தும் உரிச்சொற்கள் ஆகும்.

**(எ.கா)**

1. மாற்றம் - கோவலர் வாய்மாற்றம் - வாய்மாற்றம்
2. நுவற்சி - இரு பிறப்பாளர் பொழுது அறிந்து நுவல் - அறிந்து நுவல
3. செப்பு - தெருண்டாரவை செப்பலுற்றேன் - செப்பலுற்றேன்
4. உரை - உரைப்பார் உரைப்பவை எல்லாம் - உரைப்பவை
5. இயம்பல் - இயம்பலுற்றேன் - இயம்பலுற்றேன்

முழக்கு முதலாகிய 22-ம் இவை போன்ற பிறவும் ஓசை என்னும் ஒரு கணத்தை உணர்த்தும் உரிச்சொற்கள் ஆகும்.

**(எ.கா)**

1. முழக்கு - முழங்குகடல்
2. கலி - கலிகெழு மூதூர்
3. இசை - பறையிசை அருவி
4. ஒலி - ஒலி புனல் ஊரன்
5. இமிழ் - இமிழ்கடல்
6. கௌவை - கௌவை நீர்வேலி

**தொகுப்புரை**

பெயர், வினைகளின் பண்பை உணர்த்தி அவற்றிற்கு உரிமை பூண்டு நிற்பன உரிச்சொற்கள். உரிச்சொற்கள் பொதுவிலக்கணம் உரைக்கப்படுகின்றது. உயிர் பொருட்கள், உயிரல்லாப் பொருட்களின் குணவியல்கள் சுட்டப்படுகின்றன, ஒரு குணம், பல குணம் தழுவிய உரிச்சொற்கள் விளக்கம்பெறுகின்றன.

## பயிற்சி வினாக்கள்

### சிறு வினாக்கள்:

1. உரிச்சொல் என்றால் என்ன?
2. ஓரறிவுயிர் விளக்குக.
3. ஈரறிவுயிர் விளக்குக.
4. ஐந்தறிவு உயிர் உடைய உயிர்கள் குறித்தெழுதுக.
5. ஒரு குணம் தழுவிய உயிர்சொல் எவை.

### குறு வினாக்கள்

1. உயிர் பொருள்களின் குணப்பண்பு குறிப்பு வரைக.
2. உயிரல்லா பொருள்களின் குணப்பண்பு குறிப்பு வரைக.

### நெடு வினாக்கள்

1. உரிச்சொல்லின் இலக்கணங்களை உரியியல் வாயிலாக விளக்கி கட்டுரை வரைக.
2. பல குணம் தழுவிய ஓர் உரிச்சொல் பற்றி விளக்குக?
3. ஏழு குணம் தழுவிய பல உரிச்சொற்களை வகைப்படுத்துக?

## முடிவுரை

ஒரு மொழியினது தனித்தன்மைகளையும் சிறப்பு இயல்புகளையும் நன்கு தெரிவிப்பவை, அம்மொழியில் காணலாகும் சொல்லாகும். மனித இனத்தை மற்ற இனங்களிலிருந்து வேறுபடுத்திக் காட்டுவது சொல். இது வெறும் வாயிலிருந்து வெளிப்படுகின்ற ஓசை அன்று. மக்கள் வெளிப்படுத்தும் சொல் ஒலிகள் இருதிணைப் பொருள்களையும் அவற்றின் தன்மை, பண்பு, செயல் போன்றவைகளையும் உணர்த்தி நிற்கும். சொற்கள் அறிவு உணர்வுகளையும் தோற்றுவிக்கும் ஆற்றல் வாய்ந்தவை. இத்தகு சிறப்பும் ஆற்றலும் முக்கியத்துவமும் பெற்ற சொல்லுக்குப் பலர் பல நிலைகளில் இலக்கணம் வரைந்துள்ளனர். அவர்களுள் நன்னூல் இயற்றிய பவணந்தி முனிவரும் ஒருவராவார். இவர் பெயர், வினை, பொது, இடை, உரி என இயல்களைப் பிரித்து பெயர் பற்றியப் பல்வேறு கருத்துகளை விளக்குகின்றார்.

**பார்வை நூல்கள்**

1. நன்னூல், பழனியப்பா பிரதர்ஸ், சென்னை, 2018.
2. நன்னூல் காண்டிகை உரை (ஆறுமுகநாவலர்) - சொல்லதிகாரம்
3. நன்னூல் மூலமும் உரையும், புலவர் கோவில்வபதி, பழனியப்பா பிரதர்ஸ், சென்னை 14
4. நன்னூல் உரைவளம் (22 தொகுதிகள்), முனைவர் இராகண்ணன், உலகத் தமிழ ஆராய்ச்சி நிறுவனம் தரமணி சென்னை
5. பவணந்தி முனிவரின், நன்னூல் - சொல்லதிகாரம் கண்டிகை உரை, முனைவர் திருஞானசம்பந்தம், கதிர் பதிப்பகம், திருவையாறு

**இணையதள முகவரி**

- Tamil Heritage Foundation- www.tamilheritage.org <http://www.tamilheritage.org>
- Tamil virtual University Library- www.tamilvu.org/ library http://www.virtualvu.org/library
- Project Madurai - www.projectmadurai.org.
- Chennai Library- www.chennailibrary.com <http://www.chennailibrary.com>.
- Tamil Universal Digital Library- www.ulib.prg <http://www.ulib.prg>.
- Tamil E-Books Downloads- tamilebooksdownloads. blogspot.com
- Tamil Books on line- books.tamil cube.com
- Catalogue of the Tamil books in the Library of British Congress archive.org
- Tamil novels on line - books.tamilcube.com